**சு.து.ந.க.எண். NULM/SUH/4365/2014**

**தீர்மான எண்.781/2019** **நாள்:04-12-2019**

**பொது சுகாதாரத்துறை - வீடற்றோருக்கான காப்பகம் - புதிய காப்பகங்களுக்கு தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்வு செய்ய -அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1 முதல் 15 மண்டலங்களுக்குட்பட்ட பகுதிகளில் 2012ம் ஆண்டு முதல் 38 வீடற்றோருக்கான காப்பகங்கள் மற்றும் 13 சிறப்பு காப்பகங்கள் நடைபெற்று வருகின்றன.

கூடுதலாக 33 புதிய காப்பகங்கள் ஏற்படுத்துவதற்கு, வீடற்றோருக்கான காப்பகங்கள் நடத்த விருப்பம் தெரிவிக்கும் புதிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்காக தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்யப்பட்டன.

இதில் தொண்டு நிறுவனங்களின் முன்அனுபவம், காப்பக மேலாண்மை, நன்கொடை மேலாண்மை, கடந்த மூன்று ஆண்டு கால நிதி மேலாண்மை மற்றும் அரசு திட்டங்களை செயல்படுத்திய முன் அனுபவம் ஆகியவை அடங்கிய சுயவிவர விண்ணப்பங்கள் தொண்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டன.

துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 20/09/2018 நாளிட்ட உத்தரவின்படி 15 தொண்டு நிறுவனங்களின் இயக்குநர்கள் கூட்டம் நடைப்பெற்றது. அக்கூட்டத்தில் காப்பகங்கள் நடத்துவதற்குரிய தகுதிகள் மற்றும் திறன் பற்றி தொண்டு நிறுவனங்கள் எடுத்துரைத்தனர். அந்த கூட்டத்தின் அடிப்படையில் 12 தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன.

மேலும் துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் உத்தரவின்படி, 5வது திட்ட ஒப்புதல் குழு கூட்டத்தில் (5th PSC Meeting, 13.11.2018) தேர்வு செய்யப்பட்ட 12 தொண்டு நிறுவனங்களின் விரிவான திட்ட அறிக்கை (DPR) சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தொண்டு நிறுவனங்களின் விவரங்கள் கீழ்க்கண்டவாறு,

| S. No | Name of the NGO | Address of the NGO | Reg.No/ Year | Email - ID & Contact Number |
|---|---|---|---|---|
| 1 | CHEER | 21/C, Taylors Road, Kilpauk, Chennai-600010 | 225/2010 | 9710006555 helpdesk@cheerngo.com |
| 2 | Sivasakthi Muthiyor Illam | No: 12/37, Apparsamy Koil Street Entrance Esanimoorthi Koil, 1st Lane, Thiruvottiyur, Chennai-19. | 661/ 2012 | 25730947, 9444033391, 9444823821 |
| 3 | Bill Grundy Self Reliance Trust | No: 16, Magazinepuram, S.M. Nagar Main Road, Vyasarpady, Chennai-600039. | 1139/ 92 | 9840221156, 9840618471 bgsrtrust@gmail.com |
| 4 | Tribal Society | Regd Off: Narikkuravar Colony, Koliyanur 'X' Road (Post), Villupuram District – 605 103. Admn Off: No. 6, 1st Street, Narikkuravar Colony, Gandhi Nagar, Ramanatham, Thozhudhur (Post), Cuddalore District – 606 303. | 41/2003 | 94426 94649, 95972 45992, 94422 94649. tribalsociety@yahoo.co.in |
| 5 | Gold Heart Foundations - (Social Welfare & Rehabilitation centre) | No:13, Saravanan Street, Lakshmi Amman Nagar, Erukkencherry, Chennai- 600118. | 1847/ 2009 | 9884629206, 9940020019, 9884520601, 9092652227 goldheartfoundation@gmail.com |

**சு.து.ந.க.எண். NULM/SUH/4365/2014**

| | | | | |
|---|---|---|---|---|
| 6 | Arockyaa Charitable Trust | No1/83, Ubagaranatha Street, Silukkuvarpatti Post, Nilakkottai Taluk, Dindugal - 624202 | 872/ 2008 | 9751975034 actindia1936@yahoo.com |
| 7 | Shine Child And Women Welfare Trust | No.31/2 Srinivasa iyar Street, West Mamballam, Chennai - 600033 | 1897/2009 | 9087912410,7871237182 shinescwwt@gmail.com scwwtshine@gmail.com |
| 8 | JEEVA JYOTHI | No.17A, IInd Cross Street, K.K.R. Nagar, Madhavaram, Chennai-600 060. | 1843/1994 | 044-25580923, 9444287738 jeevajyothichennai@gmail.com |
| 9 | PEOPLE SOCIAL WELFARE ASSOCIATION | No-18, 94th Street, 15th Sector, k.k.Nagar, Chennai-78. | 68/2001 | 99624084449, 9840978470 peswachennai@gmail.com |
| 10 | Society for Education and Economical Development of Poor ( SEED) | No.32/5, Golden Complex, M.K.B. Nagar, Chennai – 600 039. | 29/2000 | 044-26730667, 9445775751 seed_victor@yahoo.co.in |
| 11 | Annai Anbalayaa Trust | Plot No. 67, Sri Sai Baba Nagar,Attipattu Village, NCTPS Post, Chennai – 600 120. | 1228/06 | 9841840841, 7448515664 annaianbalaya@gmail.com |
| 12 | Sirpi Society | No:8, 3rd Line Beach , Clive Battery, Chennai – 600 001. | 09/2004 | 044 25265173 sirpimc2013@gmail.com |

எனவே,

1. மேற்கண்ட 12 தொண்டு நிறுவனங்களை தேர்ந்து எடுக்க அனுமதியும்,
2. இந்த தொண்டு நிறுவனங்களை கொண்டு வீடற்றோர்க்கான காப்பகங்களை பராமரிப்பதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/3141-15/2018**

**தீர்மான எண்.782/2019** **நாள்:04-12-2019**

**மழைநீர் வடிகால் துறை- சீர்மிகு நகர வளர்ச்சி நிதியின் கீழ் மண்டலம்-9, கோட்டம் 125ல் உள்ள காரணீஸ்வரர் பக்கோடா சாலையில் விடுபட்ட மழைநீர் வடிகால் இணைப்பு அமைக்கும் பணிக்கு - ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைபுள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணியினை அளிக்க அனுமதி.**

சிறப்பு அதிகாரி (மன்றம்) தீர்மான எண்.728/2018 நாள். 05.09.2018 மற்றும் சீர்மிகு நகர உயர்மட்ட குழு தீர்மான நாள்.17.10.2018ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதியில் சீர்மிகு நகர பணி திட்டத்தின்கீழ் மண்டலம்-4, 5, 6, 9, 10, 12,13,14 மற்றும் 15ல் உள்ள பல்வேறு சாலைகளில் / தெருக்களில் விடுபட்ட மழைநீர் வடிகால்வாய் இணைப்பு அமைக்கும் பணிகளுக்கு ரூ.150.00 கோடி மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கியுள்ளது.

இதன்படி, 22 எண்ணிக்கையிலான மழைநீர் வடிகால் கட்டும் பணிக்கு பணி ஆணை வழங்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. ஒப்பம் பெறப்படாத சிப்பம் 15ற்கு பணிகள் மேற்கொள்ள தகுதி வாய்ந்த ஒப்பங்கள் கோரி 26.09.2019 அன்று ஒப்ப அறிவிப்பு ஆங்கில நாளிதழான “நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ்” மற்றும் தமிழ் நாளிதழான “தி இந்து” நாளிதழ்களிலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது. மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 04.10.2019 அன்று பெறப்பட்ட மூன்று ஒப்பங்களில் ஒருவரின் பிணைவைப்புத்தொகை பெறப்படவில்லை. எனவே கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்களின் ஆவணங்கள் அவர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது, குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு:

**அட்டவணை-1**

| வ. எண். | சிப்பம் எண். | குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | பணியின் அலுவலக தொகை 2019-20 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் | |
|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | |
| 01 | 15 | ஸ்ரீ விக்னேஷ் அசோசியட்ஸ் | 13644097.45 | 15143583.76 | (+)10.99 % | L1 |
| 02 | | திரு.ஆர்.முகிலன் | 13644097.45 | 15567915.19 | (+)14.10 % | L 2 |
| 03 | | திரு.ஏ.அசோக் குமார் | பிணை வைப்புத் தொகை பெறப்படவில்லை | | | |

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையானது 2019-20ம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) விலை விவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட அதிகம் ஆகும்.

எனவே, குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரரிடம் இரண்டு முறை விலைக்குறைப்பு பேச்சுவார்த்தை நடத்தப்பட்டதில், ஒப்பந்ததாரர் தனது இறுதி விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார். அந்த விலைக்குறைப்பு விவரம் பின்வருமாறு:-

**ம.நீ.வ.து.ந.க.எண்.பி3/3141-15/2018**

**அட்டவணை-2**

| வ. எண். | சிப்பம் எண். | குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | பணியின் அலுவலக தொகை 2019-20 ஆண்டு அலுவலக விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (12 சதவீதம் GST சேர்த்து) (ரூபாய்) | ஒப்பந்ததாரர் அளித்த ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 01 | 15 | ஸ்ரீ விக்னேஷ் அசோசியட்ஸ் | 13644097.45 | 14285370.03 | (+)4.70 % |

மேற்கூறப்பட்ட ஒப்பந்ததாரர் பேச்சு வார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதம் 2019-20ஆம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) அலுவலக விலைப்பட்டியலை ஒப்பிடும் போது சற்று கூடுதலாக உள்ளது.

1) இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னனு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும்.
2) இத்திட்டத்தின் மூலம் சென்னை மாநகரில் உள்ள முக்கிய சாலைகளில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி நடைபெறவுள்ளதாலும், அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதால் அலுவலக விலையை விட ஒப்ப விலை அதிகமாக உள்ளது.
3) இவ்வொப்பத் தொகையானது 2019-20ம் ஆண்டின் அலுவலக விலைக்கு (12 சதவீதம் GST சேர்த்து) சற்று அதிகமாக உள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணியை வழங்க 18.11.2019 அன்று நடந்த ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வேண்டி சமர்ப்பிக்கப்பட்டது. அதனை சீரிய கூர்ந்தாய்வுக்குப்பின் ஒப்பங்கள் கூர்ந்தாய்வுக் குழுமம் பரிந்துரை செய்துள்ளது.

இப்பணிக்கு 2019-20ஆம் ஆண்டின் படி தயாரிக்கப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.1,41,90,000/க்கு ஒப்புதல் அளிக்கவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதற்கும் பின்னேற்பு ஒப்புதல் வேண்டப்படுகிறது.

எனவே, மேற்கண்ட அட்டவணை-2ன்படி குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள். ஸ்ரீ விக்னேஷ் அசோசியட்ஸ் மேற்கண்ட பணியினை மேற்கொள்வதற்காக ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்தின் (Tender Scrutinizing Committee) பரிந்துரைக்கப்பட்ட ரூ.14285370.03க்கு ஒப்பத் தொகைக்கு பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதலும், ஒப்பம் கோரப்பட்டதற்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும் பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/30470/2019</u>**

**தீர்மான எண்.783/2019** **நாள்:05-12-2019**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 15.05.2019ஐ மைய நாளாகக் கொண்டு மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கவும் மற்றும் பதவி உயர்வு வழங்கவும் அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில், பொது சுகாதாரத்துறையில் வகுப்பு-2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கு 15.05.2019-ஐ மைய நாளாகக் கொண்டு தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட வேண்டும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | மண்டல சுகாதார அலுவலர், வகுப்பு-2 | | |
| 2. | மையநாள் | 15.05.2019 | | |
| 3. | ஊதிய விகிதம் | பழைய ஊதிய விகிதம் ரூ.15600-39100 + தர ஊதியம் 5700 (புதிய ஊதிய விகிதம் ரூ.56900-180500, level-23) | | |
| 4. | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **<u>மருத்துவ அலுவலர்</u>**<br>By promotion from the Categories of Medical Officer (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) **or **Medical Officer in Family Welfare Department.** | | |
| 5. | காலிப்பணியிட விவரம் | 1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் | - | 17 |
| | | மொத்தம் | - | 17 |
| | | அ) தற்காலிக பணியிடம் | - | - |
| | | ஆ) நிரந்தர பணியிடம் | - | 17 |
| | | 2. தற்போது பணியில் உள்ளவர்கள் | - | 6 |
| | | 3. மைய நாளுக்கு பின்பு/முன்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 11 |
| | | 4. அரசாணை எண்.103, பணியாளர் (ம) நிர்வாகச் சீர்திருத்த (எஸ்) துணை, நாள்.09.10.2014ன்படி, எதிர்பாராமல் ஏற்படவுள்ள காலிப்பணியிடம் | - | 4 |
| | | 5. மொத்த காலிப்பணியிடம் | - | 15 |
| 5. | வளர் நிலை பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **<u>மருத்துவ அலுவலர்</u>**<br>(i) MBBS Degree with Diploma in Public Health<br>(ii) A pass in Account Test for Executive Officers. | | |
| 6. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | 2015-2016 ஆம் ஆண்டிலிருந்து தகுதியான நபர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்படவில்லை. | | |

அரசு ஆணை (மாந) எண்.129, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறை, நாள்.15.10.2019ல் மண்டல சுகாதார அலுவலர் பணிவிதிகளில் பதவி உயர்விற்கான பணிவிதிகளில் உள்ள பிரிவுகளில் கீழ்கண்டவாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

***<u>Amendments</u>***

*In the said rules, -*

1) *for the expression "Health Officer", "Additional Health Officer" and "Assistant Health Officer" wherever they occur, the expression "City Health Officer", "Addition City Health officer" and " Zonal Health Officer" shall, respectively, be substituted;*

2) *"in rule 3, in sub-rule (1), in "THE TABLE", against the entry "Category-1 Zonal Health Officer" under Class-II in column (1), as so substituted, for item (ii) in column (2) thereof, the following item shall be substituted, namely:-*

**பொ.து.ந.க.எண்.ஈ2/30470/2019**

"(ii) By promotion from the categories of Medical Officer (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) or ****Medical officer in Family Welfare Department".**

இதில், தற்போது பணியில் உள்ள 6 மண்டல சுகாதார அலுவலர்களில், மருத்துவர். எஸ்.பிரியதர்ஷினி, அவர்கள் 06.06.2016 முதல் தற்போது வரை பணிக்கு வராமலும், மருத்துவர்.கே.மார்கரேட் புனிதா, அவர்கள் மார்ச்-2015 முதல் பணிக்கு வராமல் இருந்து, தனியரின் வேண்டுகோளின்படி, மீண்டும் மண்டலம்-15ல் 07.08.2018 நாளிட்ட ஆணையர் அவர்களின் ஆணை மூலம் பணியமர்த்தப்பட்டும் இதுநாள் வரை பணியில் சேரவில்லை. மேற்காண் அலுவலர்கள் இருவர் மீதும் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் மருத்துவ சேவைகள் பணி விதி, 1969-ன்படி மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கான நியமன முறை மற்றும் தகுதிகள் பின்வருமாறு:

| Name of the Post / Scale of Pay | Method of Appointment | Qualification |
|---|---|---|
| **Zonal Health Officer** | (i) By direct recruitment or<br><br>**(ii) By promotion from the Categories of Medical Officer (Allopathy) or Medical Officer (Tuberculosis Clinic) or **Medical officer in Family Welfare Department.**<br><br>(G.O.Ms.No.129, Municipal Administration and Water Supply (MC-3) Department, dated:15.10.2019)<br>(iii)By appointment from the category of Health Officer in Tamilnadu Public Health Service or from State service on deputation (G.O.Ms. No.91, Dt.28.05.1998) | (i) MBBS Degree with Diploma in Public Health<br>(ii) A pass in Account Test for Executive Officers. |

பொதுத்துறையின் 29.10.2019 நாளிட்ட சுற்றறிக்கையில் மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதியான நபர்களின் விவரங்கள் கோரப்பட்டது.

பெருநகர மருத்துவ அலுவலர் (பொ) அவர்களின் 21.11.2019 நாளிட்ட கடிதத்தில், மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களில் தகுதி வாய்ந்த நபர்களின் விவரங்கள் கோரப்பட்டு, 4 மருத்துவ அலுவலர்கள் பதவி உயர்வுக்கு விருப்பக் கடிதம் அளித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், மாநகர நல அலுவலர் (பொ) அவர்களின் 26.11.2019 நாளிட்ட கடிதத்தில், பொது சுகாதாரத்துறையில் பணிபுரியும் மருத்துவ அலுவலர்களில் தகுதி வாய்ந்த 2 மருத்துவ அலுவலர்கள் விவரங்கள் அளிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவ சேவைகள் துறை மற்றும் பொது சுகாதாரத்துறையில் இருந்து பெறப்பட்டுள்ள மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு தகுதிவாய்ந்த ஊட்டப்பதவியில் உள்ள மருத்துவ அலுவலர்களின் விவரங்கள் பின்வருமாறு:

**பொ.சு.ந.க.எண்.ஈ2/30470/2019**

| வ. எண். | பெயர், பதவி மற்றும் பணிபுரியும் மண்டலம் (ம) துறை | தற்போதுள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள். | குறிப்பு |
|---|---|---|---|
| 1. | டாக்டர்.என்.கோமதி, மருத்துவ அலுவலர், இராயபுரம் மருத்துவ மண்டலம்-5. | 08.01.1992 | முழுத் தகுதி பெற்று விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதிபெற்றுள்ளார். |
| 2. | டாக்டர்.எ.பிரபாவதி, மருத்துவ அலுவலர், மண்டலம்-6 பொது சுகாதாரத்துறை | 19.04.1995 | **முழுத் தகுதி பெற்று விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதிபெற்றுள்ளார்.** (மேலும், தனியர் ஏற்கனவே 09.07.1999 அன்று மண்டல நல அலுவலர் பதவியில் பணியமர்வு செய்யப்பட்டார், தற்காலிகமாக மண்டல நல அலுவலர் பதவிக்கு விருப்பமின்மை தெரிவித்தால் (மன்றத் தீர்மான எண்.167/2015, நாள்.28.04.2015ன்படி) 19.05.2015 நாளிட்ட ஆணையின்படி பதவியிறக்கம் செய்து ஆணையிடப்பட்டது. |
| 3. | டாக்டர்.ஜி.ஷீலா, மருத்துவ அலுவலர், தண்டையார்பேட்டை மருத்துவ மண்டலம்-4. | 06.10.2007 | முழுத் தகுதி பெற்று விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதிபெற்றுள்ளார். |
| 4. | டாக்டர்.பி.ஆஷாலதா, மருத்துவ அலுவலர், தேனாம்பேட்டை மருத்துவ மண்டலம்-9. | 14.11.2007 | முழுத் தகுதி பெற்று விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதிபெற்றுள்ளார். |
| 5. | டாக்டர்.என்.இளஞ்செழியன், மருத்துவ அலுவலர், மண்டலம்-1 பொது சுகாதாரத்துறை | 03.12.2007 | தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 பிரிவு 10 (பி)-ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு நிலுவையில் உள்ளது. |
| 6. | டாக்டர்.டி.பிரியதர்ஷினி, மருத்துவ அலுவலர், திரு.வி.க.நகர் மருத்துவ மண்டலம்-6. | 18.07.2008 | முழுத் தகுதி பெற்று விதிகளின்படி தெரிவுப்பட்டியலுக்கு தகுதிபெற்றுள்ளார். |

மேலும், மாநகர நல அலுவலர் (பொ) அவர்களின் 26.11.2019 நாளிட்ட கடிதத்தில், இதர மண்டலங்களான 2,3,4,5,7,8,9,10,11,12,13,14,15 மற்றும் தொற்றுநோய் மருத்துவமனையில் பெறப்பட்டுள்ள இன்மை அறிக்கைகளையும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணியமைப்பில் மண்டல சுகாதார அலுவலர் பதவி வகுப்பு-2ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவிக்கான தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் வழங்கி பணிநியமனம் செய்யும் அதிகார பங்களிப்பு பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.ஈ2/30470/2019**

எனவே,

1) அரசு ஆணை (M.S.) எண்.129, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறை, 15.10.2019 நாளிட்ட அரசாணையினை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்திடவும்,
2) 2015-2016 முதல் 2018-2019 வரை தகுதியான நபர்கள் இல்லாததால் இன்மைப்பட்டியல் வெளியிடவும்,
3) 15.05.2019–னை மைய நாளாகக் கொண்டு மண்டல சுகாதார அலுவலர் பதவி உயர்வுக்கு முழுத் தகுதியுடைய கீழ்காண் 5 மருத்துவ அலுவலர்களை கொண்டு தயாரிக்கப்பட்டுள்ள தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்.

| வ. எண். | பெயர் | மருத்துவ அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|
| 1. | டாக்டர்.என்.கோமதி, மருத்துவ அலுவலர். | 08.01.1992 |
| 2. | டாக்டர்.எ.பிரபாவதி, மருத்துவ அலுவலர். | 19.04.1995 |
| 3. | டாக்டர்.ஜி.ஷீலா, மருத்துவ அலுவலர். | 06.10.2007 |
| 4. | டாக்டர்.பி.ஆஷாலதா, மருத்துவ அலுவலர். | 14.11.2007 |
| 5. | டாக்டர்.டி.பிரியதர்ஷினி, மருத்துவ அலுவலர். | 18.07.2008 |

4) மேற்படி தெரிவுப்பட்டியலில் இடம்பெற்றுள்ள 5 மருத்துவ அலுவலர்களுக்கு மண்டல சுகாதார அலுவலராக பதவி உயர்வு வழங்கவும், தனியர்களுக்கு ரூ.56900/- - ரூ.180500/- என்ற காலமுறை ஊதியத்தில், காலிப்பணியிடத்தில் பணியமர்வு செய்து ஆணை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“மண்டல சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல், 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.து.ந.க.எண்.ஈ2/23595/2019**

**தீர்மான எண்.784/2019** **நாள்:05-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி -பொதுத்துறை - சுகாதாரத் துறை மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் - 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளுக்கான தெரிவுப்பட்டியல் - காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் - இன்மைப்பட்டியல் (Nil Panel) ஆக வெளியிட அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில், சுகாதாரத் துறை, மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் 4 ஆகும். இப்பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மையநாள் ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 1 ஆம் தேதி ஆகும். தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் |
| 2. | மைய நாள் | 01.04 (2017 & 2018) |
| 3. | ஊதிய விகிதம் | ரூ.15600-39100+6600 தர ஊதியம்(அரசாணை நிலை எண்.:303, நிதி(ஊகு)த்துறை, நாள்.11.10.2017ன்படி, நிலை:25, |
| 4. | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **மண்டல சுகாதார அலுவலர்:**<br>1. MBBS Degree with Diploma in Public Health.<br>2. A pass in Account Test for Executive Officer.<br>3. Must have served as Zonal Health Officer/Superintendent Communicable Disease Hospital at least for a period of 2 years. |
| 5. | காலிப்பணியிட விவரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் - 04<br>மொத்தம் - 04<br>(அ) தற்காலிக பணியிடம் - 00<br>(ஆ) நிரந்தர பணியிடம் - 04<br>தற்போது பணியில் உள்ளவர்கள் - 04<br>மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் - 00<br>01.04.2017 முதல் 31.03.2018 வரை (ம) 01.04.2018 முதல் 31.03.2019 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்றதால்/பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம்<br>பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் - 00<br>அரசாணை (ப) எண்.103, நாள்.09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் - 00<br>மொத்த காலிப்பணியிடம் - 00 |
| 6. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | 2016-2017 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, அவர்களுக்கு ஆணையர் அவர்களின் பொ.து.ந.க.எண்.ஈ2/24602/2016, 30.082016 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலம் பதவி உயர்வு வழங்கப்பட்டது. |

**பொ.து.ந.க.எண்.ஈ2/23595/2019**

மாநகர நல அலுவலர் (பொ) அவர்களின் 18.09.2019 நாளிட்ட கடிதத்தின்படி, டாக்டர்.என்.ஏ.செந்தில்நாதன், டாக்டர்.எம்.ஜெகதீசன், டாக்டர்.ஜி.ராஜ்குமார், டாக்டர்.எஸ்.மகாலட்சுமி, ஆகிய 4 மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்களாக பொது சுகாதாரத்துறையில் தற்போது பணிபுரிந்து வருவதால் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க இப்பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால், 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளுக்கு மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியலை "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிடப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவி வகுப்பு-1 (B) ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவிக்கு "இன்மை பட்டியல்" (Nil Panel) வெளியிடுவதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது.

ஆகவே, 2017-2018 மற்றும் 2018-2019 ஆம் ஆண்டுகளுக்கு மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கான காலிப்பணியிடம் இல்லாத நிலையில் "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிட சிறப்பு அதிகாரி– மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மாநகர கூடுதல் சுகாதார அலுவலர் பதவிக்கு "இன்மை பட்டியல்" (Nil Panel) வெளியிட சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ2/18401/2019**

**தீர்மான எண்.785/2019** **நாள்:05-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2018-2019 ஆம் ஆண்டிற்கான உதவி வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் மன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது - உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் காலியாகவுள்ள உதவி வருவாய் அலுவலர் பணியிடங்களை நிரப்ப 15.05.2018 ஐ மைய நாளாகக் கொண்டு 8 நபரைக் கொண்ட தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, தெரிவுப்பட்டியலுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தீர்மான எண்.928/2018, நாள்.19.11..2018 நிறைவேற்றப்பட்டு, ஆணையர் அவர்களின் 07/12/2018 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக தெரிவுப்பட்டியலில் இடம்பெற்ற கீழ்கண்ட உதவி வருவாய் அலுவலர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது.

| **வ. எண்.** | **உதவி வருவாய் அலுவலர்கள் திருவாளர்கள்.** | **உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள்.** | **பணிபுரியும் இடம்** |
|---|---|---|---|
| 1. | ஜி.பிரதீப்குமார், | 12.12.2018 மு.ப. | மண்டலம்-15 |
| 2. | ஆர்.டில்லி | 12.12.2018 மு.ப. | மண்டலம்-8 |
| 3. | எம்.பி.திருப்பால் | 14.12.2018 பி.ப. | மண்டலம்-7 |
| 4. | டி.கஜேந்திரபாபு | 24.12.2018 பி.ப. | மண்டலம்-2<br>நாள்.31.03.2019<br>(வ.மு.ஓ.) |
| 5. | வி.முருகேசன் | 17.12.2018 மு.ப. | மண்டலம்-11 |
| 6. | ஏ.காதர்பேக் | 24.12.2018 பி.ப. | மண்டலம்-3<br>நாள்.31.12.2018<br>(வ.மு.ஓ.) |
| 7. | எஸ்.ஜி.லோகநாதன் | 12.12.2018 பி.ப. | மண்டலம்-13 |
| 8. | கே.அண்ணாதுரை | 13.12.2018 மு.ப. | மண்டலம்-10 |

மேற்காண் அலுவலர்களில் திரு.எ.காதர்பேக், உதவி வருவாய் அலுவலர் அவர்களைத் தவிர மீதமுள்ள உதவி வருவாய் அலுவலர்கள் பணியில் சேர்ந்த நாள் முதல் இன்றைய தேதி வரை ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை என சம்மந்தப்பட்ட மண்டல அலுவலகங்களிலிருந்து கடிதங்கள் பெறப்பட்டுள்ளது.

மேலும், மண்டல அலுவலர்-3 அவர்களின் கடிதத்தில், திரு.எ.காதர் பேக், ஓய்வு பெற்ற உதவி வருவாய் அலுவலர், அவர்கள் மீது தனிபொறுப்பில் ரூ.41,77,627/- தணிக்கைத் தடை பத்திகள் நிலுவையில் உள்ள காரணத்தினால் சென்னை மாநகராட்சி பணி (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) விதிகள் 1970 துணை விதி 10 (a) ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது-

சென்னை மாநகராட்சியில் உதவி வருவாய் அலுவலர் பதவி வகுப்பு 2-ன் கீழ் வருவதால், பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அதிகார பங்களிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, 2018-2019 ஆம் ஆண்டில் பதவி உயர்வு பெற்ற 8 உதவி வருவாய் அலுவலர்களில் கீழ்கண்ட 7 உதவி வருவாய் அலுவலர்களுக்கு உதவி வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

<u>பொ.து.ந.க.எண்.ஈ2/18401/2019</u>

| வ. எண். | உதவி வருவாய் அலுவலர்கள் திருவாளர்கள். | உதவி வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கிய செய்லமுறை ஆணை எண்.நாள். | உதவி வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1. | ஜி.பிரதீப்குமார், | பொ.து.ந.க.எண்.ஈ2/20083/2017, நாள்.14.07.2018 | 12.12.2018 மு.ப. |
| 2. | ஆர்.டில்லி | | 12.12.2018 மு.ப. |
| 3. | எம்.பி.திருப்பால் | | 14.12.2018 பி.ப. |
| 4. | டி.கஜேந்திரபாபு | | 24.12.2018 பி.ப. |
| 5. | வி.முருகேசன் | | 17.12.2018 மு.ப. |
| 6. | எஸ்.ஜி.லோகநாதன் | | 12.12.2018 பி.ப. |
| 7. | கே.அண்ணாதுரை | | 13.12.2018 மு.ப. |

**"பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ1/18831/2019**

**தீர்மான எண்.786/2019** **நாள்:05-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.ஆர்.கண்ணன், உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்), மண்டலம் -6 - பதவியில் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க அனுமதி.**

மண்டல அலுவலர் -6 அவர்களின் 25/06/2019 நாளிட்ட கடிதத்தில், முதன்மை செயலர் மற்றும் ஆணையர்அவர்களின் 07.02.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.ஆர்.கண்ணன் இளநிலை பொறியாளராக மண்டலம் -6ல் பணிபுரிந்து 18.02.2019 முதல் உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) ஆக பதவி உயர்வு பெற்று பணியில் சேர்ந்துள்ளார் எனவும், தனியர் 18.02.2019 அன்று முதல் உதவி செயற் பொறியாளர் பதவியில் தொடர்ந்து பணியாற்றி வருபவர் இந்நாள் வரை சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை எனவும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியரின் உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்த ஆணை வேண்டி கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியானது வகுப்பு -2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால், இப்பதவி வகிப்பவர்களை பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும். தனியரின் பணிவிவரங்கள் கீழ்வருமாறு,

| பெயர் மற்றும் பதவி | உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணியில் சேர்ந்த நாள் | உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) பதவியில் பணிவரன்முறைப்படுத்தப்பட வேண்டிய நாள் |
|---|---|---|
| திரு.ஆர்.கண்ணன்,<br>உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்), மண்டலம் -6 | 18.02.2019 முற்பகல் | 18.02.2019 முற்பகல் |

மேலும், தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என பொதுத்துறை, ஒழுங்கு நடவடிக்கை பிரிவிலிருந்து சான்று பெறப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் -6ல் பணிபுரியும் திரு.ஆர்.கண்ணன் அவர்கள் இளநிலை பொறியாளர் (மின்சாரம்) பதவியிலிருந்து உதவி செயற் பொறியாளர் (மின்சாரம்) ஆக பதவி உயர்வு பெற்று 18.02.2019 முதல் பணியில் சேர்ந்துள்ளமையால், அப்பதவியில் 18.02.2019 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பணிவரன்முறைப்படுத்தி ஆணை வழங்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.சு.து.ந.க.எண்:பி 2அ/ 6327/ 2019**

**தீர்மான எண்.787 / 2019** **நாள்:06-12-2019**

**பொது சுகாதாரத் துறை – தொற்று நோய் தடுப்பு நடவடிக்கை - கொசு தடுப்பு பணி மற்றும் திடக்கழிவுகளை அகற்றும் ஈடுபடும் பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை *Td Vaccine* போடுவதற்கும் மற்றும் *Doxycycline* மாத்திரை வழங்குவதற்கும் & மேற்கண்ட பணிகளை பொது சுகாதாரத் துறை மற்றும் மருத்துவ சேவைத் துறையின் மூலம் மண்டலங்களில் மேற்கொள்ளவும் அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, 15 மண்டலங்களையும் 200 கோட்டங்களையும் கொண்ட பகுதியாகும்.

மேற்குறிப்பிட்ட 200 கோட்டங்களில் உள்ள பகுதிகளில் 19576 பணியாளர்களைக் கொண்டு கொசு தடுப்பு பணிகளான கொசு புழு வளரும் இடங்களில் கொசு புழு கொல்லி மருந்து இடும் பணி, டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் வகை கொசு வளர ஏதுவான தேவையற்ற பொருட்களை அகற்றும் பணி, மழை நீர் வடிகால்வாய்கள் & நீர்நிலைகள் மற்றும் கொசுவினால் பரவும் நோய்கள் பாதித்த பகுதிகளில் கொசு புழு கொல்லி மருந்து தெளித்தல், நீர்நிலைகளில் தேங்கி காணப்படும் ஆகாய தாமரை முதலான பொருட்கள் அகற்றும் பணி கொசு கொல்லி புகை பரப்பும் பணி மற்றும் அனைத்து தெருக்களிலும் சேகரமாகும் திடக்கழிவுகளை அகற்றும் பணி முதலான களப் பணிகளை பொதுசுகாதாரத் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை மற்றும் இதர துறையினால் பெருநகர சென்னை மாநகராட்சியில் மேற்கொண்டு வருகின்றன.

மேற்குறிப்பிட்ட 19576 பொதுசுகாதாரத் துறை மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு கீழ்கண்ட தொற்றுநோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள பொதுசுகாதாரத் துறை உத்தேசித்துள்ளது.

1. பணியாளர்கள் மேற்குறிப்பிட்ட களப் பணிகளில் ஈடுபடுவதால் காயங்கள் ஏற்பட வாய்ப்பு அதிகமாக உள்ள காரணத்தினால், அவற்றினால் தொற்று ஏற்படாமலிருக்க பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை Td Vaccine போடுவதற்கும்,
2. மழை காலங்களில் பொதுசுகாதாரத் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை மற்றும் அனைத்து துறை களப் பணியாளர்கள் மழைநீர் தேங்கி காணப்படும் பொருட்களில் டெங்கு நோய் பரப்பும் ஏடிஸ் வகை கொசு வளர வாய்ப்பு அதிகமாக இருப்பதன் காரணத்தினால் அவற்றினை அகற்றும் பணியில் ஈடுபடுவதாலும், மழைநீருடன் திடக்கழிவுகளை அகற்றும் பணியில் ஈடுபடுவதாலும் மற்றும் மழைநீருடன் தேங்கியிருக்கும் கழிவுநீரை அகற்றும் பணியில் ஈடுபடுவதாலும் leptospirosis நோய் பதிப்பு ஏற்பட வாய்ப்பு உள்ளதன் காரணத்தினால், அந்த நோயின் பாதிப்பிலிருந்து காக்கும் பொருட்டு ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு இரண்டு வேளை வீதம் (ஒரு வேளைக்கு 100 மில்லி கிராம்) 5 நாட்களுக்கு Doxycycline எனும் மாத்திரை ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை வழங்குவதற்கும்.
3. மேற்குறிப்பிட்ட பணிகளை பொது சுகாதாரத் துறை மற்றும் மருத்துவ சேவைத் துறையின் மண்டல நல அலுவலர் மற்றும் மண்டல மருத்துவ அலுவலர் மூலம் மண்டலங்களில் மேற்கொள்ளவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, 19576 பொதுசுகாதாரத் துறை மற்றும் திடக்கழிவு மேலாண்மை துறை பணியாளர்களின் நலனை கருத்தில் கொண்டு தொற்றுநோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள,

1. பொதுசுகாதாரத் துறை, திடக்கழிவு மேலாண்மை துறை மற்றும் அனைத்து துறை பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை Td Vaccine போடுவதற்கு மற்றும் ஒரு நபருக்கு இரண்டு வேளை வீதம் (ஒரு வேளைக்கு 100 மில்லி கிராம்) 5 நாட்களுக்கு Doxycycline மாத்திரை வழங்குவதற்கு அனுமதியும்,
2. மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தேவையான Td Vaccine (தோராயமாக 20,000 எண்ணிக்கையில்) ஐ பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்து துறையிடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைத் துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பெறுவதற்கு அனுமதியும்,

**பொ.சு.து.ந.க.எண்:பி 2அ/ 6327/2019**

3. மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தேவையான *Doxycycline* எனும் மாத்திரைகளை {ஒரு நாளைக்கு ஒரு நபருக்கு இரண்டு வேளை வீதம் (ஒரு வேளைக்கு 100 மில்லி கிராம்) 5 நாட்களுக்கு தோராயமாக (20,000 Nos X 2 times per day X 5 days) 2,00,000 எண்ணிக்கையில்} தமிழ்நாடு மருத்துவ சேவை கழகத்திடமிருந்து பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவ சேவைத் துறையின் மூலம் ஒவ்வொரு ஆண்டும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறை பெறுவதற்கு அனுமதியும்,
4. மேற்குறிப்பிட்ட பணிகளை பொது சுகாதாரத் துறை மற்றும் மருத்துவ சேவைத் துறையின் மண்டல நல அலுவலர் மற்றும் மண்டல மருத்துவ அலுவலர் மூலம் மண்டலங்களில் மேற்கொள்ள அனுமதியும்,
5. மேற்குறிப்பிட்ட பணிகளுக்கு தேவையான பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளை சம்பந்தப்பட்ட மண்டலத்திற்குரிய அலுவலர்கள் பராமரிக்க அனுமதியும்,
6. மேற்கொண்ட பணிகளுக்குரிய அறிக்கையினை பொது சுகாதாரத் துறை மற்றும் மருத்துவ சேவைத் துறை தலைமையகங்களுக்கு அனுப்புவதற்கு அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**இ.பொ.து.ஆ.வா.ந.க.எண். டி 5 / 589/ 2019**

**தீர்மான எண்.788 / 2019** **நாள்:06-12-2019**

**இயந்திர பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 9 மற்றும் 10 ல் உள்ள வாகனங்களுக்கும் டீசல் வழங்க நவம்பர் 2019 முதல் மார்ச் 2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு கூடுதல் டீசல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய அனுமதி.**

இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கிவரும் ஆய்வு வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும் மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் 198 எண்ணிக்கையிலான ஆய்வு வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தலைமை நிலைய உயரதிகாரிகள் வாகனங்களுக்கும், சுகாதாரத்துறை மற்றும் இதர வாகனங்களுக்கும் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) வழங்க புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்தாரின் டீசல் சேமிக்கும் கிடங்கு அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகின்றது.

மேற்கண்ட 198 வாகனங்களில், 185 வாகனங்கள் டீசல் மூலம் இயங்கும் வாகனங்கள். இந்த 185 வாகனங்களில், வட்டார/மண்டல அலுவலர்களுக்கு ஒதுக்கப்பட்ட 90 வாகனங்களுக்கு பயண நேரம் மற்றும் எரிபொருள் சேமிக்கும் பொருட்டு அந்தந்த வட்டாரத்தில்/மண்டலத்தில் அமைந்துள்ள பணிமனைகளில் உள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது. தலைமை நிலைய உயரதிகாரிகள், சுகாதாரத்துறை மற்றும் இதரத்துறை ஆய்வு பயன்பாட்டிற்காக செயல்படும் 95 வாகனங்களுக்கு, புதுபேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது. மேலும், கால்வாய் தூர்வார உபயோகப்படும் சிறப்பு உபகரணங்களான ஆம்பிபியன் வாகனம் மற்றும் மூன்று எண்ணிகையிலான ரோபோடிக் எஸ்கவேடர் வாகனங்களுக்கு ஆய்வு வாகனப்பணிமனையில் டீசல் வழங்கப்பட்டு வரப்படுகிறது. இத்துடன், 6 எண்ணிகையிலான டிராக்டர் மூலம் இயங்கக்கூடிய கடற்கரை சுத்தப்படுத்தும் இயந்திரத்திற்கும் ஆய்வு வாகன பணிமனையில் டீசல் நிரப்பப்பட்டு வரப்படுகிறது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்: 188 / 2019, நாள்:09-03-2019ன்படி மேற்கண்ட வாகனங்களுக்கு ஏப்ரல்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள நிதியாண்டிற்கு 300 கிலோ லிட்டர் டீசலை (சராசரியாக ஒரு மாதத்திற்கு 25 கிலோ லிட்டர் என கணக்கிடப்பட்டு 12 மாதங்களுக்கு 300 கிலோ லிட்டர் வீதம்) , ரூ.2,00,57,823/- (ரூபாய். இரண்டு கோடியே ஐம்பத்து ஏழாயிரத்து எண்ணூற்று இருபத்து மூன்று மட்டும்) செலவீனத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்கண்ட வாகனங்களுக்கு அக்டோபர் - 2019 வரை 216 கிலோலிட்டர் டீசல் கொள்முதல் செய்யப்பட்டு மேற்கண்ட வாகனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த, மன்ற தீர்மானத்தின்படி மீதம் 84 கிலோலிட்டர் (300 கி.லி – 216 கி.லி = 84 கி.லி) டீசல் மட்டுமே நவம்பர்-2019 முதல் மார்ச்-2020 வரை கொள்முதல் செய்ய முடியும். ஆனால், நவம்பர்-2019 முதல் ஆய்வு வாகன பணிமனையில் டீசல் தேவை அதிகமாகியிருப்பதால் தற்பொழுது ஒரு மாதத்திற்கு 25 கிலோ லிட்டருக்கு பதில் சராசரியாக 30 கிலோ லிட்டர் டீசல் வழங்கப்படுகிறது. இது ஏற்கனவே பயன்படுத்திய டீசலை விட மாதத்திற்கு 5 கிலோ லிட்டர் கூடுதலாகும் காரணம் சிறப்பு உபகரணமான ஆம்பிபியன் வாகனம் முதலில் 10 மணி நேரம் பணி செய்து வந்த நிலையில் தற்பொழுது ஏப்ரல்'2019 முதல் ஆம்பிபியன் சிறப்பு உபகரணத்தின் பணிநேரம் 15 மணி நேரமாக அதிகரிக்கப்பட்டுள்ளது. எனவே, ஆம்பிபியன் வாகனம் நாள் ஒன்றுக்கு கூடுதலாக

5 மணிநேரம் பணி செய்யும் காரணத்தாலும், மேலும் கடற்கரை சுத்தப்படுத்த பயன்படுத்தப்படும் 6 எண்ணிகையில் உள்ள டிராக்டர்கள் கடந்த காலங்களில் மாதத்திற்கு 25 நாட்கள் மட்டுமே பணி செய்து வந்த நிலையில் நவம்பர்'2019 முதல் 30 நாட்கள் பயன்படுத்தப்படும் காரணத்தினாலும், ஆய்வு வாகனப்பணிமனையில் ஆய்வு வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்து இருப்பதாலும் டீசல் பயன்பாடு மாதத்திற்கு 5 கிலோலிட்டர் அதிகமாகியிருக்கிறது. அதன்படி, நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு 150 கிலோலிட்டர் (30 கி.லி. X 5 மதங்கள்) கூடுதலாக டீசல் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்கூறியவாறு இந்த மன்ற தீர்மானத்தின்படி மீதம் 84 கிலோலிட்டர் டீசல் மட்டுமே கொள்முதல் செய்ய முடியும் என்பதாலும், மேலும் இது மார்ச்'2019 வரை போதியதாக இல்லாத காரணத்தாலும் மேற்கண்ட வாகனங்களுக்கு நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு 66 கிலோலிட்டர் (150 கி.லி – 84 கி.லி) டீசல் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது.

மேலும், மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம் 9, 10ல் உள்ள லாரி நிலைய வாகனங்களுக்கு கடந்த அக்டோபர்-2019 வரை மண்டலம் 8 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கில் டீசல் நிரப்பப்பட்டு வந்தது. ஆனால், மண்டலம் 9, 10 ல் உள்ள லாரி நிலைய வாகனங்கள் மண்டலம் 8 லாரி நிலையத்திற்கு சென்று டீசல் பிடித்து செல்லும் தூரம் அதிகமாக இருப்பதால் கூடுதல் பயணநேரம், கூடுதல் KM (Dead KM) மற்றும் கூடுதல் டீசல் செலவாகின்றது. மண்டலம் 8-ல் டீசல் நிரப்பிய மண்டலம் 9 மற்றும் மண்டலம் 10-யை சார்ந்த வாகனங்கள் அங்கிருந்து தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளுக்கு சென்று சேருவதற்கு பணிதாமதம் ஏற்படுகிறது, போக்குவரத்து நெரிசல் மற்றும் சிக்னல் போன்ற இடையூறுகளை தாண்டி அவ்வாகனங்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வார்டுகளுக்கு சென்று சேருகின்றன. இதனால் பணிகள் குறித்த நேரத்தில் முடிக்கப்படாமல் பாதிக்கப்படும் சூழல் ஏற்படுகிறது. மேலும், மண்டலம் 8 லாரி நிலையத்தில் நான்கு மண்டலத்தில் உள்ள வாகனங்களுக்கு (மண்டலம்-7,8,9 மற்றும் 10) டீசல் வழங்கப்படுவதால் வாகனங்கள் நீண்ட நேரம் காத்திருந்து டீசல் பிடித்து செல்லும் நிலை உள்ளது. ஆகையால், மண்டலம் 9, 10 ல் உள்ள லாரி நிலைய வாகனங்கள் மண்டலம் 8 லாரி நிலையத்திற்கு வந்து டீசல் பிடித்து செல்லும் தூரத்தை காட்டிலும் புதுப்பேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் டீசல் பிடித்து செல்லும் தூரம் குறைவாக உள்ளதாலும், இதனால் கூடுதல் டீசல் செலவாவதை தடுக்க முடியும் என்பதாலும், மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் 25.10.2019 நாளிட்ட குறிப்பின்படி, மண்டலம் 9 மற்றும் 10ல் உள்ள வாகனங்களை இயக்க தேவையான டீசலை நவம்பர்-2019 முதல் தென் சென்னை பிரதான பணிமனை என அறியப்படும் ஆய்வு வாகன பணிமனையில் இருந்து பெற்று கொள்ள அனுமதி வழங்கப்பட்டது.

ஆகையால், ஆய்வுவாகன பணிமனையில் மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம் - 9 ல் உள்ள 30 வாகனங்கள், மண்டலம் - 10 ல் உள்ள 25 வாகனங்கள் ஆக மொத்தம் 55 வாகனங்களுக்கும் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு கூடுதலாக 180 கிலோலிட்டர் டீசல் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது.

இதன்மூலம், ஆய்வு வாகன பணிமனையில் ஆய்வு வாகனங்களுக்கும், மத்திய வட்டாரத்தை சார்ந்த மண்டலம் – 9 மற்றும் மண்டலம் - 10 ல் உள்ள 55 வாகனங்களுக்கும் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு கூடுதலாக 246 கிலோ லிட்டர் (66 கிலோ லிட்டர் + 180 கிலோ லிட்டர்) டீசல் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| மண்டலம்-9, 10 லாரி நிலைய வாகனத்திற்கு தோராயமாக தேவைப்படும் எரிபொருள் (டீசல்) நவம்பர் 2019 முதல் மார்ச் 2020 வரை | = | 36000 லி X 5 மாதம்<br>180 கி.லி |
| ஆய்வுவாகனத்திற்கு கூடுதல் தேவைப்படும் எரிபொருள் (டீசல்) தோராயமாக (நவம்பர் 2019 முதல் மார்ச்'2020 வரை) | = | **66** கி.லி |
| **மொத்த தோராய தேவை** | = | **246** கி.லி |

**இ.பொ.து.ஆ.வா.ந.க.எண். டி5/589/ 2019**

அரசு ஆணை (நிலை) எண்.102, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் . 07.08.2000ன்படி, டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் ( மா.ந.1 ) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01 நாள்.18.09.2001-ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருள் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், தற்போதைய டீசல் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் 07.11.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தால் அளித்த விலைப்புள்ளியின் அடிப்படையில் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு தேவையான கூடுதல் 246 கிலோ லிட்டர் டீசல் கொள்முதல் செய்ய ஆகும் தோராய மொத்த தொகை கீழ்கண்டவாறு கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| நிறுவனம் | பொருள் விவரம் | 1 கிலோ லிட்டருக்கான தொகை ரூபாய் (அனைத்து வரிகள் உட்பட) | மொத்த தேவை கிலோ லிட்டர் 5 மாதத்திற்கு (நவம்பர் 2019 முதல் மார்ச் 2020 வரை) |
|---|---|---|---|
| இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் | டீசல் | ரூ.68,076.12 (நாள் : 07-11-2019) | 246 |
| மொத்த தொகை | 246 கி.லி x ரூ..68,076.12 = ரூ1,67,46,726/- (ரூபாய். ஒரு கோடியே அறுபத்து ஏழு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து எழுநூற்று இருபத்து ஆறு மட்டும்) | | |

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், ஆய்வு வாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு தோரயமாக கணக்கிடப்பட்ட, 246 கிலோ லிட்டர் டீசலை பெறுவதற்கு மொத்த தொகையான %.1,67,46,726/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஏழு லட்சத்து நாற்பத்து ஆராயிரத்து எழுநூற்று இருபத்து ஆறு மட்டும்) தேவைப்படுகிறது. இச்செலவினம் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்புபீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம் .

**இ.பொ.து.ஆ.வா.ந.க.எண். டி5/589/ 2019**

அதன்படி, நடப்பு நிதியாண்டில் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு ஆய்வுவாகன பணிமனையில் அமைந்துள்ள எரிபொருள் கிடங்கிற்கு தேவைப்படும் கூடுதல் டீசல் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

எனவே,

1. ஆய்வுவாகன பணிமனையில் ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 9, 10 ல் பராமரிக்கப்பட்டு வரப்படு»ன்ற வாகனங்களுக்கும் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு தேவைப்படு»ன்ற கூடுதல் 246 கிலோலிட்டர் டீசலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான %.1,67,46,726/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து ஏழு லட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து எழுநூற்று இருபத்து ஆறு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல் செய்யும்போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது, மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி, கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
3. இதற்கான செலவினை 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை-கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" டீசல் கொள்முதல் செய்ய 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்: டி5/592/2019**

**தீர்மான எண்.789/2019** **நாள்:06-12-2019**

**இயந்திர பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - நவம்பர்'2019 - மார்ச்' 2020 வரை உள்ள 5 மாத காலத்திற்கு கூடுதல் பெட்ரோல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய அனுமதி.**

வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும் மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் 198 எண்ணிக்கையிலான ஆய்வு வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது. மேற்கண்ட வாகனங்களில், தற்பொழுது 08 வாகனங்கள் பெட்ரோல் மூலம் இயங்கும் ஆய்வு வாகனங்கள்.

இந்த 08 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கு தேவைப்படும் எரிபொருள் (பெட்ரோல்) புதுபேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்தாரின் பெட்ரோல் சேமிக்கும் கிடங்கு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வரப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் பெட்ரோல் வழங்கும் மையம் ஆய்வு வாகன பணிமனையில் மட்டுமே உள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்: 345/2019, நாள்:27-06-2019ன்படி ஆய்வுவாகன பணிமனையில் 08 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் ஜூலை'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு தேவையான 81 கிலோ லிட்டர் பெட்ரோலை (சராசரியாக ஒரு மாதத்திற்கு 09 கிலோலிட்டர் என கணக்கிடப்பட்டு 09 மாதங்களுக்கு 81 கிலோலிட்டர் வீதம்), ரூ.59,07,613/- (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று பதிமூன்று மட்டும்) செலவீனத்தில் இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைக்கேற்ப கொள்முதல் செய்ய சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் நிர்வாக அனுமதி பெறப்பட்டு மேற்கண்ட வாகனங்களுக்கும், கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் பெட்ரோல் வழங்க அக்டோபர்-2019 வரை 48 கிலோலிட்டர் பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு வரப்படுகிறது. இந்த, மன்ற தீர்மானத்தின்படி மீதம் 33 கிலோலிட்டர் (81 கி.லி – 48 கி.லி = 33 கி.லி) பெட்ரோல் மட்டுமே நவம்பர்-2019 முதல் மார்ச்-2020 வரை கொள்முதல் செய்ய முடியும். ஆனால், மற்ற மாதங்களை காட்டிலும் பருவமழை காலத்தில் கூடுதல் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் பணி மேற்கொள்ளப்படும் காரணத்தினால் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கு கூடுதல் பெட்ரோல் வழங்க வேண்டியுள்ளது. ஆகையால், ஆய்வு வாகன பணிமனையில் பெட்ரோல் தேவை அதிகமாகியிருக்கிறது. அதன்படி, நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு 81 கிலோலிட்டர் கூடுதலாக பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது. எனவே, மேற்கூறியவாறு இந்த மன்ற தீர்மானத்தின்படி மீதம் 33 கிலோலிட்டர் பெட்ரோல் மட்டுமே கொள்முதல் செய்ய முடியும் என்பதாலும், மேலும் இது மார்ச்'2019 வரை போதியதாக இல்லாத காரணத்தாலும், மேற்கண்ட வாகனங்களுக்கு நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள ஐந்து மாதங்களுக்கு 48 கிலோலிட்டர் (81 கி.லி – 33 கி.லி) பெட்ரோல் கூடுதலாக கொள்முதல் செய்யப்பட வேண்டியுள்ளது .

அரசு ஆணை (நிலை) எண்.102, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை நாள் . 07.08.2000படி, டீசல் மற்றும் பெட்ரோல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92 / 2000 நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

**இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்: டி5/592/2019**

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01 நாள்.18.09.2001ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருள் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனமிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், தற்போதைய பெட்ரோல் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடம் 20.11.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தால் அளித்த விலைப்புள்ளியின் அடிப்படையில் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள 5 மாத காலத்திற்கு தேவையான கூடுதல் 48 கிலோலிட்டர் பெட்ரோல் கொள்முதல் செய்ய ஆகும் தோராய மொத்த தொகை கீழ்கண்டவாறு கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

<table>
<tr><th>நிறுவனம்</th><th>பொருள் விவரம்</th><th>1 KL-க்கான தொகை ரூபாய்</th><th>மொத்த தேவை நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை</th></tr>
<tr><td>இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் விற்பனை அனைத்து வரிகள் உட்பட</td><td>பெட்ரோல்</td><td>ரூ.74397.64/-<br>(நாள் : 20.11.2019)</td><td>48 கிலோ லிட்டர்.</td></tr>
<tr><td>நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள 5 மாத காலத்திற்கு பெட்ரோல் (48 KL) கொள்முதல் செய்ய ஆகும் மொத்த தொகை</td><td colspan="3">48 கி.லி. x ரூ. 74397.64/- = ரூ. 35,71,087/-<br>(ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து எண்பத்தேழு மட்டும்)</td></tr>
</table>

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், 08 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள 5 மாத காலத்திற்கு தோரயமாக கணக்கிடப்பட்ட, 48 கிலோ லிட்டர் பெட்ரோலை தோராய மொத்த தொகையான **ரூ. 35,71,087/-** (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து எண்பத்தேழு மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துக் கொள்ளலாம். இச்செலவினம் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண்:230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

அதன்படி, நவம்பர் '2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள 5 மாத காலத்திற்கு ஆய்வு வாகனப்பணிமனையில் 08 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் தேவைப்படும் கூடுதல் பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட வேண்டும்.

எனவே,

1. ஆய்வு வாகனப்பணிமனையில், 08 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் நவம்பர்'2019 முதல் மார்ச்'2020 வரை உள்ள 5 மாத காலத்திற்கு தேவைப்படும் கூடுதல் 48 கிலோலிட்டர் பெட்ரோலை கொள்முதல் செய்வதற்கு மொத்த தொகையான **ரூ. 35,71,087/-** (ரூபாய் முப்பத்தைந்து இலட்சத்து எழுபத்து ஓராயிரத்து எண்பத்தேழு மட்டும்) செலவீனத்தில் அல்லது கொள்முதல்

செய்யும்போது அமுலில் உள்ள விலைக்கு திருவாளர்கள். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,

2. ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான பெட்ரோல் எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது, மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு RTGS மூலம் முன்பணமாக செலுத்தி, கொள்முதல் செய்ய அனுமதி வேண்டியும்,
3. இதற்கான செலவினை 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை-கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,
4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பெட்ரோல் கொள்முதல் செய்ய 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி1/367/2019**

**தீர்மான எண்.790/2019** **நாள்:06-12-2019**

**கட்டடத்துறை – மண்டலம் - 5, வார்டு- 63ல் பைகிராப்ட்ஸ் ரோடு, முதல் தெருவில் இரவு காப்பகம் கட்டும் பணிக்காக திரு.*T.Kumar* அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் - 5, வார்டு- 63ல் பைகிராப்ட்ஸ் ரோடு, முதல் தெருவில் இரவு காப்பகம் கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 134/2019 நாள் 20.02.2019 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 75,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 62,63,646.21 |
| | (ஆ) சிறு மேற்பார்வை செலவு | ரூ 1,56,591.16 |
| | (இ) எதிர்பாரா செலவு | ரூ. 1,52,852.17 |
| | (ஈ) தரக்கட்டுபாடு | ரூ. 62,636.46 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 62,636.46 |
| | (ஊ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள் | ரூ. 50,000.00 |
| | (எ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 7,51,637.55 |
| | bkh¤j« | **ரூ. 75,00,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 07.11.2019<br>2.நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 05.11.2019<br>3.மாலைமலர் நாள் 05.11.2019 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 12.11.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் (*NULM*) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | குறுகிய கால ஒப்பம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது. |
| 11 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 90 நாட்கள் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 12.11.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள்/ திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | *K*.தனசேகரன் | 62,63,646.21 | 79,54,830.69 | (+) 27.00% அதிகம் |
| 2 | T.குமார் | 62,63,646.21 | 77,66,921.30 | (+) 24.00% அதிகம் |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் 13.11.2019 அன்று பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட இரு ஒப்பந்ததாரர்களும் தொழில் நுட்ப ஒப்ப *i)* ஒப்பந்ததாரர் மார்ச் 31 – 2019 வரை முடிவுற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருமானம் (*Annual*

*Turnover)* பணி மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக இருத்தல் வேண்டும் மற்றும் *ii)* தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மற்றும் திட்டமிடப்பட்ட வங்கியிடமிருந்து மிகைப்பற்று *(over draft)* மற்றும் கடன் வசதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.ஒப்பத்தில் பணியின் மதிப்பீட்டு தொகையில் 30%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ஆகியவற்றிற்கான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

இவர்களில் குறைந்த ஒப்பம் அளித்தவரான திரு. T.குமார் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.77,66,921.30 ஆனது இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 62,63,646.21 உடன் ஒப்பிடுகையில் (+)24.00% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 14.11.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 15.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | மதிப்பீட்டில் பணியின் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | விலைக் குறைப்பு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 12% சேர்த்து |
|---|---|---|---|---|---|---|
| T.குமார் | 62,63,646.21 | 77,66,921.30 | 68,57,439.87 | (+) 9.48% அதிகம் | (-) 0.68% குறைவு | 76,80,332.66 |

மேற்கண்ட விவரங்கள் 18.11.2019 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (TENDER SCRUTINY COMMITTEE) சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கான பணித்தொகை *GST* தவிர்த்து ரூ.68,57,439.87 ஆகவும், ஒப்ப மொத்த தொகையான ரூ. 76,80,332.66 (சரக்கு மற்றும் சேவை வரி 12%) க்கான ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை திரு. T.குமார் அவர்களுக்கு வழங்கலாம் என ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையான ரூ. 68,57,439.87 (ரூபாய் அறுபத்து எட்டு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நாநூற்று முப்பத்து ஒன்பது மற்றும் எண்பத்து ஏழு பைசா மட்டும்) 2019-2020ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலின்படி ஒப்பிடுகையில் (-)0.68% அதிகமாக உள்ளது, மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 12 விழுக்காடு சேர்த்து ரூ.8,22,892.78 ஆக மொத்தம் ரூ.76,80,332.66க்கு (ரூபாய் எழுபத்து ஆறு இலட்சத்து எண்பதாயிரத்து முந்நூற்று முப்பத்து இரண்டு மற்றும் அறுபத்து ஆறு பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிக்கு திரு. T.குமார் அவர்களுக்கு ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *05.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**க.து.ந.க.எண்.பி1/2722/2019**

**தீர்மான எண்.791/2019** **நாள்:06-12-2019**

**கட்டடத்துறை – மண்டலம்- 6, வார்டு- 73 ல் டாக்டர் அம்பேத்கர் காலேஜ் ரோடு, அம்மா உணவகம் எதிரில், மண்டலம்- 6, வார்டு- 76ல் சி.எஸ். நகரில் சலவைக்கூடம் எதிரில், மற்றும் மண்டலம்- 6, வார்டு- 77ல் சிவாரோ ரோடு, புளியந்தோப்பு ஆகிய பல்வேறு இடங்களில் இரவு காப்பகங்கள் கட்டும் பணிக்காக திரு. தனசேகரன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்- 6, வார்டு- 73 ல் டாக்டர் அம்பேத்கர் காலேஜ் ரோடு, அம்மா உணவகம் எதிரில், மண்டலம்- 6, வார்டு- 76ல் சி.எஸ். நகரில் சலவைக்கூடம் எதிரில், மற்றும் மண்டலம்- 6, வார்டு- 77ல் சிவாரோ ரோடு, புளியந்தோப்பு ஆகிய பல்வேறு இடங்களில் இரவு காப்பகங்கள் கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண்கள் 911/2018 நாள். 12.11.2018, 1063/2018 நாள் 31.12.2018 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,17,20,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 1,87,15,155.90 |
| | (ஆ) எதிர்பாரா செலவு | ரூ. 4,21,873.83 |
| | (இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 1,87,151.55 |
| | (ஈ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள் | ரூ. 1,50,000.00 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 22,45,818.70 |
| | bkh¤j« | **ரூ. 2,17,20,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 07.11.2019<br>2. நியூ இந்தியன் எக்ஸ்பிரஸ் 05.11.2019<br>3. மாலைமலர் நாள் 05.11.2019 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 12.11.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் (NULM) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | குறுகிய கால ஒப்பம் |

| | | |
|---|---|---|
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது |
| 11 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 90 நாட்கள் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 12.11.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | *K*.தனசேகரன் | 1,87,15,155.90 | 2,32,06,793.32 | (+) 24.00% அதிகம் |
| 2 | A.அசோக்குமார் | 1,87,15,155.90 | 2,37,68,247.99 | (+) 27.00% அதிகம் |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் 13.11.2019 அன்று பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட இரு ஒப்பந்ததாரர்களும் தொழில் நுட்ப ஒப்ப *i)* ஒப்பந்ததாரர் மார்ச் 31 – 2019 வரை முடிவுற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருமானம் *(Annual Turnover)* பணி மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக இருத்தல் வேண்டும் மற்றும் *ii)* தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மற்றும் திட்டமிடப்பட்ட வங்கியிடமிருந்து மிகைப்பற்று *(over draft)* மற்றும் கடன் வசதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும்.ஒப்பத்தில் பணியின் மதிப்பீட்டு தொகையில் 30%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ஆகியவற்றிற்கான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

இவர்களில் குறைந்த ஒப்பம் அளித்தவரான திரு. *K*.தனசேகரன் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. 2,32,06,793.32 ஆனது இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 1,87,15,155.90 உடன் ஒப்பிடுகையில் (+)24.00% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய 14.11.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 15.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | மதிப்பீட்டில் பணியின் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | விலைக் குறைப்பு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 12% சேர்த்து |
|---|---|---|---|---|---|---|
| *K*.தனசேகரன் | 1,87,15,155.90 | 2,32,06,793.32 | 2,04,89,352.68 | (+) 9.48% அதிகம் | (-)0.14% குறைவு | 2,29,48,075.00 |

மேற்கண்ட விவரங்கள் 18.11.2019 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (TENDER SCRUTINY COMMITTEE) சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கான பணித்தொகை *GST* தவிர்த்து ரூ. 2,04,89,352.68 ஆகவும், ஒப்ப மொத்த தொகையான ரூ. 2,29,48,075.00 (சரக்கு மற்றும் சேவை வரி 12%) க்கான ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை திரு. *K*.தனசேகரன் அவர்களுக்கு வழங்கலாம் என ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**க.து.ந.க.எண்.பி1/2722/2019**

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையான ரூ. 2,04,89,352.68 (ரூபாய் இரண்டு கோடியே நான்கு இலட்சத்து எண்பத்து ஒன்பதாயிரத்து முந்நூற்று ஐம்பத்து இரண்டு மற்றும் அறுபத்து எட்டு பைசா மட்டும்) 2019-2020ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலின்படி ஒப்பிடுகையில் (-)0.14% குறைவாக உள்ளது, மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 12 விழுக்காடு சேர்த்து ரூ.24,58,722.32 ஆக மொத்தம் ரூ.2,29,48,075.00க்கு (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து ஒன்பது இலட்சத்து நாற்பத்து எட்டாயிரத்து எழுபத்து ஐந்து மட்டும்), மதிப்புள்ள இப்பணிகளுக்கு திரு.K.தனசேகரன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**க.து.ந.க.எண்.பி1/2722/2/2019**

**தீர்மான எண்.792/2019** **நாள்:06-12-2019**

**கட்டடத்துறை .. மண்டலம்-10 வார்டு - 131ல், விஜயராகவபுரம், மண்டலம் 10 வார்டு 142ல் வினாயகம்பேட்டை, ஆகிய இடங்களில் இரவு காப்பகங்கள் மற்றும் மண்டலம் 10 வார்டு 139ல் ஜாபர்கான் பேட்டையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் முதல் மற்றும் இரண்டாம்தளத்தில் கூடுதலாக 4+4 படிகட்டுகளுடன் கூடிய வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டும் பணிக்காக திருவாளர்கள் ராஜ் டெவலப்பர்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்- 10 வார்டு - 131ல், விஜயராகவபுரம், மண்டலம் 10 வார்டு 142ல் வினாயகம்பேட்டை, ஆகிய இடங்களில் இரவு காப்பகங்கள் மற்றும் மண்டலம் 10 வார்டு 139ல் ஜாபர்கான் பேட்டையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் முதல் மற்றும் இரண்டாம்தளத்தில் கூடுதலாக 4+4 படிகட்டுகளுடன் கூடிய வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண்கள் 911/2018 நாள் 12.11.2018, 469/2019 நாள் 19.08.2019, மற்றும் 658/2019 நாள் 24.10.2019 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,44,75,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 2,09,52,467.14 |
| | (ஆ) சிறு மேற்பார்வை செலவு | ரூ 2,05,570.50 |
| | (இ) எதிர்பாரா செலவு | ரூ. 4,93,141.63 |
| | (ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,09,524.67 |
| | (உ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள் | ரூ. 1,00,000.00 |
| | (ஊ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 25,14,296.06 |
| | bkh¤j« | ரூ. **2,44,75,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 03.10.2019<br>2. இந்தியன் எக்ஸ்பிரஸ் 02.10.2019<br>3. இந்து தமிழ் நாளிதழ் நாள் 02.10.2019 |
| 7 | ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 04.11.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் NULM மற்றும் மூலதனநிதி |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |
| 11 | ஒப்பந்தப்புள்ளி செல்லத்தக்க காலம் | 90 நாட்கள் |

**க.து.ந.க.எண்.பி1/2722/2/2019**

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 04.11.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | M/s Raj Developers | 2,03,60,240.25 | 2,45,34,089.50 | (+) 20.50% அதிகம் |
| 2 | M/s Murali Foundation | ஒப்பந்ததாரர் இதே போன்ற பணிகளில் அனுபவமும் ஆகஸ்ட் 2019 வரை முடிவுற்ற கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் இரண்டு முடிவுற்ற பணிகளின் மதிப்பு பணியின் மதிப்பீட்டு தொகையில் 50%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும் மற்றும் கட்டிடங்கள் கட்டும் பணிகள் மேற்கொண்டு இருத்தல் வேண்டும், என்ற நிபந்தனையை பூர்த்தி செய்யாத காரணத்தினால் இவரின் ஒப்பம் நிராகரிக்கப்பட்டது. | | |

அடுத்த குறைந்த ஒப்பந்ததாரரின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 07.11.2019 அன்று பரிசீலிக்கப்பட்டதில் ஒப்பந்ததாரரின் ஒப்ப தகுதிகளான *i)* ஒப்பந்ததாரர் இதே போன்ற பணிகளில் அனுபவமும் ஆகஸ்ட் 2019 வரை முடிவுற்ற கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் இரண்டு முடிவுற்ற பணிகளின் மதிப்பு பணியின் மதிப்பீட்டு தொகையில் 50%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும். *ii)* கட்டிடங்கள் கட்டும் பணிகள் மேற்கொண்டு இருத்தல் வேண்டும் *(iii)* ஒப்பந்ததாரர் மார்ச் 31 – 2019 வரை முடிவுற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருமானம் *(Annual Turnover)* பணி மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக இருத்தல் வேண்டும் மற்றும் *iv)* தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மற்றும் திட்டமிடப்பட்ட வங்கியிடமிருந்து மிகைப்பற்று *(over draft)* மற்றும் கடன் வசதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பத்தில் பணியின் மதிப்பு மதிப்பீட்டு தொகையில் 30%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ஆகியவற்றிற்கான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தகுதி வாய்ந்தவர்களின் ஒப்ப விலைப்புள்ளி (Price Bid) 09.11.2019 அன்று திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான திருவாளர்கள் ராஜ் டெவலப்பர்ஸ் அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.2,45,34,089.50 ஆனது இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,03,60,240.25 யுடன் ஒப்பிடுகையில் (+)20.50% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய 09.11.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 13.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | மதிப்பீட்டில் பணியின் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | விலைக் குறைப்பு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 12% சேர்த்து |
|---|---|---|---|---|---|---|
| M/s Raj Developers | 2,03,60,240.25 | 2,45,34,089.50 | 2,22,90,391.03 | (+)9.48% அதிகம் | (-)0.34% குறைவு | 2,49,65,237.95 |

மேற்கண்ட விவரங்கள் 18.11.2019 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (TENDER SCRUTINY COMMITTEE) சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கான பணித்தொகை *GST* தவிர்த்து ரூ. 2,22,90,391.03 ஆகவும், ஒப்ப மொத்த தொகையான ரூ. 2,49,65,237.95

(சரக்கு மற்றும் சேவை வரி 12%) க்கான ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை திருவாளர்கள் ராஜ் டெவலப்பர்ஸ் அவர்களுக்கு வழங்கலாம் என ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1) மண்டலம்- 10 வார்டு – 131ல், விஜயராகவபுரம், மண்டலம் 10 வார்டு 142ல் வினாயகம்பேட்டை, ஆகிய இடங்களில் இரவு காப்பகங்கள் மற்றும் மண்டலம் 10 வார்டு 139ல் ஜாபர்கான் பேட்டையில் உள்ள சென்னை ஆரம்ப பள்ளியில் முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் கூடுதலாக 4+4 படிகட்டுகளுடன் கூடிய வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் கட்டும் பணிகளுக்காக தனித்தனியே நிர்வாக அனுமதி பெறப்பட்டு ஒரே தொகுப்புகளாக ஒப்பம் கோரப்பட்டதால் மொத்தம் மதிப்பீட்டு தொகை ரூ.2,44,75,000/-க்கு பின்னேற்பு நிர்வாக அனுமதியும்,

2) மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையான ரூ.2,22,90,391.03 (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து இரண்டு இலட்சத்து தொண்ணூறாயிரத்து முந்நூற்று தொண்ணூற்று ஒன்று மற்றும் மூன்று பைசா மட்டும்) 2019-2020ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலின்படி ஒப்பிடுகையில் (-)0.34% குறைவாக உள்ளது, மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 12 விழுக்காடு சேர்த்து ரூ.26,74,846.92 ஆக மொத்தம் ரூ.2,49,65,237.95க்கு (ரூபாய் இரண்டு கோடியே நாற்பத்து ஒன்பது இலட்சத்த அறுபத்து ஐந்தாயிரத்து இருநூற்று முப்பத்து ஏழு மற்றும் தொண்ணூற்று ஐந்து பைசா மட்டும்), மதிப்புள்ள இப்பணிகளுக்கு திருவாளர்கள். ராஜ் டெவலப்பர்ஸ் அவர்களுக்கு ஒப்பம் வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 05.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ இரவு காப்பகம் கட்டும் பணி மற்றும் கூடுதல் வகுப்பறைகள் கட்டும் பணி, வ.எண்.1க்கு பின்னேற்பு அனுமதியும் மற்றும் வ.எண் 2க்கு அனுமதியும் சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி1/2155/2018**

**தீர்மான எண்.793/2019** **நாள்:09-12-2019**

**கட்டடத்துறை – மண்டலம்-4, வார்டு-48, V.R நகரில் நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் முதல் தளம், சுற்றுச்சுவர் மற்றும் SUMP கட்டும் பணிக்காக M/s K.S.K. Engineers அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-4, வார்டு-48, V.R நகரில் நகர்புற ஆரம்ப சுகாதார மையத்தில் முதல் தளம், சுற்றுச்சுவர் மற்றும் SUMP கட்டும் பணி |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 822/2018 நாள் 04.10.2018 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் – 4 |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ.1,02,90,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 82,59,227.02 |
| | (ஆ) சிறு மேற்பார்வை செலவு | ரூ. 2,06,480.68 |
| | (இ) தரக்கட்டுபாடு | ரூ. 82,592.27 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 2,05,039.17 |
| | (உ) கலந்தறிவாளர் கட்டணம் | ரூ. 4,12,961.35 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 82,592.27 |
| | (எ) மின்சாரம் மற்றும் பிற இனங்களுக்கு | ரூ. 50,000.00 |
| | (ஏ) சரக்கு மற்றும் சேவை வரி 12 % | ரூ. 9,91,107.24 |
| | மொத்தம் | ரூ. **1,02,90,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 07.03.2019<br>2. டெக்கான் குரோனிக்கல் 07.03.2019<br>3. இந்து தமிழ் நாளிதழ் 07.03.2019 |
| 7 | ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 10.04.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மான்யம் (NUHM) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

**க.து.ந.க.எண்.பி1/2155/2018**

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள்/ திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | விலை விகிதம் விழுக்காடு அதிகம்/ குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd | 82,59,227.02 | 1,07,36,995.13 | (+) 30.00% அதிகம் |
| 2 | M/s K.S.K Engineers | 82,59,227.02 | 1,03,24,033.78 | (+) 25.00% அதிகம் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 10.04.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. இந்நிலையில் 10.03.2019 அன்று பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமுல்படுத்தப்பட்டதால் இவ்வொப்பம் தேர்தல் நடத்தை விதிமுறைகள் விலக்கப்பட்ட பின்னர் 06.06.2019 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s K.S.K Engineers அவர்களின் ஒப்பத் தொகை இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.82,59,227.02யைவிட (+)25.00% அதிகமாகும். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,03,24,033.78 ஆகும். 10.06.2019 மற்றும் 18.09.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை விவரங்கள்:

18.09.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததரரர் விலை குறைப்பு செய்துள்ள தொகை விவரங்கள்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | 2019-2020 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின்படி ஒப்பந்ததாரர் விலை குறைப்பு செய்துள்ள தொகை (12% GST தவிர்த்து) | 2019-2020 ஆம் ஆண்டின் விலைப்பட்டியலின்படி 12% GST தவிர்த்து ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி 12% GST சேர்த்து | ஒப்பந்த தாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலையுடன் (12% GST சேர்த்து)ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| M/s K.S.K Engineers | ரூ.88,99,317.11 | (-)1.95% குறைவு | ரூ.99,67,235.17 | (-)0.11% குறைவு |

இவ்வொப்பத் தொகையானது 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலை விட குறைவாகவும் (12% GST உடன் சேர்த்து) சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)0.11% குறைவாக உள்ளது.

பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெறியிடப்பட்ட மலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில பணிகள் வழங்கலாம் என 25.09.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மேலே குறிப்பிட்டுள்ளவாறு 18.09.2019 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக (12% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) ரூ.99,67,235.17 க்கு ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை M/s K.S.K Engineers அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**க.து.ந.க.எண்.பி1/2155/2018**

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான M/s K.S.K Engineers அவர்களின் ஒப்பத் தொகை (12% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) ரூ.99,67,235.17க்கு (ரூபாய் தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து அறுபத்தேழாயிரத்து இருநூற்று முப்பத்தைந்து மற்றும் பதினேழு பைசா மட்டும்) 2019-2020mம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி (-)1.95% குறைவான விழுக்காட்டிற்கு பணிகள் அளிக்கவும், ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *05.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க..எண்.பி1/2091/2019**

**தீர்மான எண்.794/2019** **நாள்:09-12-2019**

**மதிப்பீடு 2019-2020 - கட்டடத்துறை – மண்டலம் 6, வார்டு 73 ஸ்ட்ராஹான்ஸ் சாலையில் புதியதாக கட்டப்பட்டு வரும் மண்டல அலுவலகம் - 6ல் மின்சார பணிக்காக 2019-2020 ஆம் ஆண்டின் விலை விவரப்படி தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,04,00,000/-க்கு திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம் 6, வார்டு 73 ஸ்ட்ராஹான்ஸ் சாலையில் புதியதாக கட்டப்பட்டு வரும் மண்டல அலுவலகம் - 6ல் மின்சார பணி |
| 2 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | மண்டலம் - 6 |
| 3 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2019-2020 ஆம் ஆண்டின் விலை விவரப்படி (மின்சாரம்) |
| 4 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,04,00,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ. 1,76,61,713.28 |
| | (ஆ) எதிர்பாரா செலவு | ரூ. 4,42,264.00 |
| | (இ)) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 1,76,617.13 |
| | (ஈ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 21,19,405.59 |
| | bkh¤j« | ரூ. **2,04,00,000.00** |
| 5 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 6 | ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது | புதிய பணி |
| 7 | நிதியின் தன்மை / ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி / கணக்கு குறியீட்டு எண். | மூலதனநிதி (கட்டடம்) |
| 8 | இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி | ரூ. **2,04,00,000/-** |
| 9 | தொழில்நுட்ப அளித்தவரின் விவரம் | தலைமை பொறியாளர்(திட்டம்) நாள் 15.11.19 |

மண்டலம் 6, வார்டு 73 ஸ்ட்ராஹான்ஸ் சாலையில் புதியதாக கட்டப்பட்டு வரும் மண்டல அலுவலகம் - 6ல் மின்சார பணிக்காக ரூ.2,04,00,000/-க்கு (ரூபாய் இரண்டு கோடியே நான்கு இலட்சம் மட்டும்) 2019-2020 ஆம் ஆண்டின் விலையின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி கோரிய ஆணையரது *05.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“திட்ட மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.துந.க.எண்.பி6/MLA/053/2019**

**தீர்மான எண்.795/2019** **நாள்:09-12-2019**

**கட்டடத்துறை - மண்டலம்-8, வார்டு-105ல் எம்எம்டிஏ சி-பிளாக் பள்ளி சாலை தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிதாக கீழ்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் கழிப்பறைகளுடன் கூடிய வகுப்பறைகள் கட்டும் பணிக்காக *M/s.SAI VENKATESWARA CONTRACTORS* அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-8, வார்டு-105ல் எம்எம்டிஏ சி-பிளாக் பள்ளி சாலை தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் புதிதாக கீழ்தளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்தில் கழிப்பறைகளுடன் கூடிய வகுப்பறைகள் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அனுமதி, நாள்.18.06.2019 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | கல்வித்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 1,42,00,000.00 |
| | (அ) பணி செலவீனம் | ரூ. 1,23,06,914.49 |
| | (ஆ) எதிர்பாரா செலவு | ரூ. 2,63,186.63 |
| | (இ) மின்சாரம்/குடிநீர் கழிவு நீர் போன்ற இணைப்புகளுக்கு மற்ற பிற இனங்கள் | ரூ. 30,000.00 |
| | (ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 1,23,069.14 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 14,76,829.74 |
| | மொத்தம் | ரூ. **1,42,00,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது /நாள் | 1. பெருநகர சென்னை மாநகராட்சி செய்தி மலர் நாள் . 11.07.2019<br>2.தினச் செய்தி நாள்.06.07.2019<br>3. டெக்கான் குரோனிக்கல் , நாள்06.07.2019 |
| 7 | ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள் | 24.07.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அண்ணாநகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender)இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

**க.து.ந.க.எண்.பி6/MLA/053/2019**

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s.SAI VENKATESWARA CONTRACTORS | 1,23,06,914.49 | 1,45,22,159.10 | (+) 18.00% அதிகம் |
| 2 | M/s.R.MANICKAM | 1,23,06,914.49 | 1,48,91,366.53 | (+) 21.00% அதிகம் |

மேற்படி பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு 25.07.2019 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டு இரண்டு ஒப்பங்கள் e-Tender மூலமாகபெறப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரதான M/s.SAI VENKATESWARA CONTRACTORS அவர்களின் ஒப்பத் தொகை ரூ.1,45,22,159.10 ஆகும். இது 2018-2019 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.1,23,06,914.49 யைவிட(+)18.00% அதிகமாகும். பின்னர் ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 29.07.2019 அன்று அவர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ.1,35,37,605.94 மற்றும் ஒப்ப சதவீதம் (+) 10.00ஆகும்.

மேலும் விலைக்குறைப்பு செய்ய கோரியதில் 16.09.2019 அன்று ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத் தொகை ரூ.1,35,25,299.02 மற்றும் இறுதி ஒப்ப சதவீதம் (+)9.90ஆகும்.

| | ஒப்பந்ததாரரின் ஒப்ப தொகை | ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|
| ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகை மற்றும் சதவீதம் 2018-19 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி.(12% GST சேர்த்து) | ரூ.1,51,48,334.91 | (+) 9.90%அதிகம் |
| ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்பத் தொகை மற்றும் சதவீதம் 2019-20ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ஒப்பிடுகையில்(12% GST சேர்த்து) | ரூ.1,51,48,015.59 | (-)0.02%குறைவு |

**இறுதியில் நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்கு பின் ஒப்பந்ததாரர் விலை குறைப்பு செய்த இறுதி ஒப்பத் தொகை அதன் விவரங்கள்**

| ஒப்பந்ததாரர் பெயர் திரு /திருவாளர்கள் | ஒப்பந்ததாரரின் இறுதி ஒப்பத் தொகை GST தவிர்த்து | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத் தொகை 12% GST சேர்த்து | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் 12% GST சேர்த்து | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலை 12% GST சேர்த்து ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|
| M/s.SAI VENKATESWARA CONTRACTORS | ரூ.1,35,25,299.02 | ரூ.1,51,48,334.91 | (-) 0.02% குறைவு | (-) 0.20% குறைவு |

இவ்வொப்பத் தொகையான ரூ.1,51,48,334.91, 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்பட்டியலை விட (+) 9.90%கூடுதலாகவும் (12% GST உடன் சேர்த்து) சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)0.20% குறைவாகவும் உள்ளது.

பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை, விவரங்கள் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 25.09.2007 நாளிட்ட தீர்மான எண்512/2007 ன் படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

**க.து.ந.க.எண்.பி6/MLA/053/2019**

மேலே குறிப்பிட்டுள்ளவாறு 14.10.2019 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக (12% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) ரூ.1,51,48,334.91க்கு ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை M/s.SAI VENKATESWARA CONTRACTORS அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான M/s.SAI VENKATESWARA CONTRACTORS அவர்களுக்கு ஒப்பத் தொகை ரூ.1,51,48,334.91க்கு (12% சரக்கு மற்றும் சேவை வரி உட்பட) 2019-20ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி (-)0.02% குறைவான விழுக்காட்டிற்கு பணிகள் அளிக்கவும் மற்றும் ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *05.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**W.D.C.No.A7/2673/2019**

**Resolution No.796 /2019** **Date:09-12-2019**

**Works Department - Arriving of Schedule of Rates for taking up various civil works - Schedule of Rates Apporoval Committee and Schedule of Rates Sub Committee to be formed and proceedings to be issued – For Approval.**

Greater Chennai Corporation is taking up various infrastructure projects which include bridges, buildings, roads, storm water drains and other miscellaneous civil works. Apart from this, Electrical Department is also taking up the street light infrastructure and repair related works to have better illumination at the streets.Mechanical Department is also taking specific decision and arriving the rates for the purchase of machineries of special nature apart from regular purchase.

It is in practice, that the Schedule of Rates for any item of work is being arrived based on the basic rates received from the Public Works Department / Highways Department every year. Works Department will place this above rates at the Council for approval and based on the basic rates, Schedule of Rates is arrived taking into account of the data sheets exclusively available for each item of work.

For all major items of works, the Schedule of Rates is mainly prepared by Works Department and Buildings Department. For any special nature of work, pertaining to the particular department, like bearings for Bridges Department, Raising of manhole doors in storm water drains, the respective Head of Departments are arriving rates exclusively by following due procedures. For the Parks Department, the Schedule of Rates is being arrived by getting the market rate for different kind of species, tree saplings, plants etc., including civil nature of work that will be taken up in any park.

This above procedure require streamlining, as the Greater Chennai Corporation has grown multifold in due course and many major infrastructure projects are taken up. At this juncture, in arriving the Schedule of Rates, the single department which is taking care of Schedule of Rates, with a group of Engineers available with them requires further scrutiny which in turn will avoid any miscalculations in arriving of Schedule of Rates.

It is felt that a Committee comprising of Department Engineers pooled in from different departments of Greater Chennai Corporation along with the Chief Engineers concerned. If it is formed, it will definitely be a better idea in checking the rates arrived as Schedule of Rates for any item of work. The system suggested as above could be possible by forming the Schedule of Rates Approval Committee comprising of all Chief Engineers.

The system suggested should be as follows:

(1) The Schedule of Rates Apporoval Committee comprising of all Chief Engineers.

(2) The Schedule of Rates Sub Committee consists of Engineers pooled out from at the level of Executive Engineers / Assistant Executive Engineers from the departments Bridges, Electrical, Storm Water Drain, Roads, Works, Mechanical, Buildings and Parks along with Superintending Engineers of the concerned department.

(3) The convener of the Schedule of Rates Approval Committee will be Superintending Engineer (Works). The Nodal Department will be the Works Department, which will receive the rates from Public Works Department / Highways Department and circulate the same among the members.

(4) The meeting will be convened every year when the Public Works Department / Highways Department rates are received or as and when warrants for taking any decision pertaining to the rates and to take any technical decision for fixing rates for any new item of work or for any new materials.

(5) Principal Chief Engineer will be the Chairman of the Committee, wherein all the Chief Engineers are the Committee Members. This will be assisted by the Sub Committee as highlighted above.

The Terms of reference, along with the details of the Committee Members are detailed below:

(1) This Schedule of Rates Approval Committee will be convened by Superintending Engineer (Works) by the 1st Wednesday of every month. The departments which require any modifications, corrections or taking any technical decision, will request the Works Department, the Nodal department, to convene the meeting. Based on this, Works Department will convene the meeting as per the requirements.

(2) The deliberations that are required to be discussed have to be circulated one week in advance to the Members and to the Sub Committee members, by the department concerned, through Nodal department.

(3) Any new item of work, which require for fixing the rates including purchase and receipt of new materials, from time to time need to be placed before the Committee.

Hence, to form the Schedule of Rates Approval Committee and the Schedule of Rates Sub Committee, as follows:

I. Schedule of Rates Approval Committee

Chairman - Principal Chief Engineer

Members - 1. Chief Engineer (SWD, BRR & Spl.Projects)
2. Chief Engineer (Bridge, Mechanical & Buildings)
3. Chief Engineer (Electrical & Planning)
4. Chief Engineer (SWM)
5. Chief Engineer (Parks)

Member &
Convener -6. Superintending Engineer (Works)

II. Schedule of Rates Sub Committee

Convener - Superintending Engineer (Works)
Members -
1. Superintending Engineer (BRR & Spl. Projects)
   One Executive Engineer or AEE to assist.
2. Superintending Engineer (Bridges)
   One Executive Engineer or AEE to assist.
3. Superintending Engineer (Electrical)
   One Executive Engineer or AEE to assist.
4. Superintending Engineer (Mechanical)
   One Executive Engineer or AEE to assist.
5. Superintending Engineer (SWD)
   One Executive Engineer or AEE to assist.
6. Superintending Engineer (Buildings)
   One Executive Engineer or AEE to assist.
7. Superintending Engineer (Parks)
   One Executive Engineer or AEE to assist.

Orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Coucil are requested. Commissioner’s Note dated.07.12.2019 is read.

**“Approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council.”**

******

**<u>ப.து.ந.க.எண் அ3 /2510 /2019</u>**

**தீர்மான எண்.797/2019** **நாள்:09-12-2019**

**<u>பணித்துறை- 2009 - 10க்கான தணிக்கை தடைகள் - மத்திய தார் கலவை நிலையம் (CAP) 2015ல் பெய்த பெரு வெள்ளத்தால் கோப்புகள் தண்ணீரில் நனைந்தது - கோப்புகள் கிடைக்கப் பெறாததால் சிறப்பு நிகழ்வாக கருதி நிலுவையில் உள்ள பத்திகளை நீக்கம் செய்ய அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பணித்துறையின் கீழ் உள்ள மத்திய வெப்பத் தார் கலவை நிலையத்தில் 2009 – 10 ஆம் ஆண்டிற்கான கீழ்கண்ட உள்ளாட்சி நிதி தணிக்கை அறிக்கையில் உள்ள தணிக்கைத்தடை பத்திகளின் விவரம்

| வருடம் | தணிக்கை அ/த | பத்தி எண் | கூட்டமர்விற்கு பின் நிலுவையில் உள்ள பத்திகள் |
|---|---|---|---|
| 2009 - 2010 | தணிக்கை அறிக்கை | 18, 19, 20, 24, 25, 26, 29 | 7 எண்ணிக்கை |

மேற்கூறிய 7 பத்திகள் ஜுன் 2019ல் நடைபெற்ற தணிக்கை தடை நீக்கத்திற்கான கூட்டமளவில் அறிக்கை தரப்பட்டு செப்டம்பர் 2019ல் உரிய கோப்புகள் வழங்கப்படும் வரை பத்தி நிலுவை என்று இணை இயக்குநர் அவர்களிடமிருந்து குறிப்பு வந்துள்ளது.

பணித்துறை கீழ் இயங்கும் மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் (CAP) 2012 ஆம் ஆண்டிலிருந்தே தார் கலவை நிலையம் பணிகள் நிறுத்தப்பட்டு 2014 ஆம் ஆண்டு அங்கிருக்கும் அனைத்து பணியாளர்களையும் வேறு துறைக்கு மாற்றப்பட்டனர். இச்சூழ்நிலையில் 2015ல் சென்னையில் பெய்த பெருவெள்ளத்தால் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்தில் உள்ள அனைத்து கோப்புகளும் தண்ணீரில் நனைந்து பார்க்ககூட முடியாத நிலையில் உள்ளன.

தணிக்கை தடை பத்திகளை நீக்குவதற்காக சுமார் ஒரு வார காலமாக கோப்புகளை மத்திய வெப்ப தார் கலவை நிலையத்தில் செயற் பொறியாளர் (தனியர்) ஆட்களை வைத்து தேடியும் எந்த கோப்பும் முழுமையாக கிடைக்கவில்லை. அதற்கான புகைப்படங்கள் இக்கோப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இச்சூழ்நிலையில் மே மாதம் 2019 அன்று நடந்த தணிக்கை தடை நீக்கத்திற்கான கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது, அதில் சிதிலமடைந்து கோப்புகள் மற்றும் பதிவேடுகளுடன் சுட்டிகாட்டி 8 பத்திகளுக்கு உரிய விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் ஒரு பத்தி மட்டுமே நீக்கம் செய்யப்பட்டு மீதமுள்ள 7 பத்திகள் உரிய கோப்புகள் வழங்கப்படும வரை பத்தி நிலுவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இது சம்மந்தப்பட்ட கோப்புகளை கையாண்டு வந்த உதவியாளர்கள், உதவிசெயற் பொறியாளர், செயற்பொறியாளர் ஓய்வு பெற்று விட்டனர். அக்கோப்புகள் கிடைக்கப் பெறாத காரணத்தினாலும் மேற்படி தணிக்கைத்தடைகளுக்கு உரிய பதில் அளிக்க இயலாத சூழ்நிலை உள்ளது. இயற்கை சீற்றம் (மழை வெள்ளம்) காரணமாக பழைய கோப்புகள் அனைத்தும் சிதைந்துவிட்டன.

எனவே, மேற்படி காரணங்களினால் இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில், நிலுவையில் உள்ள 7 எண்ணிக்கையிலான தணிக்கை தடை பத்திகளை சிறப்பு நிகழ்வாக கருதி நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ தணிக்கைத்தடை 7 பத்திகள் நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**<u>சு.து. ந.க. எண்.*NUHM/பி2/6519/2019*</u>**

**தீர்மான எண்.798/2019** **நாள்:09-12-2019**

**<u>பொதுசுகாதாரத்துறை-தேசியநகர்ப்புற சுகாதாரத்திட்டம்- *23 DEOs* மற்றும் *17 Accountants* மொத்தம் *40* பணியாளர்கள் *11* மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். *1052/2018* நாள். 31.12.2018 ன்படி 23 Data Entry Operators, 17 Accountants, மொத்தம் 40 பணியாளர்கள் M/s. Monisha Security Agency நிறுவனத்திற்கு *03.01.2019* முதல் *02.12.2019* வரையில் பதினோரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

| Sl. No | Category of Staff | Salary per Month (Rs) | Allowances | EPF (13.%) on 50% pay | ESI (4.75 %) (Rs) | Service Charge | GST (18%) (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Total 11 months Rs (6x7x11) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | |
| 1 | Data Entry Operator | 5175 | 5175 | 673 | 492 | 276 | 2122.38 | 13913.4 | 23 | 3520085 |
| 2 | Accountant | 7000 | 7000 | 910 | 665 | 374 | 2870.82 | 18819.8 | 17 | 3519306 |
| | | | | | | | | | | 7039391 |

எனவே, 23 Data Entry Operators, 17 Accountants, மொத்தம் 40 பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் *11* மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்தலாம்.

**<u>அட்டவணை-2</u>**

**<u>Qualification of Staff</u>**

| **Sl. No** | **Category of Staff** | **Qualification** |
|---|---|---|
| 1 | Accountant | B.Com., with computer knowledge with 2 years experience. |
| 2 | Data Entry Operator | Must have passed any Degree, typewriting in Tamil &, English (lower level) , Certificate Course in computer of Office Automation. |

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges ) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

| **Employee's State Insurance** | | **Employee's Provident Fund** | | **GST** |
|---|---|---|---|---|
| **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | **Employer Contribution in the salary** | Employee Contribution in the salary | |
| **3.25%** | 0.75% | **13%** | 12.00% | **18%** |

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் 29.07.2016 மற்றும் 30.07.2016 நாளிட்ட கடிதத்தின்படி தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் ஒரு வருட காலம் பணி முடித்த பணியாளர்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு **5%** வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, Data Entry Operators, Accountants ஆகிய பணியிடங்களில் பெரும்பாலானோர் ஒரு வருட காலத்திற்கு மேல் பணிபுரிவதால் அவர்களின் ஊதியத்தில் வருடாந்திர ஊதிய உயர்வு **5%** அளித்து கீழ்க்கண்டவாறு ஊதியம் நிர்ணயம் செய்யலாம்.

| Sl.No | Category of Staff | Salary per Month (Rs) | Increment 5% | Total |
|---|---|---|---|---|
| 1 | Data Entry Operator | 10350 | 518 | 10868 |
| 2 | Accountant | 14000 | 700 | 14700 |

**சு.து. ந.க. எண்.NUHM/பி2/6519/2019**

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் 24/07/2018 நாளிட்ட கடிதத்தில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியத்தில் 50% அடிப்படை ஊதியமாகவும், மீதமுள்ள 50% இதர படிகளாகவும் நிர்ணயம் செய்து அடிப்படை ஊதியத்திற்கான பணியாளர் வருங்கால வைப்புநிதி (Employee's Provident Fund) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை-3**

| Sno | Category of Staff | Basic Pay (Rs) | Allowances | EPF (13%) for Basic pay (Rs) | ESI (3.25 %) for Gross Salary (Rs) | Administrative Charges | GST 18% (1+2+3+4) | Total (1+2+3+4+5) | Required Number of Staff | Cost per 11 months Rs (6x7) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | DEO | 5434 | 5434 | 706 | 353 | 500 | 2237 | 14664 | 23 | 3709992 |
| 2 | Accountant | 7350 | 7350 | 956 | 478 | 500 | 2994 | 19628 | 17 | 3670436 |
| | | | | | | | | | 40 | 7380428 |

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம், அட்டவணை 3ல் தெரிவித்துள்ளவாறு 23 Data Entry Operator, 17 Accountant பணியாளர்களை 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இதற்கென நிர்வாக செலவினம் ரூ. 73,80,428/ (ரூபாய் எழுபத்தி மூன்று லட்சத்து எண்பதாயிரத்து நானூற்றி இருபத்தி எட்டு மட்டும்) மேற்கொள்ள அனுமதிக்கும்,
3. இப்பணிக்கென பொதுசுகாதார தலைமையிடம் மூலம் மின்னணு ஒப்பம் கோரி பணி மேற்கொள்ள அனுமதிக்கும்,
4. இதற்கான செலவினம் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Support Staff (DEO cum Accountant) க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code.U.8.1.10.2, U-8.2-Annual Increment, U.8.3 for EPF, U.16.8.3.4 (any other (ESI,GST and Admin Cost) ) மேற்கொள்ளவும் ,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *07.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**நி.ம.உ.து.ந.க.எண்.எல்இ8/1023-2/2019**

**தீர்மான எண்.799/2019** **நாள்:09-12-2019**

**நிலம் மற்றும் உடைமைத்துறை - மண்டலம் 12, வார்டு 157 - சேதுலஷ்மி நகர் பகுதியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையில் Pumping Station அமைக்க சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்க அனுமதி.**

மேற்பார்வை பொறியாளர், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் அவர்களின் 30.04.2019 நாளிட்ட கடிதத்தில், மணப்பாக்கம் கிராமம், மண்டலம்-12, வார்டு-157, சேதுலஷ்மி நகர் பகுதியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையில் Pumping Station அமைக்க சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியத்திற்கு ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 13.05.2019 நாளிட்ட கூட்டுப்புலத்தணிக்கை குறிப்பில், மேற்படி சாலை பெருநகர சென்னை மாநகராட்சியால் சிமெண்ட் சாலை போடப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. தற்போது மேற்படி சாலை ஓரத்தில் 2 x 2 அடிக்கு சிறிய பம்ப் அறை உள்ளது இதனையொட்டிய புலங்கள் அனைத்தும் பட்டா நிலங்களாகும். இந்த சாலையில் பூமிக்கு அடியில் 10 x 10 சதுர மீட்டர் பம்பிங் ஸ்டேஷன் அமைத்து, சாலையை சீர்செய்து தர வேண்டும் என்ற நிபந்தனையுடன் மேற்படி இடத்தில் சென்னை குடிநீர் வழங்கல் (ம) கழிவுநீரகற்று வாரியத்திற்கு அனுமதி வழங்கலாம் என தெரிவித்துக்கொள்ளப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் அலுவலர்/நிமஉது அவர்களின் 17.05.2019 மற்றும் 29.08.2019 நாளிட்ட கடிதத்தில், இப்பொருள் சம்பந்தமான முழு விவரத்துடன் கூடிய விரிவான அறிக்கையினை விரைவில் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு மண்டல அலுவலர்-12 அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது.

அதனைத்தொடர்ந்து மண்டல அலுவலர்-12 அவர்களின் 29.10.2019 நாளிட்ட கடிதத்தில், மேற்படி சாலையின் ஓரத்தில் பூமிக்கு அடியில் 10 x 10 சதுர அடி (100 சதுர அடி) அளவுள்ள இடத்தில் Pumping Station அமைக்க பரிந்துரைக்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நேர்வில், மணப்பாக்கம் கிராமம், மண்டலம்-12, வார்டு-157, சேதுலஷ்மி நகர் பகுதியில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சியின் கட்டுப்பாட்டில் உள்ள சாலையின் ஓரத்தில் பூமிக்கு அடியில் 10 x 10 சதுர அடி (100 சதுர அடி) நிலத்தினில் கழிவுநீரேற்று நிலையம் (Pumping Station) அமைக்க, சாலையினை மீண்டும் மறுசீரமைத்து தர வேண்டுமென்ற நிபந்தனையின் அடிப்படையில், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"நிபந்தனையின் அடிப்படையில், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்திற்கு வழங்குவதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>ப.து.ந.க.எண்.D1/2528/2019</u>**

**தீர்மான எண். 800/2019** **நாள்:09-12-2019**

## <u>தானப்பத்திரம்</u>

M/s. V. Guruswamy Naidu & Co Private Limited represented by its power agent M/s.. Casagrand Magick Rufy Private Limited, represented by its Authorized Signatory Thiru. Sumanth Krishna அவர்கள் T.S.No.1, 2/2 & 2/3, Block No.68, (Old S.No.500/1 part, 2 part, 501, 512/1,2, 513/1 part, 2 part) and T.S.No.3/1 part, Block No.67 (Old S.No.515/2, 518, 519, 520 part, 521/1, 2 part, 524 part) Ward – B Ambattur village, என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தில் விண்ணப்பம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள பூங்கா மற்றும் சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள். *21.08.1984* ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் படி, இம்மனைப்பிரிவில் பூங்கா மற்றும் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்படவேண்டும்.

விண்ணப்பதாரர் M/s. V. Guruswamy Naidu & Co Private Limited represented by its power agent M/s.. Casagrand Magick Rufy Private Limited, represented by its Authorized Signatory Thiru. Sumanth Krishna விண்ணப்பித்துள்ள உத்தேச மனைப்பிரிவில், பூங்கா மற்றும் சாலைக்காக ஒதுக்கப்பட்ட நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க விண்ணப்பதாரர் அறிவுறுத்தமாறு உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்கள் *22.11.2019* நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

விண்ணப்பதாரர் M/s. V. Guruswamy Naidu & Co Private Limited represented by its power agent M/s.. Casagrand Magick Rufy Private Limited, represented by its Authorized Signatory Thiru. Sumanth Krishna மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த திட்ட வரைபடத்தின்படி, மேற்படி நிலத்தின் மொத்த பரப்பளவு 40016.00 சதுர மீட்டர் பரப்பளவு ஆகும். அவற்றில் சாலை விரிவாக்கத்திற்கென 335.00 சதுர மீட்டர் பரப்பளவு மற்றும் பூங்காவிற்காக 3990.00 சதுர மீட்டர் பரப்பளவு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்நிலத்தின் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானம் அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்கள்.

எனவே M/s. V. Guruswamy Naidu & Co Private Limited represented by its power agent M/s.. Casagrand Magick Rufy Private Limited, represented by its Authorized Signatory Thiru. Sumanth Krishna தானப்பத்திரம் மூலம் பூங்கா மற்றும் சாலை விரிவாக்கத்திற்கான நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலை மற்றும் தெரு விளக்குகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்படவேண்டும்.

தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.6,30,000/-(ரூபாய் ஆறு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்) விண்ணப்பதாரர் M/s. V. Guruswamy Naidu & Co Private Limited represented by its power agent M/s.. Casagrand Magick Rufy Private Limited, represented by its Authorized Signatory Thiru. Sumanth Krishna அவர்களிடமிருந்து வசூலிக்கப் படவேண்டும்.

எனவே,

(2) சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலத்தில் சாலைகள் மற்றும் தெரு விளக்குகள் அமைக்க தேவையான தொகை ரூ.47,30,000/- *(*ரூபாய் நாற்பத்தியேழு இலட்சத்து முப்பதாயிரம் மட்டும்*)* விண்ணப்பதாரர் (1) Mrs. S. Sethulakshmi (2) Mrs. Indira Kamu Reddy (3) Mrs. P. Rani (4) Mrs. B. Mallika ஆகிய *4* நபர்களிடமிருந்து "ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி" என்ற பெயரில் வரைவு காசோலையாக வசூலிக்கவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(நகரமைப்பு*)* மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தானப்பத்திரம் *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.இ9/35955/2019**

**தீர்மான எண்.809/2019** **நாள்:13-12-2019**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - நான்காம் நிலைப் பணியாளர் திரு.ப்பி.சீனிவாசன், துப்புரவு பணியாளர், பணி எண்.692201, கோட்டம்-78, பகுதி-17, மண்டலம்-6 அவர்கள் 17.12.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-17, கோட்டம்-78ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திரு.ப்பி.சீனிவாசன், பணியாளர் எண்.692201 என்பவர் சென்னை மாநகராட்சியில் துப்புரவு பணியாளராக 15.09.1989 முதல் பணிபுரிந்து வரும் தனக்கு உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் மருத்துவரின் ஆலோசனைப்படி, தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 19.09.2019 அன்று மனு அளித்துள்ளார்.

மேற்காணும் தனியரின் பணிப்பதிவேட்டின்படி, திரு.ப்பி.சீனிவாசன், துப்புரவு பணியாளர் அவர்களுக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களின் 09.09.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் இச்சங்கத்தில் உறுப்பினராக இருந்து நிலுவை தொகை ரூ.6,46,480/- (ஆறு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து நானூற்று எண்பது மட்டும்) செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, காவல்துறை துணை கண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 06.12.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரின் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-6 அவர்களின் 09.12.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது எவ்வித ஒழுங்கு நடவடிக்கையும் இல்லை எனவும், ஊதியமில்லா விடுப்புகள் ஏதும் துய்க்கவில்லை எனவும், தனியரை 17.12.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு, ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி, வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டின்படி திரு.ப்பி.சீனிவாசன், துப்புரவு பணியாளர் அவர்களின் பிறந்த தேதி 07.11.1966 என்பதால், தனியர் ஓய்வு பெறும் நாள் 30.11.2026 ஆகும். மேலும், தனியரின் வயது 53 வயது பூர்த்தி செய்துள்ளார்.

வட்டார துணை ஆணையர் (மத்தியம்) அவர்களின் 11.12.2019 நாளிட்ட கடிதத்தில், திரு.ப்பி.சீனிவாசன், துப்புரவு பணியாளர் (பணி எண்.692201) கோட்டம்-78, பகுதி-17, மண்டலம்-6 என்பவரின் 19.09.2019 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவினை ஏற்கப்பட்டு, சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களுக்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவை தொகை ரூ.6,46,480/- (ஆறு இலட்சத்து நாற்பத்து ஆறாயிரத்து நானூற்று எண்பது மட்டும்) மற்றும் உள்ளாட்சி நிதி தணிக்கை துறையால் தெரிவிக்கப்படும் நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்டகால முன்பணம் நிலுவை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திரு.ப்பி.சீனிவாசன், துப்புரவு பணியாளர் அவர்களை 17.12.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்க, சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.க.கு.ந.க.எண். அ8/1918 / 2019**

**தீர்மான எண்.810 / 2019** **நாள்: 13-12-2019**

**மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி (தமிழ் நாடு) மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் *01.10.2019* முதல் *31.12.2019* வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் *7.9%* என நிர்ணயித்து (ஏழு புள்ளி ஒன்பது சதவீதமாக) அரசாணைகள் வழங்கப்பட்டது - அரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை(நிலை) எண்.334, நிதி(படிகள்)த்துறை நாள். 24.10.2019 மற்றும் அரசாணை(நிலை) எண்.361, நிதி (PGC-I)த்துறை, நாள். 08.11.2019ல் தமிழ்நாடு பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வூதிய பங்களிப்பு திட்டம் (2019-2020) 01.10.2019 முதல் 31.12.2019 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 7.9% என (ஏழு புள்ளி ஒன்பது சதவீதமாக) நிர்ணயித்து அரசாணைகள் வெளியிடப்பட்டது.

அரசாணைகள் விபரம் கீழ்கண்டுள்ளவாறு இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

## FINANCE [Allowances] DEPARTMENT

**G.O.Ms.No.334, Dated 24th October 2019**

(Vikari, Aippasi-7, Thiruvalluvar Aandu 2050)

**ABSTRACT**

**Provident Fund —** General Provident Fund (Tamil Nadu) — **Rate of interest for the financial year 2019-2020 — With effect from 01-10-2019 to 31-12-2019** — Orders — Issued.

---

**Read the fo1lowing:**

1. G.O.Ms.N0.126, Finance [Allowances] Department, dated 24-O4-2019.
2. G.O.Ms.N0.223, Finance [Allowances] Department, dated 18-07-2019.
3. From the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi Resolution F.N0.5(2)-B(PD)/2019, dated 21-10-2019.

**-000-**

**ORDER:**

In the Government Orders first and second read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulations at the credit of the subscribers of General Provident Fund [Tamil Nadu] during the financial year 2019-2020 as detailed below:

| SL. No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01.04.2019 to 30.06.2019 | 8.0% |
| 2. | II | 01.07.2019 to 30.09.2019 | 7.9% |

**2.** The Government of India, in its resolution third read above, announced that during the year 2019-2020, accumulations at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 7.9% (Seven point nine per cent) with effect from 1st October, 2019 to 31st December, 2019.

**3.** The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund [Tamil Nadu] shall carry interest at the rate of 7.9**%** (Seven point nine per cent) with effect from 1st October, 2019 to 31st December, 2019.

**4**. The rate of interest on belated final payment of Provident Fund accumulations remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rate as ordered in par - 3 above.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S.KRISHNAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

**ம.க.கு.ந.க.எண். அ8/1918/2019**

# FINANCE [PGC-I] DEPARTMENT

**G.O.Ms.No.361, Dated 08th November 2019**

(Vihari, aippasi-22, Thiruvalluvar Aandu 2050)

**ABSTRACT**

**PENSION — Contributory Pension Scheme** (Tamil Nadu) – **Rate of interest for the financial year 2019-2020 — With effect from 1-10-2019 to 31-12-2019** — Orders — Issued.

---

**Read the fo1lowing:-**

1. G.O.Ms.No.150, Finance [PGC-I] Department, dated 15-05-2019.
2. G.O.Ms.No.263, Finance [PGC-I] Department, dated 14-08-2019.
3. G.O.Ms.No.334, Finance [Allowances] Department, dated 24-10-2019.

**-oOo-**

**ORDER:**

In the Government Orders first and second read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulation at the credit of the subscribers of Contributory Pension Scheme (Tamil Nadu) during the financial year 2019-2020 as detailed below:

| SL. No. | Quarter | Period | Rate of Interest |
|---|---|---|---|
| 1. | I | 01.04.2019 to 30.06.2019 | 8.0% |
| 2. | II | 01.07.2019 to 30.09.2019 | 7.9% |

2. In the Government Order third read above, the rate of interest for accumulation at the credit of subscribers to the General Provident Fund [Tamil Nadu] were fixed at the rate of **7.9%** (Seven point nine percent) for the period from 1st October, 2019 to 31st December, 2019.

3. The Government now direct that the rate of interest on the accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme (Tamil Nadu) shall be fixed at **7.9%** (Seven point nine percent) for the period from 1st October, 2019 to 31st December, 2019.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**M.A.SIDDIQUE,**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT (EXP)**

எனவே, அரசாணை (நிலை) எண்.334, நிதி(படிகள்)த்துறை, நாள்.24.10.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.361, நிதி *(PGC-I)*த்துறை, நாள்.08.11.2019 ஆகிய அரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *12.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ அரசாணையை அமல்படுத்த சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**ம.அ.5 ந.க.எண்/ 13784/ 2019**

**தீர்மான எண்.811/2019** **நாள்: 13-12-2019**

**மண்டலம்-5, வார்டு-55 , மங்கம்மா சந்து, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகரட்சிக்கு சொந்தமான பொது மருந்தக கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55க்கு உட்பட்ட மங்கம்மாள் சந்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான மருந்தகம் உள்ளது. தற்போது இக்கட்டிடத்தில் மருந்தகம் செயல்படவில்லை. மேலும் இந்த மருந்தக கட்டிடம் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, இந்த மருந்தக கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்ட உத்தேசிக்கபட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள மருந்தக கட்டிடம் சுமார் 50 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. எனவே, இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த மருந்தக கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக துறைமுக சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் 2019-20 ஆம் ஆண்டு நிதியில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவினை தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 10.35 x 8.85 = 91.15 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ."0" பூஜ்ஜியம்

ஆகவே, மண்டலம்-5, வார்டு-55, மங்கம்மாள் சந்தில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள இந்த மருந்தகம் கட்டிடத்தை இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" பொது மருந்தக கட்டிடம் இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.5 ந.க.எண்/ 13783/ 2019**

**தீர்மான எண்.812/2019** **நாள்: 13-12-2019**

**மண்டலம்-5, வார்டு-55 , பரமானந்தா தெரு, மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சென்னை நடுநிலை பள்ளி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55க்கு உட்பட்ட பரமானந்தா தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சென்னை நடுநிலை பள்ளி கட்டிடம் உள்ளது. தற்போது இக்கட்டிடத்தில் சென்னை நடுநிலைபள்ளி செயல்படவில்லை. மேலும் இந்த கட்டிடம் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, இந்த கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்ட உத்தேசிக்கபட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள சென்னை நடுநிலைபள்ளி கட்டிடம் சுமார் 49 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. எனவே, இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த சென்னை நடுநிலைபள்ளி கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக துறைமுக சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் 2019-20 ஆம் ஆண்டு நிதியில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்க்கு ஆகும் செலவினை தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 14 மீ x 11 மீ = 154 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ."0" பூஜ்ஜியம்

எனவே, மண்டலம்-5, வார்டு-55 பரமானந்தா தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள சென்னை நடுநிலைபள்ளி கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" பழுதடைந்த நடுநிலைப்பள்ளி கட்டிடம் இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(பணிகள்), மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>ம.அ.5 ந.க.எண்/ 13785/ 2019</u>**

**தீர்மான எண்.813/2019** **நாள்:13-12-2019**

**<u>மண்டலம்-5, வார்டு-55 , டேவிசன் தெரு, காவலர் குடியிருப்பு - பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.</u>**

மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55 க்கு உட்பட்ட டேவிசன் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான அங்கன்வாடி கட்டிடம் உள்ளது. தற்போது இக்கட்டிடத்தில் அங்கன்வாடி செயல்படவில்லை. மேலும், இந்த அங்கன்வாடி கட்டிடம் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, இந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்ட உத்தேசிக்கபட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள அங்கன்வாடி கட்டிடம் சுமார் 29 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த அங்கன்வாடி கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக துறைமுக சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் 2019-20 ஆம் ஆண்டு நிதியில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு ஆகும் செலவினை தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 15.50 மீ x 5.50 மீ = 86.80 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ. "0" பூஜ்ஜியம்

எனவே, மண்டலம்-5, வார்டு-55 டேவிசன் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள அங்கன்வாடி கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**" பழுதடைந்த அங்கன்வாடி கட்டிடம் இடிப்பதற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**S.P.D.C.No. 01461/2019**

**Resolution No.814 /2019 Date:13-12-2019**

**Special Projects Department – Placing of Request for Proposal (RfP) for selection of consultants for "Model & SMART Corporation Schools in Chennai"under the CITIIS Challenge – Request to call for Consultancy Services - For Orders.**

CITIIS (City Investments To Innovate, Integrate and Sustain) is the main component of the 'Program to fund Smart City projects through a Challenge Process' launched by the Ministry of Housing and Urban Affairs (MoHUA) in July 2018. The CITIIS Challenge is a collaborative effort of MoHUA, AFD (France) and European Union (EU). CITIIS aims to foster sustainable, innovative and participatory approaches to projects within the Smart Cities Mission. Under the CITIIS component, from over 65 proposals around the country, 12 projects have been selected through a challenge process and scrutiny by a qualified jury. Selected cities will be provided financial assistance in the form of loan and technical support and in the form of tailor-made mentorship (expertise), over a period of three years. This support will be managed and coordinated by a Program Management Unit (PMU) at the National Institute of Urban Affairs (NIUA) in New Delhi.

The "Model & SMART Corporation Schools in Chennai" proposal by CSCL has got selected among the top 12 projects in the country. D.O letter dated.07.02.2019 from Director, Smart Cities, MoHUA communicated to CSCL regarding the selection of the proposal "Model & SMART Corporation Schools" in the CITIIS challenge.

The total project cost is estimated at Rs. 95.25 Cr, out of which Rs. 19.05 Cr shall be borne by the SPV (CSCL). The remaining Rs. 76.2 Cr shall be an AFD loan disbursed to CSCL for this project purpose, out of which 50% shall be repaid by the Govt. of Tamil Nadu. Letter dated.18.03.2019 from Principal Secretary, MA&WS Department, in principle concurrence of Government of Tamil Nadu was obtained for repayment of 50% of the AFD loan amount of Rs. 76.2 Cr. i.eRs. 38.1 Cr.

Further, a tripartite agreement has been signed between CSCL, Government of Tamil Nadu and Government of India for this project. Subsequently, a Government Order has been issued vide G.O (D) No. 351 dated 03.09.2019, wherein the powers to approve and sanction this project have been delegated to the CSCL Board from the High Power Project Sanctioning Committee including its technical appraisal. This had been issued with the concurrence of the Finance Department.

Further, CSCL Board had accorded administrative sanction vide Resolution dated.18.02.2019, to finance Rs. 19.05 Cr as grant for "Model & SMART Corporation Schools in Chennai". Further the board resolved that the project shall be financed as grant from Chennai Smart City Fund to Greater Chennai Corporation (implementing agency).

The CITIIS challenge project is split into three distinct phases: (i) The proposal stage, (ii) the maturation stage and (iii) the implementation phase. The total project time period is of 3 years (from 19$^{th}$ March 2019 to 18$^{th}$ March 2022). Currently, the project has progressed from the proposal stage and is in the midst of the maturation phase. NIUA have appointed one foreign mentor and one domestic mentor for this project. Several interactions with the mentors and NIUA experts have been carried out by CSCL and GCC to conceptualize this project.

**S.P.D.C.No. 01461/2019**

Also, in coordination with the Education Department of GCC, 46 Corporation schools in 28 locations/campuses have been shortlisted for this project. At this juncture, it is proposed to appoint a reputed Programme Management Consultants (PMC) to handhold and run the CITIIS Project "Model & SMART Corporation Schools in Chennai" for a period of 24 months.

The Programme Management Consultancy (PMC) is divided into following three phases, the brief description under each phase are mentioned below:

1. **Phase I:** Baseline Study, Feasibility Study, Preparation of a Detailed Project Report (DPR), encompassing all transformational areas envisaged under this project. (06 months)
2. **Phase II:** Modelling of optimal Procurement of Solution/ Infrastructure/Services for all transformational areas/modules envisaged under this project, preparation of corresponding RfP/tender documents, Contractor On-boarding, providing end to end transaction advisory services etc. (03 months)
3. **Phase III:** Provision of Project Monitoring Services, which shall include monitoring the implementation of the project, suggesting course correction wherever required until the completion certificate is issued. (15 months)

The cost of the Consultancy (All 3 phases) is estimated at Rs. 4.30 Crores excluding GST @ 18%. The total estimate cost including GST amounts to Rs.5.08 Crores. The cost of consultancy shall be met out from the CITIIS Challenge funds. The cost break up is detailed in the table below:

| ***Programme Management Consultancy - Core Team*** | | | | | |
|---|---|---|---|---|---|
| **Resource** | **Phase of Work** | **No. of Resources** | **No. of Man Months** | **Cost Per Resource Per Month (In Rs)** | **Total Cost (In Rs)** |
| Team Leader | All 3 Phases | 1 | 24 | 300000 | 7200000 |
| Education Expert | All 3 Phases | 1 | 24 | 200000 | 4800000 |
| Infrastructure Expert | All 3 Phases | 1 | 15 | 200000 | 3000000 |
| IT Expert | All 3 Phases | 1 | 18 | 200000 | 3600000 |
| Procurement Expert | Phase 2 | 1 | 6 | 200000 | 1200000 |
| Senior Research Associate | All 3 Phases | 1 | 24 | 100000 | 2400000 |
| Research Associate | All 3 Phases | 1 | 24 | 100000 | 2400000 |
| Senior Planning Engineer | Phase 3 | 1 | 12 | 150000 | 1800000 |
| Project Monitoring Engineer | Phase 3 | 4 | 48 | 100000 | 4800000 |
| **Sub Total (Programme Management Consultancy)** | | | | | **31200000** |
| **Administrative Expenses @ 2%** | | | | | **624000** |
| **Sub Total (A)** | | | | | **31824000** |
| ***Architecture & Landscaping*** | | | | | |
| **Resource** | **Phase of Work** | **No. of Campuses** | **Total Area of School Building** | **Cost Per Sq. Feet** | **Total Cost** |
| Architect (10 Individuals or Sub-Contracted Firms) | Phase 1 | 28 | 225000 | 50 | 11250000 |
| **Sub Total (B)** | | | | | **11250000** |
| **TOTAL (A+B)** | | | | | **43074000** |
| **GST @ 18%** | | | | | **7753320** |
| **TOTAL CONSULTANCY CHARGES** | | | | | **50827320** |

**S.P.D.C.No. 01461/2019**

The full RfP document is attached in Appendix 1. Also, it is to be noted that both the Domestic and Foreign Mentors of CITIIS project have approved the RfP document vide E-Mail approval dated.21.11.2019 & 25.11.2019. The estimated cost for Programme Management Consultancy is Rs.5,08,27,320/-

Hence, in these circumstances,

1. For Sanction of the estimates of Programme Management Consultancy for Rs.5,08,27,320/-for "Model & SMART Corporation Schools in Chennai" project under the CITIIS Challenge.
2. To approve the RfP document for inviting bids for Consultancy services for "Model & SMART Corporation Schools in Chennai" under the CITIIS Challenge by Special projects department, GCC.
3. Consultant payment shall be met out from the "CITIIS Challenge Fund" through Chennai Smart City Limited.

Sl.No. 1 to 3 above,orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Coucil are requested. Commissioner's Note dated.13.12.2019 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ1/7918/2019</u>**

**தீர்மான எண்.815/2019** **நாள்:13-12-2019**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - உதவி கணக்கு அலுவலர் பதவி குறித்து - 2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15 - நிதிக்குழுவின் அரசாணையின்படி - பத்தி நீக்க பதில் அனுப்பப்பட்டது - உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் பதில் ஏற்றுக்கொள்ளபடாதது - அரசாணையின்படி பத்தி நீக்கம் செய்வதற்கு அனுமதி.</u>**

2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15ல் பெருநகர சென்னை மாநகராட்சியில், உதவி கணக்கு அலுவலர் பதவியில் பதவி உயர்வு பெற்றவர்களுக்கு, அரசின் கருவூலக் கணக்குத் துறையில் அனுமதிக்கப்படும் தொகை ரூ.9300-34800+5100 என்ற ஊதியத்தை விட மிகையாக ரூ.15600-39100+5400 என்ற உயர் ஊதிய விகிதம் அனுமதித்தது குறைபாடு எனவும், ரூ.15600-39100+5400 தர ஊதியத்திலிருந்து ரூ.9300-34800+5100 என மறுநிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும், இதனை தொடர்ந்து 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படி 01.01.2016 முதல் level 20ன்படி ரூ.37700-1,19,500 என நிர்ணயம் செய்யப்பட வேண்டும் எனவும், ஒப்பளிக்கப்பட்ட 29 பணியிடங்களில் பணிபுரிந்த சென்னை மாநகராட்சி பணியாளர்களிடமிருந்து 12.12.2007 மற்றும் 01.04.2013 முதல் மிகை ஊதியம் கணக்கிடப்பட்டு பிடித்தம் செய்யப்பட வேண்டும் எனவும், மேலும் கோப்புகள் மற்றும் ஆவணங்களில் உதவி கணக்கு அலுவலர் என்பதற்கு பதிலாக கணக்கு அலுவலர் என்ற பதவி பெயரை பயன்படுத்துவதை தவிர்க்கப்பட வேண்டும் எனவும் தடை எழுப்பப்பட்டுள்ளது.

இணை ஆணையர் (வருவாய் (ம) நிதி) அவர்களின் 08.08.2019 நாளிட்ட குறிப்பில் மேற்கண்ட 2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15யை நீக்குமாறு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பொதுத்துறையின் 08.08.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக மேற்குறிப்பிட்ட 2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15யை நீக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் தலைமை கணக்கு அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்கள் 26.09.2019 நாளிட்ட கடிததில், இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 08.08.2019 நாளிட்ட குறிப்பின்படி, மேற்கண்ட 2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15யை நீக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டதை, உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் இதுநாள் வரை பத்தி நீக்கம் செய்யப்படவில்லை எனவும், இதனால் தங்களுக்கு வருடாந்திர ஊதிய உயர்வு, ஈட்டிய விடுப்பு சரண் செய்தல் போன்றவையும் மற்றும் ஓய்வு பெற்ற தலைமை கணக்கு அலுவலர்கள் / உதவி கணக்கு அலுவலர்களுக்கு ஓய்வூதியப் பணப்பயன்கள் ஏதும் அனுமதிக்காமல் இருந்து வருவதால் மிகுந்த மனஉளைச்சல் மற்றும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் எனத் தெரிவித்து, மேற்கண்ட பத்தியை நீக்கம் செய்ய மேல்நடவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டது.

இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 24.10.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் / பணிபுரிந்த உதவி கணக்கு அலுவலர்களுக்கு, தமிழ்நாடு ஊதிய விதிகளில் அரசாணைகளின்படியும் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தின்படியே ஊதியம் நிர்ணயம் செய்யப்படுவதால், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையால் குறிப்பிடப்பட்டுள்ள 2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15யை நீக்கும் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 05.11.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் உதவி கணக்கு அலுவலர்களுக்கு ரூ.15600-39100+5400 தரஊதியம் என்ற ஊதியமே பொருந்தும் என்ற கருத்து பின்வரும் காரணங்களால் ஏற்புடையதல்ல என்ற விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1. பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிவிதிகள் அரசின் கருவூலக் கணக்குத்துறையின் AAO பதவிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பணிவிதிகளைவிட வேறுபட்டு அமைந்திருத்தல் கூடாது.

கண்காணிப்பாளர் அளவில் கணக்கு முறைகளில் அனுபவம் பெற்ற ஒருவரையே உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு செய்யலாம்.

2. பதிலில் உள்ள அட்டவணையில் உள்ளாட்சி நிதி தணிக்கை ஆய்வர் பதவிக்கான (**Class II**) பதவி என குறிப்பிட்டு தவறாக அப்பதவியைவிட இரண்டு நிலை குறைவான உதவி ஆய்வாளர் பதவிக்கான ஊதியத்தை ஒப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. இதேபோல கருவூலக் கணக்குத்துறை உதவி கணக்கு அலுவலர் பதவிக்கும் தவறாக ஒப்பிட்டு காண்பிக்கப்பட்டுள்ளது. உள்ளாட்சி நிதித் தணிக்கை ஆய்வாளர் பதவியும் கருவூலக் கணக்குத்துறையின் உதவி கணக்கு அலுவலர் பதவியும் அரசின் வருவாய் துறையின் வருவாய் வட்டாட்சியர் பதவிக்கு இணையானது. ஆனால் ஒப்பீட்டு அட்டவணையில் அவ்வாறு இல்லாமல் இரண்டு நிலை கீழ் பதவிகளுக்கான (Entry level post) ஊதிய விகிதத்துடன் ஒப்பிட்டு பதில் அளிக்கப்பட்டுள்ளது.

3. அரசின் நிதித்துறையின் கட்டுப்பாட்டிலுள்ள கருவூலக் கணக்குத்துறை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை ஆகியவற்றில் தகுதியான நபர்கள் இல்லாததை அடிப்படையாகக் கொண்டு பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களை உதவி கணக்கு அலுவலர்களாக நியமிக்கும் தருவாயில் பகுதி கணக்குக் குழுமத்தின் கண்காணிப்பாளர்கள் / அதற்கு இணையான பணி அனுபவம் / கல்வித் தகுதி உடையவர்களையே நியமிக்க பரிசீலிக்கலாம். அவ்வாறே பணி விதிகள் அமைந்திருக்க வேண்டும். மாறாக நிர்வாக பிரிவில் 9300-34800+5100 என்ற தரஊதியம் உடைய நிர்வாக அலுவலர்களை அதே ஊதியத்திற்குரிய (from Administrative track to Accounts track) பதவிக்கு பதவி உயர்வு வழங்க பரிசீலிக்க வழி இல்லை. நிர்வாக அலுவலர் பதவியானது உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு இணையானது (Equal posts in different track). உதவி கணக்கு அலுவலர் பதவியானது ஒரு குறிப்பிட்ட அளவு தொழில்நுட்பத்தகுதி வாய்ந்தது ஆகும். ஒரு இளநிலை உதவியாளரை தட்டச்சராக பதவி உயர்வு அளிக்க வழிவகை இல்லை. தட்டச்சர் பதவிக்கு உரிய கல்வித் தகுதி உடைய நபர்களையே பதவி உயர்வு அல்லது நேரடி நியமனம் என்ற வகையில் அமர்த்தலாம். எனவே, பணிவிதிகளில் உள்ள நிர்வாக அலுவலர் அல்லது தலைமை உதவியாளர் (Administrative Officer or Head Clerk) என்ற வாசகத்தை நீக்குதல் வேண்டும். பகுதி கணக்கு குழுமத்தின் கண்காணிப்பாளர்களையே அரசின் கருவூலக் கணக்குத் துறை Accountant Greade –I பதவிக்கு இணையான கல்வித் தகுதி மற்றும் முன் அனுபவத் தகுதி ஆகியவற்றை நிர்ணயித்து அவர்களை பதவி உயர்வு மூலம் உதவி கணக்கு அலுவலர் பதவியில் நியமிக்கலாம்.

4. புரிதலில் முரண்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது போன்ற வாசகங்களை தவிர்த்தல் வேண்டும். மேலும் AAO பதவியே பெருநகர சென்னை மாநகராட்சியின் பணிவிதிகளில் அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதால் அப்பதவியைவிட உயர் பதவியான கணக்கு அலுவலர் பதவியில் அதாவது ரூ.15600-39100+5700 தரஊதியத்தினை உடைய அலுவலர்கள் எவரேனும் பணிபுரிந்தால் அவர்களை மேலும் தாமதமின்றி அவர்களின் தாய்த்துறைக்கு அனுப்புதல் வேண்டும் எனவும், அரசின் கருவூலக் கணக்குத் துறையோடு தொடர்பு கொண்டு AAO பதவிக்கு அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ள கல்வித் தகுதி முன் அனுபவத் தகுதி ஆகியவற்றில் வேறுபடாமலும் ஊதியம் தொகை 9300-34800+5100 என அளிக்கப்படும் வகையிலும் தேவையான நிர்வாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் தடைப்பத்தி எண்.15/2017-18 (பொதுத்துறை) நிலுவையாக வைத்து கண்காணிக்கப்படுகிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 05.11.2019 நாளிட்ட கடிதத்தின்படி, உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டதற்கு, கீழ்கண்ட விளக்கங்கள் தெரிவிக்கப்படுகிறது.

சென்னை மாநகராட்சி பொதுப்பணிவிதிகள் 1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு கீழ்காணுமாறு பணிவிதிகள் வகுக்கப்பட்டுள்ளது.

| Name of the Post | Method of Appointment | Qualification |
|---|---|---|
| Category – 2 Assistant Accounts Officer | By promotion from the category of Administrative Officer or Head Clerk in the Greater Chennai Corporation including Council Section in Class III who have put in not less than one year of service; or”**(G.O. Ms. No. 116 MA &WS (MC-3) Department dated.14.11.2017 effect from 31.08.2010)** | A graduate of a recognized University.<br><br>A pass in the Accounts Test for subordinate Officers Parts I and II or any other Accounts Tests prescribed by Government as equivalent thereto; and<br><br>Must have served as Administrative Officer or Head Clerk in the Greater Chennai Corporation including Council Section in Class III for a period not less than one year.” ; **(G.O. Ms. No. 116 MA &WS (MC-3) Department dated.14.11.2017 effect from 31.08.2010)** |
| | By Appointment on deputation from the category of District Inspectors of Local Funds, Junior Accounts Officers, Sub Treasury Officers, Grade I, Asst. Treasury Officers, and the Accountants Grade I, of the Treasury and Accounts Subordinate Service, who have put in not less than five years of service in their respective posts, or”;<br>By direct recruitment | Must have served as District Inspector of Local Fund Accounts, or Junior Accounts or Sub – Treasury Officer Grade I of the Assistant Treasury and Accounts Subordinate Service for a period of not less than five years.<br>A pass in the Chartered Accountant or Cost and Works Accountant (Final).”; |

தமிழ்நாடு அரசின் நிதித்துறையின் மூலமாக ஊதியக்குழு ஏற்படுத்தப்பட்டு, அரசாங்கத்தில் பணிபுரியும் ஊழியர்களின் ஊதிய விகிதங்களை நிர்ணயம் செய்து ஓரே அரசாணையாக வெளியிட்டு, அதன்படி அனைத்து துறைகள், உள்ளாட்சி அமைப்புகள், அரசின் தன்னாட்சி நிறுவனங்கள் தங்களின் பணியாளர்களுக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட வேண்டும் என ஆணையிடுகின்றது. அதன்படியே, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் உதவி கணக்கு அலுவலர்களுக்கு ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றது.

தமிழ்நாடு ஊதியக்குழுவின் அரசாணைகளின் அடிப்படையில், ஒப்பீட்டு அட்டவணையின்படி, உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையால் 2017-18 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.15யை நீக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

சென்னை மாநகராட்சி பொதுப்பணிவிதிகள் 1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு மேற்கண்ட அட்டவணையில் உள்ளவாறு பணிவிதிகள் வகுக்கப்பட்டு சென்னை மாநகராட்சி மன்றத்தின் மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு அரசுக்கு முன்மொழிவுகள் அனுப்பப்பட்டு, அவ்வாறே அரசாணைகள் பெறப்பட்டு, அரசிதழில் வெளியிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அவ்வாறு பதவி உயர்வுக்கான நபர்கள் இல்லை எனில், பணிவிதிகளில் வகுக்கப்பட்டுள்ளவாறு அயற்பணி அடிப்படையில் பணியாளர்கள் சம்பந்தப்பட்ட துறைகளில் கோரப்படுவர்.

உதவி கணக்கு அலுவலர் பணிவிதிகள் அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு, அதன்படியே நடைமுறைப்படுத்தப்படுகின்றது. மேலும் தமிழ்நாடு அரசு நிதித்துறையின், ஊதியக்குழுப் பரிந்துரையின்படியே உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு ஊதியம் வழங்கப்படுகின்றது.

தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் – 1985, 4வது ஊதிய குழு பரிந்துரையின்படியும் மற்றும் அரசாணை நிலை எண்.555, நிதித்(ஊ.கு)துறை, நாள்.10.06.1985ன்படியும் மற்றும் அரசாணை எண்.666, நிதி(Pay Commission) துறை, நாள்.27.06.1989ன்படியும், சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களின் திருத்திய ஊதிய விகிதம் துறைவாரியாக/பதவி வாரியாக அட்டவணைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில், கிடைக்கப்பெற்ற தமிழ்நாடு அரசால் வெளியிடப்பட்ட ஆவணங்கள்/ அரசாணைகளின் அடிப்படையில் தமிழ்நாடு ஊதியக்குழுவின் மூன்றாவது ஊதியக்குழு முதல் தற்போதுள்ள 7வது ஊதியக்குழு பரிந்துரையின்படியும், அரசால், வெளியிடப்பட்ட அரசாணைகளின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியின் உதவி கணக்கு அலுவலர், உள்ளாட்சி நிதி தணிக்கை துறையின் ஆய்வர் மற்றும் கருவூல மற்றும் கணக்கு துறையின் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு நிர்ணயிக்கப்பட்ட ஊதிய விகிதங்கள் பின்வருமாறு ஆணையிடப்பட்டுள்ளது.

**ஒப்பீடு அட்டவணை**

| வ.எண். (1) | தமிழ்நாடு திருத்திய ஊதிய விகிதம் மற்றும் ஆணை (2) | பெருநகர சென்னை மாநகராட்சி (உதவி கணக்கு அலுவலர்) Class II (3) | கருவூல மற்றும் கணக்கு துறை (உதவி கணக்கு அலுவலர்) Class III (4) | உள்ளாட்சி நிதி தணிக்கை (ஆய்வர்) Class III (5) |
|---|---|---|---|---|
| 1. | 3வது ஊதியக்குழு | 750-1350 | 675-1200 | 600-1050 |
| 2. | 4வது ஊதியக்குழு அரசாணை நிலை எண்.555, நிதித்(ஊ.கு)துறை, நாள்.10.06.1985 (4வது ஊதியக்குழு அறிக்கை 1985) | 1340-2435 (வரிசை எண் – 227 பக்க எண்.269) | 1160-1950 (வரிசை எண் – 10 பக்க எண்.251) | 1045-1775 (வரிசை எண் – 5 பக்க எண்.124) |
| 3. | 5வது ஊதியக்குழு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் -1989 அரசாணை நிலை எண்.666, நிதித்(ஊ.கு)துறை, நாள்.27.06.1989 | ரூ.2200-75-2800-100-4000 (அட்டவணை – 39 பக்க எண்.24) | 1640-60-2600-75-2900 (அட்டவணை – 35 பக்க எண்.22) | 1400-40-1600-50-2300-60-2600 (அட்டவணை – 32 பக்க எண்.20) |
| 4. | தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் -1998 அரசாணை நிலை எண்.162, நிதித்(ஊ.கு)துறை, நாள்.13.04.1998 | ரூ.8000-275-13500 (அட்டவணை – 1 பக்க எண்.16) | 5500-175-9000 (அட்டவணை – 1 பக்க எண்.16) | 5000-150-8000 (அட்டவணை – 1 பக்க எண்.16) |
| 5. | 6வது ஊதியக்குழு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் -2009<br><br>அரசாணை நிலை எண்.234, நிதித்(ஊ.கு)துறை, நாள்.01.06.2009 | ரூ.15600-39100 + 5400 தர ஊதியம் (அட்டவணை – 19 பக்க எண்.47) | 9300-34800 + 4400 (அட்டவணை – 13 பக்க எண்.40)<br><br>9300 – 34800 + 5100 (ஒரு நபர் குழு பரிந்துரையின்படி) | 9300 – 34800 + 4200 (அட்டவணை – 11 பக்க எண்.38)<br><br>9300 – 34800 + 5100 (ஒரு நபர் குழு பரிந்துரையின்படி) |

| | | | | |
|---|---|---|---|---|
| 6. | 7வது ஊதியக்குழு தமிழ்நாடு திருத்திய ஊதிய விதிகள் -2017 அரசாணை நிலை எண்.303, நிதித்(ஊ.கு)துறை, நாள்.11.10.2017 | ரூ. 56100-177500 Pay Band 3- (Level 22) | 37700 - 119500 Pay Band 2 - (Level 20) | 37700 - 119500 Pay Band 2 - (Level 20) |

மேற்கண்ட அட்டவணையின்படி, அரசு நிதித்துறையின் (ஊதியக்குழுவின்) ஆணைகளின்படி மட்டுமே பெருநகர சென்னை மாநகராட்சியில் உள்ள உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஊதிய விகிதம் நிர்ணயிக்கப்பட்டு, நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. ஆகையால் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு தற்போது நடைமுறையில் உள்ள ஊதிய விகிதம் விதிகளின்படி சரியானதே. இதில் குறைப்பாடுகள் ஏதும் இல்லை.

சென்னை மாநகராட்சி பொதுப்பணிவிதிகள் 1970ல் உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு, அயற்பணி அடிப்படையில் மேற்கண்ட அட்டவணையில் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் மாவட்ட ஆய்வர் பதவி, கணக்கு மற்றும் கருவூலத் துறையின் இளநிலை கணக்கு அலுவலர், சார் கருவூல அலுவலர், உதவி கருவூல அலுவலர் மற்றும் கணக்கர் நிலை 1, ஆகிய பதவிகளில் 5 ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் நிறைந்தவர்கள் மட்டுமே நியமிக்கலாம்.

ஆனால் மேற்கண்ட இரண்டு துறைகள் மூலம் சென்னை மாநகராட்சி பொதுப்பணி விதிகளின்படி தகுதியான நபர்கள் இல்லாதபட்சத்தில், மேற்கண்ட துறைகளில் கணக்கு அலுவலர்கள் மற்றும் உதவி கணக்கு அலுவலர்கள் அயற்பணி அடிப்படையில் உதவி கணக்கு அலுவலர் பணியிடத்திற்கு சென்னை மாநகராட்சியில் பணிபுரிய வருவதினால், ஊதிய முரண்பாடுகள் ஏற்படுகின்றது.

மேலும் பணிவிதிகளில் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையின் மாவட்ட ஆய்வர் பதவி, கணக்கு மற்றும் கருவூலத் துறையின் இளநிலை கணக்கு அலுவலர், சார் கருவூல அலுவலர், உதவி கருவூல அலுவலர் மற்றும் கணக்கர் நிலை 1, ஆகிய பதவிகளில் 5 ஆண்டுகள் பணிபுரிந்த அனுபவம் நிறைந்தவராக இருத்தல் வேண்டும் என பணிவிதிகள் வகுக்கப்பட்டுள்ளது. அயற்பணிக்கு வருபவர்களை ஊதிய விகிதத்தை கொண்டு நிர்ணயம் செய்து பணிவிதிகள் வகுக்கப்படவில்லை. ஆனால், உள்ளாட்சி நிதி தணிக்கை துறை, 6வது ஊதியக்குழு பரிந்துரையின் ஊதிய விகிதத்தை கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் உதவி கணக்கு அலுவலர்களுக்கு மிகை ஊதியம் வழங்கப்படுகின்றது என தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது ஏற்க இயலாத நிகழ்வு ஆகும்.

மேற்கண்ட அட்டவணையில் கலம் 3ல் குறிப்பிட்டுள்ளவாறு, தமிழ்நாடு ஊதியக்குழு பரிந்துரையின்படி சென்னை மாநகராட்சியில், உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு, தமிழ்நாடு ஊதிய விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தின்படியே, ஊதியம் வழங்கப்பட்டு வருவதால், இதில் அரசாணைகளில் விதிமீறல் ஏதுமில்லை. அரசால் வெளியிடப்படும் ஆணைகளின்படியே ஊதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதில், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையில் எழுப்பப்பட்டுள்ள தணிக்கைப்பத்தியில் தெரிவித்துள்ளவாறு மிகை ஊதியம் ஏதுமில்லை.

மேலும், கோப்புகள் மற்றும் அரசாணைகளில் உதவி கணக்கு அலுவலர் என்பதற்கு பதிலாக கணக்கு அலுவலர் என்ற பதவியை பயன்படுத்துவதை தவிர்த்து உதவி கணக்கு அலுவலர் என்ற பதவியிலேயே கோப்புகளை கையாள திருத்திய செயல்முறை ஆணை பெற தனியே நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால், உதவி கணக்கு அலுவலர் பதவிக்கான ஊதிய முரண்பாடு குறித்து எழுப்பட்ட 2017-18 ஆம் ஆண்டு தணிக்கை பத்தி எண்.15யை நீக்குமாறு இணை ஆணையர் (வருவாய் மற்றும் நிதி) அவர்களின் 08.08.2019 மற்றும் 24.10.2019 நாளிட்ட கடிதங்கள் வாயிலாக பதில் அளிக்கப்பட்டு, மேற்கண்ட பத்திகளை நீக்கம் செய்யப்படாத நிலையில், அரசால் நிர்ணயிக்கப்படும் ஊதியக்குழு பரிந்துரையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சியில் 3வது ஊதியக்குழு முதல் தற்போதுள்ள 7வது ஊதியக்குழு நிர்ணயித்துள்ள

ஊதிய விகிதங்களின்படியே, உதவி கணக்கு அலுவலர் பதவிக்கு ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கப்பட்டு வருகிறது.

எனவே, உரிய விளக்கங்கள் மற்றும் அரசாணைகளை தெரிவித்து பத்தியினை நீக்கம் செய்ய பலமுறை கடிதம் அனுப்பியும் இந்நாள் வரை மேற்படி பத்தி நீக்கம் செய்யப்படவில்லை. மேலும் இதன் காரணமாக ஓய்வு பெற்ற தலைமை கணக்கு அலுவலர்கள் / உதவி கணக்கு அலுவலர்களுக்கு ஓய்வூதியப் பணப்பயன்கள் ஏதும் அனுமதிக்காமல் இருந்து வருவதால் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்பதினை கருத்திற்கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரியும் / பணிபுரிந்த உதவி கணக்கு அலுவலர்களுக்கு, அரசாணைகளின்படி தமிழ்நாடு ஊதிய விதிகளில் நிர்ணயிக்கப்பட்டுள்ள ஊதிய விகிதத்தின்படியே ஊதியம் நிர்ணயம் செய்யப்படுவதால், உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையால் குறிப்பிடப்பட்டுள்ள 2017-18 ஆம் ஆண்டு உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையின் தணிக்கை அறிக்கை பத்தி எண்.15யை, நீக்கம் செய்வதற்கு சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ தணிக்கைத்தடை பத்தி நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு (கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பூ.து.ந.க.எண்.பி2/1715/2019**

**தீர்மான எண். 816/2019** **நாள்:17-12-2019**

**மண்டலம்-11, கோட்டம்-143, சக்தி நகர் பிரதான சாலையில் (கோட்டம்-143 அலுவலகம் அருகில்) உணர்வு பூங்கா (Sensory park) அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.1,95,36,000/-க்கான மதிப்பீட்டிற்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் முதன்முறையாக, முன்மாதிரியாக சாந்தோம் பகுதியில் 1529 ச.மீ. பரப்பளவில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாற்று திறனாளி குழந்தைகள், சிறப்பு குழந்தைகள், காட்சி குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் மற்றும் இதர குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் உணர்வுப் பூங்கா (Sensory Park) சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இப்பூங்காவில் அனைத்து வசதிகளுடன், குழந்தைகள் மிகவும் பயன்படுத்த கூடிய வகையிலும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சுகாதார வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியை பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல் ஆளுமை விருது 15.08.2019 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கூடுதலாக மேற்கண்டவாறு அனைத்து வசதிகளுடன் கூடிய மாற்று திறனாளி குழந்தைகள், சிறப்பு குழந்தைகள், காட்சி குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் மற்றும் இதர குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் மண்டலம்-13, கோட்டம்-172, கோட்டூர் கார்டன் முதல் குறுக்கு தெருவில் உள்ள சிறுவர் விளையாட்டு திடலில் ஒரு உணர்வு பூங்கா மற்றும் மண்டலம்-11, கோட்டம்-143, சக்தி நகர் பிரதான சாலை (கோட்டம்-143 அலுவலகம் அருகில்) ஒரு உணர்வு பூங்கா என இரண்டு பூங்காக்கள் அமைக்கலாம் என உத்தேசிக்கப்படுகிறது.

**மண்டலம்-11, கோட்டம்-143, சக்தி நகர் பிரதான சாலை (கோட்டம்-143 அலுவலகம் அருகில்) உணர்வு பூங்கா (Sensory park) அமைக்கும் பணியின் விவரம் பின்வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர் | : | மண்டலம்-11, கோட்டம்-143, சக்தி நகர் பிரதான சாலை (கோட்டம்-143 அலுவலகம் அருகில்) உணர்வு பூங்கா (Sensory park) அமைக்கும் பணி. |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | தலைமை பொறியாளர் / பூங்கா |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பூங்கா துறை |
| 4 | தொழில் நுட்ப ஒப்புதல் பெற்ற விவரம் | : | தலைமை பொறியாளர் / பூங்கா அவர்களின் தொழில் நுட்ப அனுமதி, எண்.03/2019-20, நாள்: 11.12.2019. |
| 5 | மதிப்பீட்டு எண் | : | |
| 6 | விலைப்பட்டியல் ஆண்டு | | 2019-20 |
| 7 | **மதிப்பீட்டின் தொகை :** | : | **ரூ. 1,95,36,000/-** |
| | (அ) பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12% | : | ரூ. 1,62,58,144.53 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு -10% | : | ரூ. 16,25,814.45 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு - 2.5 % | : | ரூ. 4,06,453.61 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 1,62,581.45 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 1,62,581.45 |
| | (ஊ) கலந்தாலுனர் கட்டணம் 3% | : | ரூ. 5,13,873.50 |
| | (எ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 4,06,551.01 |
| | **மொத்தம்** | : | **ரூ. 1,95,36,000/-** |
| 8 | ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ.12403.81 / ச.மீ. |
| 9 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | | ஆம். |
| 10 | நிதியின் மூல தன்மை | | மூல தன நிதி 2019-20 |
| 11 | இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி | | **ரூ. 1,95,36,000/-** |

**<u>பூ.து.ந.க.எண்.பி2/1715/2019</u>**

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.*1,95,36,000/-* (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஐந்து லட்சத்து முப்பத்து ஆறாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-*1919*ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி-*78*(பி)ன்படி, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும்நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *13.12..2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும்நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பூ.து.ந.க.எண்.பி2/ 1716/ 2019**

**தீர்மான எண். 817/2019** **நாள்:17-12-2019**

**பூங்கா துறை - மண்டலம்-13, கோட்டம்-172, கோட்டூர் கார்டன் முதல் குறுக்கு தெருவில் உள்ள சிறுவர் விளையாட்டு திடலில் உணர்வு பூங்கா (Sensory park) அமைக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்டுள்ள ரூ.2,23,18,000/-க்கான மதிப்பீட்டிற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பூங்கா துறை மூலம் முதன்முறையாக, முன்மாதிரியாக சாந்தோம் பகுதியில் 1529 ச.மீ. பரப்பளவில் ரூ.1.37 கோடி மதிப்பீட்டில் மாற்று திறனாளி குழந்தைகள், சிறப்பு குழந்தைகள், காட்சி குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் மற்றும் இதர குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் உணர்வுப் பூங்கா (Sensory Park) சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டது. இப்பூங்காவில் அனைத்து வசதிகளுடன், குழந்தைகள் மிகவும் பயன்படுத்த கூடிய வகையிலும் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் சுகாதார வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியை பாராட்டி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல் ஆளுமை விருது 15.08.2019 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில் வழங்கப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் கூடுதலாக மேற்கண்டவாறு அனைத்து வசதிகளுடன் கூடிய மாற்று திறனாளி குழந்தைகள், சிறப்பு குழந்தைகள், காட்சி குறைபாடுகள் கொண்ட குழந்தைகள் மற்றும் இதர குழந்தைகள் பயன்படுத்தும் வகையில் மண்டலம்-13, கோட்டம்-172, கோட்டூர் கார்டன் முதல் குறுக்கு தெருவில் உள்ள சிறுவர் விளையாட்டு திடலில் ஒரு உணர்வு பூங்கா மற்றும் மண்டலம்-11, கோட்டம்-143, சக்தி நகர் பிரதான சாலை (கோட்டம்-143 அலுவலகம் அருகில்) ஒரு உணர்வு பூங்கா என இரண்டு பூங்காக்கள் அமைக்கலாம் என உத்தேசிக்கப்படுகிறது.

**மண்டலம்-13, கோட்டம்-172, கோட்டூர் கார்டன் முதல் குறுக்கு தெருவில் உள்ள சிறுவர் விளையாட்டு திடலில் ஒரு உணர்வு பூங்கா அமைக்கும் பணியின் விவரம் பின்வருமாறு:**

| | | | |
|---|---|---|---|
| 1 | பணியின் பெயர் | : | மண்டலம்-13, கோட்டம்-172, கோட்டூர் கார்டன் முதல் குறுக்கு தெருவில் உள்ள சிறுவர் விளையாட்டு திடலில் உணர்வு பூங்கா (Sensory park) அமைக்கும் பணி |
| 2 | பரிந்துரை செய்தவரின் விவரம் | : | தலைமை பொறியாளர் / பூங்கா |
| 3 | எந்த துறைக்காக இப்பணி செயலாக்கம் | : | பூங்கா துறை |
| 4 | தொழில் நுட்ப ஒப்புதல் பெற்ற விவரம் | : | தலைமை பொறியாளர் / பூங்கா அவர்களின் தொழில் நுட்ப அனுமதி, எண். 02/2019-20, நாள்: 11.12.2019. |
| 5 | மதிப்பீட்டு எண் | : | |
| 6 | விலைப்பட்டியல் ஆண்டு | | 2019-20 |
| 7 | **மதிப்பீட்டின் தொகை :** | : | **ரூ. 2,23,18,000/-** |
| | (அ) பணியின் மதிப்பு மற்றும் ஜி.எஸ்.டி.12% | : | ரூ. 1,85,73,569.26 |
| | (ஆ) மேலான மேற்பார்வை செலவு -10% | : | ரூ. 18,57,356.93 |
| | (இ) சிறு மேற்பார்வை செலவு - 2.5 % | : | ரூ. 4,64,339.23 |
| | (ஈ) தரக்கட்டுப்பாடு – 1% | : | ரூ. 1,85,735.69 |
| | (உ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | : | ரூ. 1,85,735.69 |
| | (ஊ) கலந்தாலுனர் கட்டணம் 2.5% | : | ரூ. 5,87,057.46 |
| | (எ) மற்றைய எதிர்பாரா செலவு | : | ரூ. 4,64,205.74 |
| | **மொத்தம்** | : | **ரூ. 2,23,18,000/-** |
| 8 | ஒரு சதுர மீட்டருக்கு அல்லது ஒரு மீட்டருக்கு ஆகும் செலவு | : | ரூ.7,353.00 / ச.மீ. |
| 9 | வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா | | ஆம். |
| 10 | நிதியின் மூல தன்மை | | மூல தன நிதி 2019-20 |
| 11 | இக்கோப்பில் குறிப்பிட்ட பணிக்கு தேவைப்படும் நிதி | | **ரூ. 2,23,18,000/-** |

**பூ.து.ந.க.எண்.பி2/ 1716/ 2019**

எனவே, மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு தயாரிக்கப்பட்டுள்ள ரூ.***2,23,18,000/-*** (ரூபாய் இரண்டு கோடியே இருபத்து மூன்று லட்சத்து பதினெட்டாயிரம் மட்டும்)-க்கான மதிப்பீட்டிற்கு பெருநகர சென்னை மாநகராட்சி முனிசிபல் சட்டம் விதி-1919ன் கீழ் திருத்தப்பட்ட சட்டப்பிரிவு விதி-78(பி)ன்படி சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 13.12..2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மதிப்பீட்டிற்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும்நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**<u>ச.கு.ந.க.எண்.ச.கு. *8/ 3866 /2019*</u>**

**தீர்மான எண். 818 / 2019** **நாள்: 17-12-2019**

**<u>சட்டக்குழுமம் - தணிக்கை - *20* வருடம் முதல் *28* வருடங்கள் கடந்த நிலையில் முன்பணங்கள் - சென்னை நல நீதி மன்றத்தின் உத்தரவின்படி வழங்கப்பட்ட இறப்பு பணி கொடை - முன்பணமாக வழங்கப்பட்டதாக தவறுதலாக பதியப்பட்டுள்ளது - கோப்புகள் கிடைக்க பெறாதநிலை - முன்பணங்கள் நேர்செய்து பத்தி நீக்கம் செய்ய அனுமதி</u>**

இணை இயக்குநர் (பொ) உள்ளாட்சி நிதித்தணிக்கை *2017-18*ம் ஆண்டு *31.01.2019* நாளிட்ட தணிக்கை அறிக்கையில் *1990*ம் ஆண்டு முதல் *2013*ம் ஆண்டு வரை உள்ள காலங்களில் பெறப்பட்டதற்கான முன்பணங்களை நேர் செய்ய சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிந்து வந்த கடைநிலை ஊழியர்கள் *(Labour)* பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டவர்களின் வாரிசுதாரர்களுக்கு, சென்னை தொழிலாளர் நல நீதி மன்றத்தின் உத்தரவின்படி இறப்புகால பணி கொடை *(DCRG)* வழங்கப்பட்டது. மேற்கண்ட தொகை முன்பணம் என தவறுதலாக பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

மேற்கண்ட வருடங்களில் பணிபுரிந்த அலுவலர்கள் ஓய்வு பெற்றுவிட்டனர். அக்கோப்புகள் கையாண்டு வந்த உதவியாளர்கள் அனைவரும் ஓய்வு பெற்றுவிட்டனர். மேலும், சட்டக்குழுமம் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் இயங்கி வந்த அலுவலகம் *5* முறை இடமாற்றம் செய்யப்பட்டபோது இக்கோப்புகள் தவறியதாக அறியப்படுகிறது. கோப்புகள் தேடியும் கண்டுபிடிக்க இயலாத நிலை உள்ளது. மேலும், சில கோப்புகள் இயற்கை சீற்றத்தின் காரணமாக (மழை வெள்ளம்) சிதைந்துவிட்டன.

எனவே, மேற்படி காரணங்களினால் முன்பணங்களை நேர் செய்ய இயலாத நிலை உள்ளது.

எனவே, நேர்செய்ய வேண்டிய முன்பணங்களின் பத்திகளை நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *13.12..2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“குறிப்பில் குறிப்பிட்ட இனத்திற்கான தணிக்கைத்தடை பத்திகளை மட்டும் நீக்கம் செய்ய சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(கணக்கு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பே.சா.து.ந.க.எண்.பி1/3316/2018**

**தீர்மான எண். 819/2019** **நாள்: 17-12-2019**

**பேருந்து சாலைகள் துறை - TURIF 2018 - 19 - மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள 18 பேருந்து தட சாலைகள் மற்றும் 1947 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாலுனர்கள் சாலை பணிக்காக - திருவாளர்கள். Vax Consultants Private Limited அவர்களுக்கு உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது– கால நீட்டிப்பு வழங்க அனுமதி.**

மன்ற தீர்மான எண் 852/2018, 11.10.2018 நாளிட்ட மன்ற தீர்மானத்தின்படி, தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்டம் (TURIF2018-19) கீழ் 1965 எண்ணிக்கையிலான சாலைகளை (18 பேருந்து தட சாலைகள் மற்றும் 1947 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள்) மேம்படுத்தும் பணிக்காக ரூ.246.39 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாலுனர்கள் (PMC) நியமிப்பதற்கு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்த்தாரர் திருவாளர்கள்.**Vax Consultants Private Limited.,** அவர்களுக்கு சாலை பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் பட்டித் தொகையில் 2.00 சதவீதம் தொகை வழங்க மன்ற தீர்மானம் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. அதன்படி திட்ட மேலாண்மை செய்யும் பணியின் ஒப்பத் தொகை ரூ.3,16,18,513.00/-க்கு உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருவாளர்கள்.**Vax Consultants Private Limited.** அவர்களின் 21.06.2019 நாளிட்ட கடிதத்தில் 2019ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை உள்ள காலத்தில் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினாலும், சாலை பணிகளை குறிப்பிட்ட 6 மாத கால ஒப்பந்த காலத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டது எனத்தெரிவித்து, மேலும், தற்போது 47% பணிகள் மட்டுமே முடிவுற்ற நிலை உள்ளதாலும், திட்ட மேலாண்மை பணியினை மேற்கொள்ள மேலும் 4 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வேண்டியும் மற்றும் கால நீட்டிப்பு அளிக்கும் காலங்களுக்கு கூடுதலாக ஆகும் செலவீனமான அலுவலகத்திற்கான வாடகை, ஆய்வு வாகனம், அலுவலகத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களை கூடுதலாக 4 மாதங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக மாதத்திற்கு ரூ.18.30 இலட்சம் என நான்கு மாதத்திற்கு ரூ.73.20 இலட்சத் தொகையினை கூடுதலாக வழங்க கோரி கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு

| Additional Expenses for PMC in the extended period of the project TURIF 2018-19 | | | | |
|---|---|---|---|---|
| S.No | Description | No.of month | No.of Man | Amount |
| 1 | Administrative Official Staffs | 4 | 24 | 58,60,000.00 |
| 2 | Vehicles used for site visit | 4 | 4 | 10,00,000.00 |
| 3 | Office rent, supplies, furniture & Equipments | 4 | - | 4,60,000.00 |
| | | | Total | 73,20,000.00 |

திருவாளர்கள். Vax Consultants Private Limited. அவர்கள் சாலை மேம்படுத்தும் பணிகளை குறிப்பட்ட 6 மாத கால கட்டத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டதற்கான காரணங்களை கருத்தில் கொண்டு சாலை மேம்படுத்தும் பணிக்கான ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் திட்ட மேலாண்மை பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களும் 8 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கலாம் எனவும் மற்றும் திட்ட மேலாண்மை கலந்தாலுனர் பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். **Vax Consultants Private Limited.,** அவர்களுக்கு அவ் அலுவலகத்திற்கான வாடகை, ஆய்வு வாகனம், அலுவலகத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களை கூடுதலாக 4 மாதங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக மாதத்திற்கு ரூ.18.30 இலட்சம் என நான்கு மாதத்திற்கு ரூ.73.20 இலட்சத் தொகையினை கூடுதலாக வழங்கலாம் எனக்கருதப்படுகிறது.

**பே.சா.து.ந.க.எண்.பி1/3316/2018**

மேற்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு TURIF 2018-19 திட்டத்தின் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் திட்ட மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரான திருவாளர்கள்.Vax Consultants Private Limited., அவர்களுக்கு கூடுதலாக 8 மாதங்கள் கால நீட்டிப்பு காலத்திற்கு மாதத்திற்கு ரூ.18.30 இலட்சம் என நான்கு மாதத்திற்கு ரூ.73.20 இலட்சத் தொகையினை கூடுதலாக வழங்க ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டத்தின் (TURIF 2018-19) கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் திட்ட மேலாண்மை கலந்தாளுனர் பணி செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கு 31.12.2019 வரை கால நீட்டிப்பு வழங்க அனுமதியும்,
2) திட்ட மேலாண்மை கலந்தாளுனர் திருவாளர்கள்.Vax Consultants Private Limited, அவர்களுக்கு கூடுதலாக ரூ.73.20 இலட்சத்தினை வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 மற்றும் 2 இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும்நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பே.சா.து.ந.க.எண்.பி1/3317/2018**

**தீர்மான எண். 820/2019** **நாள்: 17-12-2019**

**பேருந்து சாலைகள் துறை - CMCDM 2018 - 19 - மண்டலம் 1 முதல் 15 வரை உள்ள 12 பேருந்து தட சாலைகள் மற்றும் 1918 எண்ணிக்கையிலான உட்புற சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாலுனர்கள் சாலை பணிக்காக - திருவாளர்கள். Vax Consultants Private Limited அவர்களுக்கு உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது –கால நீட்டிப்பு வழங்க அனுமதி.**

மன்ற தீர்மான எண் 853/2018, நாள்.11.10.2018ன்படி தமிழ்நாடு சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் (CMCDM 2018-19) கீழ் 1930 எண்ணிக்கையிலான சாலைகளை (12 பேருந்து தட சாலைகள் மற்றும் 1918 எண்ணிக்கையிலான உட்புற சாலைகள்) மேம்படுத்தும் பணிக்காக ரூ.196.21 கோடி மதிப்பீட்டில் ஒப்பந்தங்கள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்த்தாரர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டது. சாலைகளை மேம்படுத்தும் பணிக்கு திட்ட மேலாண்மை கலந்தாலுனர்கள் (PMC) நியமிப்பதற்கு ஒப்பம் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.Vax Consultants Private Limited, அவர்களுக்கு சாலை பணிகள் மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கப்படும் பட்டித் தொகையில் 2.00 சதவீதம் தொகை வழங்க மன்ற தீர்மானம் பெறப்பட்டு பணி ஆணை வழங்கப்பட்டது. அதன்படி திட்ட மேலாண்மை செய்யும் பணியின் ஒப்பத் தொகை ரூ.4,11,38,116.00/க்கு உடன்படிக்கை நிறைவேற்றப்பட்டுள்ளது.

திருவாளர்கள்.Vax Consultants Private Limited., அவர்களின் 21.06.2019 நாளிட்ட கடிதத்தில் 2019ஆம் ஆண்டு பாராளுமன்ற தேர்தல் மார்ச் மாதம் முதல் ஏப்ரல் மாதம் வரை உள்ள காலத்தில் நடத்தை விதிகள் அமுலில் இருந்த காரணத்தினாலும், சாலை பணிகளை குறிப்பிட்ட 6 மாத கால ஒப்பந்த காலத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டது எனத்தெரிவித்து, மேலும், தற்போது 63% பணிகள் மட்டுமே முடிவுற்ற நிலை உள்ளதாலும், திட்ட மேலாண்மை பணியினை மேற்கொள்ள மேலும் 4 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வேண்டியும் மற்றும் கால நீட்டிப்பு அளிக்கும் காலங்களுக்கு கூடுதலாக ஆகும் செலவீனமான அலுவலகத்திற்கான வாடகை, ஆய்வு வாகனம், அலுவலகத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களை கூடுதலாக 4 மாதங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக மாதத்திற்கு ரூ.14.05 இலட்சம் என நான்கு மாதத்திற்கு ரூ.56.20 இலட்சத் தொகையினை கூடுதலாக வழங்க கோரி கடிதம் அளித்துள்ளார்கள். அதன் விவரம் பின்வருமாறு

| Additional Expenses for PMC in the extended period of the project CMCDM 2018-19 | | | | |
|---|---|---|---|---|
| S.No | Description | No. of month | No. of Man | Amount |
| 1 | Administrative Official Staffs | 4 | 16 | 42,20,000.00 |
| 2 | Vehicles used for site visit | 4 | 4 | 9,40,000.00 |
| 3 | Office rent, supplies, furniture & Equipments | 4 | - | 4,60,000.00 |
| | | | Total | 56,20,000.00 |

திருவாளர்கள். Vax Consultants Private Limited., அவர்கள் சாலை மேம்படுத்தும் பணிகளை குறிப்பட்ட 6 மாத கால கட்டத்தில் முடிக்க இயலாத நிலை ஏற்பட்டதற்கான காரணங்களை கருத்தில் கொண்டு சாலை மேம்படுத்தும் பணிக்கான ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் திட்ட மேலாண்மை பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களும் 8 மாத காலத்திற்கு கால நீட்டிப்பு வழங்கலாம் எனவும், மற்றும் திட்ட மேலாண்மை கலந்தாலுனர் பணியினை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள். Vax Consultants Private Limited., அவர்களுக்கு அவ்அலுவலகத்திற்கான வாடகை, ஆய்வு வாகனம், அலுவலகத்திற்கான உள்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களை கூடுதலாக 4 மாதங்களுக்கு ஈடுபடுத்துவதற்காக மாதத்திற்கு ரூ.14.05 இலட்சம் என நான்கு மாதத்திற்கு ரூ.56.20 இலட்சத் தொகையினை கூடுதலாக வழங்கலாம் எனக்கருதப்படுகிறது.

**பே.சா.து.ந.க.எண்.பி1/3317/2018**

மேற்கண்ட காரணங்களை கருத்தில் கொண்டு CMCDM 2018-19 திட்டத்தின் கீழ் சாலை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்களுக்கும் மற்றும் திட்ட மேலாண்மை பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்ததாரான திருவாளர்கள்.Vax Consultants Private Limited., அவர்களுக்கு கூடுதலாக 8 மாதங்கள் கால நீட்டிப்பு காலத்திற்கு மாதத்திற்கு ரூ.14.05 இலட்சம் என நான்கு மாதத்திற்கு ரூ.56.20 இலட்சத் தொகையினை கூடுதலாக வழங்க ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1) தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உள்கட்டமைப்பு திட்டத்தின்(CMCDM 2018-19) கீழ் சாலைகள் மேம்படுத்தும் பணி மேற்கொள்ளும் ஒப்பந்ததாரர்கள் மற்றும் திட்ட மேலாண்மை கலந்தாளுனர் பணி செய்யும் ஒப்பந்ததாரர்களுக்கு 31.12.2019 வரை கால நீட்டிப்பு வழங்க அனுமதியும்,
2) திட்ட மேலாண்மை கலந்தாளுனர் கூடுதலாக ரூ.56.20 இலட்சத்தினை வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 12.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும்நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**தி.க.மே.து.ந.எண். அ4/1504/2019**

**தீர்மான எண். 821/2019** **நாள்:17-12-2019**

**திடக்கழிவு மேலாண்மை துறை – அனைத்து மண்டலங்களில் மக்கும் மற்றும் மக்காதகுப்பை மூலம் தயாரிக்கப்படும் உரம் விற்பனை செய்வதினால் கிடைக்கும் வருவாயை துப்புரவு பணியாளர்களுக்கு ஊக்க தொகையாக வழங்குவதற்கு அனுமதி**

பெருநகர சென்னை மாநகராட்சியில் உருவாக்கப்படும் குப்பையை மக்கும் மற்றும் மக்காத குப்பையாக பிரித்து துப்புரவு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று சேகரிக்கப்படும் முறை படிப்படியாக அதிகரிக்கப்பட்டுள்ளது. மக்கும் குப்பையிலிருந்து தயாரிக்கப்படும் உரத்தின் உற்பத்தி அதிகரிக்கப்பட்டுள்ளது, இதற்கு அனைத்து மண்டலங்களில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களின் செயல்திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. அவர்களுடைய கடின உழைப்பும் செயல்திறனும் இல்லாமல் இப்பணி வெற்றியடைய முடியாது. துப்புரவு பணியாளர்களை ஊக்கப்படுத்துவதற்காக உரங்களை விற்பனை செய்வதன் மூலம் கிடைக்கும் வருவாயை துப்புரவு பணியாளர்களுக்கே ஊக்க தொகையாக வழங்க ஆணையர் அவர்களின் அனுமதி பெறப்பட்டுள்ளது,

மக்கும் குப்பை மூலம் தயாரிக்கப்படும் உரங்களை விற்பனை செய்வதின் மூலம் கிடைக்கும் வருவாய் மற்றும் மறு சுழற்சி செய்யக்கூடிய உலர் கழிவுகள் மூலம் கிடைக்கும் வருவாயினை, இதில் ஈடுபடும் துப்புரவு பணியாளர்களுக்கு சமமாக பங்கிட்டு கொடுக்க வேண்டும், மேலும், துப்புரவு பணியாளர்களுக்கு வழங்கப்படும் தொகைக்கான விவரங்களான நாள், மூன்று சக்கர மிதிவண்டி எண், துப்புரவு பணியாளரின் பெயர், வழங்கப்படும் தொகை மற்றும் துப்புரவு பணியாளர்களின் கையொப்பம் ஆகிய விவரங்கள் அடங்கிய, மூன்று பதிவேடுகள் அந்தந்த உரம் தயாரிக்கும் மையங்களில் பராமரிக்கப்படுதல் வேண்டும். சம்மந்தப்பட்ட துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் உதவி செயற்பொறியாளர்கள் மூலம் எவ்விதமான புகார்களுமின்றி நேரடியாக மேற்கூறிய செயல்முறைகள் கண்காணிக்கப்பட வேண்டும் என்று ஆணையர் அவர்களின் ஆணைபெறப்பட்டுள்ளது,

எனவே மேற்கண்ட இனங்களுக்கு, சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *16.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"துப்புரவு பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை குறிப்பின்படி வழங்க, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும்நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.13.ந.க.எண்.சி3/11149/2019**

**தீர்மான எண்.822/2019** **நாள்: 17-12-2019**

**மண்டலம்-13 - பகுதி-40, வார்டு- 172ல் ஏரிக்கரை சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத இடுகாட்டின் எரியூட்டும் தகன மையத்தை இடித்து அகற்ற அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, பகுதி-40, வார்டு- 172ல் ஏரிக்கரை சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத இடுகாட்டின் எரியூட்டும் தகனமையம் உள்ளது. அந்த எரியூட்டும் தகனமையத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி(மன்றம்)அவர்களின் அனுமதி பெற வேண்டியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:-

| | |
|---|---|
| இடிக்கப்பட வேண்டிய கட்டிடத்தின் விவரம் | மண்டலம்-13, பகுதி-40, வார்டு- 172ல் ஏரிக்கரை சாலையில் அமைந்துள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத இடுகாட்டின் எரியூட்டும் தகனமையம். |
| கட்டிடம் கட்டப்பட்ட ஆண்டு | 1980-1981 |
| கட்டிடத்தின் பரப்பளவு | 86.39ச.மீ |
| இடத்தின் பரப்பளவு | 2651.63ச.மீ |
| கட்டிடத்தின் தற்போதைய புத்தக மதிப்பு | இல்லை. |
| கட்டிடம் பயன்பாட்டில் உள்ளதா | இல்லை |
| கட்டிடம்இடித்த பின் எந்தமாதிரி பயன்படுத்தப்பட உள்ளது | உரக்கிடங்கு அமைக்க திட்டமிடப் பட்டுள்ளது. |

எனவே, மண்டலம்-13, வார்டு-172 ஏரிக்கரை சாலையில் உள்ள பழுதடைந்த பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பயன்பாட்டில் இல்லாத இடுகாட்டின் எரியூட்டும் தகனமையத்தை இடித்து அகற்றசிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 15.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ பழுதடைந்த பயன்பாட்டில் இல்லாத தகனமையத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.து.ந.க.எண்.இ5/34713/2019 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்7/2057/2019**

**தீர்மான எண்.823/2019** **நாள்: 17-12-2019**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - திரு.ரா.பா.ரவிகும்மார், கண்காணிப்பாளர், அவர்கள் 24.12.2019 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் கண்காணிப்பாளராக பணிபுரிந்து வரும் திரு.ரா.பா.ரவிகும்மார் அவர்கள் சென்னை மாநகராட்சி பணியில் சேர்ந்து 33 வருடங்கள் பணி முடித்துள்ளதாகவும், தனது குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வு பெற அனுமதி வழங்குமாறு 26.09.2019 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளார்.

திரு.ரா.பா.ரவிகும்மார், கண்காணிப்பாளர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் 11.04.1986 அன்று பதிவுரு எழுத்தராக பணியில் சேர்ந்துள்ளார். தனியருக்கு பதிவுரு எழுத்தர் பதவியில் பணிவரன்முறை செய்யப்பட்டு 26.05.1988 அன்று தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தனியர் 07.07.1995 அன்று தட்டச்சராகவும், பின்பு உதவியாளராகவும், அதனைத் தொடர்ந்து 08.12.2010 முதல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பெற்று தற்போது மருத்துவ சேவைகள் துறையில் பணிபுரிந்து வருகிறார். தனியருக்கு கண்காணிப்பாளர் பதவியில் 08.12.2010 அன்று பணிவரன்முறை செய்யப்பட்டுள்ளது. திரு. ரா.பா.ரவிகும்மார், கண்காணிப்பாளர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் 11.04.1986 அன்று பதிவுரு எழுத்தராக பணியில் சேர்ந்து கீழ்க்கண்டுள்ள துறைகளில் / மண்டலங்களில் பணிபுரிந்துள்ளார். அதன் விவரங்கள் கீழ்வருமாறு அளிக்கப்படுகிறது.

| வ. எண் | பதவி | பணிபுரிந்த காலம் | பணிபுரிந்த துறை /மண்டலம் |
|---|---|---|---|
| 1 | பதிவுரு எழுத்தர் | 11.04.1986 முதல் 20.06.1995 முற்பகல் வரை | கல்வித்துறை |
| | | 20.06.1995 பி.ப முதல் 07.07.1995 வரை | இயந்திர பொறியியல் துறை |
| 2 | தட்டச்சர் | 08.07.1995 முதல் 24.06.1997 வரை | பழைய மண்டலம் 9<br>புதிய மண்டலம் 13 |
| | | 25.06.1997 முதல் 01.11.1998 வரை | பொதுத்துறை |
| 3 | உதவியாளர் | 02.11.1998 முதல் 21.11. 2002 வரை | மத்திய கணக்கு குழுமம் |
| | | 22.11.2002 முதல் 16.05.2003 வரை | பழைய மண்டலம் 6<br>புதிய மண்டலம் 9 |
| | | 17.05.2003 முதல் 24.05.2007 வரை | கல்வித்துறை |
| | | 25.05.2007 முதல் 07.12.2010 வரை | மத்திய கணக்கு குழுமம் |
| 4 | பண்டக காப்பாளர் / கண்காணிப்பாளர் | 08.12.2010 முதல் 18.12.2012 வரை | மருத்துவ சேவைகள் துறை |
| | | 19.12.2012 முதல் 17.08.2015 வரை | மத்திய கணக்கு குழுமம் |
| | | 18.08.2015 முதல் 26.09.2019 வரை | கணினி மையம் |
| | | 26.09.2019 முதல் இதுநாள் வரை | மருத்துவ சேவைகள் துறை |

தனியர் பணிபுரிந்த மேற்கண்ட துறைகள் / மண்டல அலுவலகத்திலிருந்து தனியர் மீது தணிக்கைத் தடைகள், முன்பண தீர்வு செய்தல் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் மற்றும் நீதிமன்ற வழக்குகள் ஏதும் நிலுவையில் இல்லை என தெரிவித்து அறிக்கைகள் பெறப்பட்டுள்ளது.

காவல்துறை துணை கண்காணிப்பாளர் / விழிப்பு அலுவலர் அவர்களின் 21.10.2019 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, விழிப்பு குழுமத்தில் அன்னார் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு மற்றும் ஊழல் தடுப்பு இயக்கக 22.10.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் மீது As on date, no enquiry or investigation is pending என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**பொ.து.ந.க.எண்.இ5/34713/2019 &**
**ம.சே.து.ந.க.எண்.எப்7/2057/2019**

பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்க அலுவலக 20.11.2019 நாளிட்ட கடிதத்தில் தனியர் சங்கத்தில் பெற்ற கடன் தொகையில் ரூ.8,87,200/- (எட்டு லட்சத்து எண்பத்தேழாயிரத்து இருநூறு மட்டும்) நிலுவையில் உள்ளதாகவும் அத்தொகையினை தனியரது ஓய்வுக்கால பணிக்கொடை மற்றும் இதர நிதியிலிருந்தும் பிடித்தம் செய்து சங்கத்திற்கு வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

திரு.ரா.பா.ரவிகும்மார், கண்காணிப்பாளர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் தன் விருப்ப ஓய்வு கோரி விண்ணப்பித்த நாளன்று 55 வயது பூர்த்தி செய்துள்ளார். மேலும், 33 ஆண்டுகள் தகுதியுள்ள பணக்காலம் பூர்த்தி செய்துள்ளார். அன்னாரின் மொத்த பணிக்காலம் 33 ஆண்டுகள் 8 மாதங்கள் ஆகும். தனியரின் பிறந்த நாள் 06.06.1964 அரசு விதிகளின்படி தனியர் உள்ளபடியாக வயது முதிர்வு ஓய்வு பெறும் தகுதியான நாள் 30.06.2022 ஆகும்.

அரசாணை எண்.350, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்:07.10.1991–மற்றும் அரசாணை எண்.376, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறை, நாள்:11.12.1995–ன்படி, தனியர் 33 ஆண்டுகள் 8 மாதங்கள் பணி நிறைவு செய்துள்ளதாலும், தன் விருப்ப ஓய்விற்கு 90 நாட்கள் முன்னறிவிப்பு கடிதம் சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களிடம் வழங்கியுள்ளதால், சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதிக்குட்பட்டு தன்விருப்ப ஓய்வில் (Voluntary retirement) செல்ல அனுமதிக்கலாம் என கனிவுடன் தெரிவிக்கப்படுகிறது.

மருத்துவ சேவைகள் துறையின் 02.12.2019 நாளிட்ட குறிப்பில் திரு. ரா.பா.ரவிகும்மார், கண்காணிப்பாளர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 26.09.2019 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களுக்கு அளித்துள்ளதை தொடர்ந்து தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.8,87,200/- (ரூபாய் எட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து இருநூறு மட்டும்) கடன் தொகையினை தனியரின் ஓய்வூதிய பணிக்கொடை மற்றும் இதர நிதியிலிருந்து பிடித்தம் செய்யவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் ஏதேனும் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் இதனை தனியரது ஓய்வூதிய பணிக்கொடை தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 24.12.2019 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் ஒப்புதல் வேண்டப்பட்டுள்ளது.

ஆகவே, திரு. ரா.பா.ரவிகும்மார், கண்காணிப்பாளர், மருத்துவ சேவைகள் துறை அவர்கள் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க 90 நாட்கள் முன்னறிவிப்புடன் 26.09.2019 நாளிட்ட கடிதத்தினை சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களிடம் சமர்ப்பித்துள்ளதன் அடிப்படையில் தனியர் பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய ரூ.8,87,200/- (ரூபாய் எட்டு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து இருநூறு மட்டும்) கடன் தொகையினை தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யவும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகை, நிதி இழப்பீடு, தணிக்கை தடை மற்றும் நீண்ட கால முன்பணம் சரிசெய்யப்படாமல் நிலுவையில் இருப்பது ஆகியவை பின்னர் தெரியவரின் அதனை தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படி தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 24.12.2019 அன்று பிற்பகல் முதல் தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.க.கு.ந.க.எண்.அ8/1958/2019**

**தீர்மான எண்.824/2019** **நாள்: 17-12-2019**

**மத்திய கணக்கு குழுமம் - 2019-2020-ஆம் ஆண்டிற்கு கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதங்கள் (Interest) மற்றும் அபராத வட்டி (Penal Interest) விகிதம் நிர்ணயித்து அரசாணை வழங்கப்பட்டது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த அனுமதி.**

அரசாணை (நிலை) எண்.358 நிதி (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்)த்துறை, நாள்.07.11.2019-ன்படி, கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கான வட்டி விகிதங்கள் (Interest) மற்றும் அபராத வட்டி (Penal Interest) விகிதம் 2019-2020-ஆம் ஆண்டிற்கு செயல்படுத்தும் பொருட்டு ஆணை வழங்கப்பட்டுள்ளது.

2019-2020ஆம் நிதியாண்டில் அனுமதிக்கப்படும் அனைத்து கடன்கள் மற்றும் முன்பணங்களுக்கு இவ்வட்டி விகிதம் பொருந்தும் எனவும், இவ்வட்டி விகிதங்கள் 01.04.2019 முதல் நடைமுறைக்கு வருகிறது எனவும் 2020-2021-ஆம் நிதியாண்டிற்கான வட்டி விகிதங்கள் நிர்ணயிக்கப்படும் வரை இவ்வட்டி விகிதம் தொடரும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**FINANCE (LOANS AND ADVANCES CELL) DEPARTMENT**
**G.0.Ms.No.358, Dated 07th November 2019**

(விகாரி, ஐப்பசி 21, திருவள்ளுவர் ஆண்டு 2050)

**INTEREST** - Rate of interest on Loans and Advances sanctioned by the State Government - Interest rates for the year 2019-2020 - Orders - Issued.

**READ** - the following paper:

G.O.Ms.No.43, Finance (Loans and Advances Cell) Department, dated 31.01.2019.

**ORDER:**

The Government directs that the rate of interest on various kinds of loans and advances by the State Government during the year 2019-2020 shall be as shown below:-

| Sl No. | Class of Loan / Advance | | Percent per annum for the year 2019-2020 |
|---|---|---|---|
| **1.** | **Loans to State owned Industrial / Commercial Undertakings / Corporations, etc. including Financial Corporations and all other Local Bodies and Municipal Corporations:** | | |
| | (a) | Plan Schemes for development purposes | **11.30** |
| | (b) | Other Schemes | **11.30** |
| | (c) | For capital formation and development purposes | **11.30** |
| | (d) | For Working Capital Support | **13.30** |
| | (e) | For Ways & Means advances, advances including loans to cover cash deficits | **13.30** |
| | (f) | For Ways & Means advance to Tamil Nadu Civil Supplies Corporation Limited for Public Distribution System | **9.50** |
| **2** | **Loans to Co-operative Institutions and Co-operative Banks like Land Development Bank** | | **10.20** |
| **3** | **Loans to Government Servants** | | |
| | **(i)** | **House Building Advance:** | |
| | | (a) For loans upto Rs.50,000/- | **5.00** |
| | | (b) For loans from Rs.50,001/- to 1,50,000/- | **6.50** |
| | | (c) For loans from Rs.1,50,001/- to 5,00,000/- | **8.50** |
| | | (d) Above Rs.5,00,000/- | **9.50** |
| | **(ii)** | **Conveyance Advance:** | |
| | | (a) For purchase of Motor car | **11.00** |
| | | (b) For purchase of Motor Cycle / Scooter | **8.50** |
| | | (c) For purchase of Bi - cycle | **5.00** |

**ம.க.கு.ந.க.எண்.அ8/1958/2019**

| | | | |
|---|---|---|---|
| | **(iii)** | **Other personal Loans to Government Servants:** | |
| | | (a) For purchase of Computer | **9.50** |
| | | (b) Others | **9.50** |
| **4.** | **Other items:** | | |
| | Loans which are not covered in any specific category mentioned above | | **13.30** |
| **5.** | **Value of seized stock under Essential Commodities Act, 1955** | | **6.00** |
| **6.** | **Penal Interest** | | **2.50** |

2. The above rates will be applicable for all loans and advances being sanctioned during the financial year 2019-2020 and shall deemed to have taken effect from 1st April 2019 onwards and till the new interest rates for 2020-2021 are fixed. However, the revision of rate of interest, intra-annually, is at the discretion of the Government, for which orders will be issued, if required.

3. The rates of interest are general and will not apply to cases where reduced rates of interest have been sanctioned specially by the Government or where loans have been sanctioned by the Government free of interest. The Government may also sanction Ways and Means advances at special rates of interest taking into account, the cost of borrowing of the Government.

4. The mobilization advances to Contractors for World Bank assisted Projects wherein the standard bidding documents provide for exemption from paying of interest are however exempted from payment of interest.

5. The penal interest on all overdue installments of principal and interest will be at 2.50 per cent in addition to the normal rates of interest per annum.

6. Except in the case of loans to Government Servants, interest in all cases unless specifically indicated otherwise should be paid every Calendar quarter on the outstanding balance.

7. Even at the stage of sanction of loan, in the sanction order, the period of repayment, rate of interest and schedule of repayment with dates shall be indicated. In case, it is a permanent loan, a specific mention of this fact should be made in the sanction order itself.

**(BY ORDER OF THE GOVERNOR)**

**S. KRISHNAN**
**PRINCIPAL SECRETARY TO GOVERNMENT**

எனவே, அரசாணை (நிலை) எண்.358 நிதி (கடன்கள் மற்றும் முன்பணங்கள் குழுமம்)த்துறை, நாள் 07.11.2019-ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி – நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 06.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.5 ந.க.எண்/ 15937/ 2019**

**தீர்மான எண்.825/2019** **நாள்:23-12-2019**

**மண்டலம்-5, வார்டு-55, நாட்டு பிள்ளையார் கோயில் தெரு - மிகவும் பழுதடைந்த நிலையில் உள்ள பெருநகர சென்னை மாநகரட்சிக்கு சொந்தமான பொது கழிப்பிட கட்டிடத்தை இடிப்பதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகரட்சி மண்டலம்-5, பகுதி-13, வார்டு-55க்கு உட்பட்ட நாட்டு பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான கழிப்பிடம் உள்ளது. தற்போது இக்கட்டிடத்தில் கழிப்பிடம் செயல்படவில்லை. மேலும், இந்த கழிப்பிட கட்டிடம் பழுதடைந்து பராமரிப்பு செய்ய முடியாத நிலையில் உள்ளது. எனவே, இந்த கழிப்பிட கட்டிடத்தை இடித்துவிட்டு புதியதாக பல்நோக்கு கட்டிடம் கட்ட உத்தேசிக்கபட்டுள்ளது. மேற்கண்ட இடத்தில் அமைந்துள்ள கழிப்பிடம் கட்டிடம் சுமார் 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்டது. எனவே இக்கட்டிடமானது மிகவும் பழுதடைந்துள்ளது மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ளதால் இந்த கழிப்பிட கட்டிடத்தை இடித்துவிட்டு புதிய பல்நோக்கு கட்டிடம் கட்டுதல் அவசியமாகிறது. இது சம்மந்தமாக துறைமுக சட்டமன்ற உறுப்பினர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் 2019-20 நிதியில் புதிதாக பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்க்கு ஆகும் செலவினை தருவதற்கு இசைவு தெரிவித்துள்ளார்கள்.

இக்கட்டிடத்தின் பரப்பளவு மற்றும் புத்தக மதிப்பு பின்வருமாறு குறிப்பிடப்படுகிறது.

தரை தளம் = 11.30 மீ x 4.15 மீ = 46.89 சதுர மீட்டர்

தற்போதைய புத்தக மதிப்பு = ரூ. ” 0 “ பூஜ்ஜியம்

ஆகவே, மண்டலம்-5, வார்டு-55 நாட்டு பிள்ளையார் கோயில் தெருவில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான பழுதடைந்த மற்றும் அபாயகரமான சூழ்நிலையில் உள்ள கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *17.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பொது கழிப்பிட கட்டிடத்தை இடித்து அகற்ற சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**<u>பொ.து.ந.க.எண்.ஈ2/22016/2019</u>**

**தீர்மான எண்.826/2019** **நாள்:23-12-2019**

**<u>பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - மன்றத் துறை - மன்றச் செயலாளர் - 2018-2019 (ம) 2019-2020 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் - காலிப்பணியிடம் ஏதும் இல்லாததால் இன்மைப்பட்டியல் (Nil Panel) ஆக வெளியிட அனுமதி.</u>**

பெருநகர சென்னை மாநகராட்சியில், மன்றத்துறை, மன்றச் செயலாளர் பதவிக்கான அனுமதிக்கப்பட்ட பணியிடம் 1 ஆகும். இப்பதவிக்கான 'தெரிவுப்பட்டியல் தயாரிக்கும் மையநாள் ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் 15 ஆம் தேதி ஆகும். தெரிவுப்பட்டியலின் விவரம் பின்வருமாறு:

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | பதவியின் பெயர் | மன்றச் செயலாளர் | | |
| 2. | மைய நாள் | மே-15 ம் நாள். | | |
| 3. | ஊதிய விகிதம் | ரூ.15600-39100+6600 தர ஊதியம் (அரசாணை நிலை எண்.303, நிதித் (ஊ.கு.) துறை, நாள்.11.10.2017ன்படி, நிலை:25, ரூ.59300-187700). | | |
| | ஊட்டப்பதவியின் பெயர் மற்றும் தகுதிகள் | **<u>Class II Officers of the Corporation of Madras who have served as such officers for a period of not less than five years.</u>**<br>i) B.L. Degree of any of the University in the State of Tamil Nadu or an equivalent degree of any other university in the Union of India;<br>ii) Adequate knowledge of Tamil to write notes and drafts in that language; and<br>iii) Must not have completed thirty five years of age at the time of making the application in the case of a candidate who is appointed by direct recruitment; (G.O.Ms. No.366, RD&LA, dt-19/3/86) | | |
| 4. | காலிப்பணியிட விவரம் | அனுமதிக்கப்பட்ட பணியிடம் | - | 01 |
| | | மொத்தம் | - | 01 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | - | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | - | 01 |
| | | தற்போது பணியில் உள்ள வர் | - | 01 |
| | | மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 00 |
| | | 15.05.2018 முதல் 14.05.2019 வரை (ம) 15.05.2019 முதல் 14.05.2020 வரை பணியிலிருந்து ஓய்வு பெற்றதால்/பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | பதவி உயர்வு வழங்குவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | அரசாணை (ப) எண்.103, நாள்.09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | மொத்த காலிப்பணியிடம் | - | 00 |
| 5. | கடந்த ஆண்டுக்கான தெரிவுப்பட்டியல் முழுமையாக பயன்படுத்தப்பட்டதா? இல்லையெனில் காரணம் | 2011-2012 ஆம் ஆண்டிற்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, திரு.பி.இராஜசேகர், கூடுதல் சட்ட அலுவலர் அவர்களுக்கு ஆணையர் அவர்களின் பொ.து.ந.க.எண்.ஈ2/28480/2010, 29.12.2012 நாளிட்ட செயல்முறை ஆணையில் பதவி மாற்றம் மூலம் மன்றச் செயலாளர் பதவியில் பணி நியமனம் செய்து ஆணை வழங்கப்பட்டது. தனியர் வகித்து வந்த கூடுதல் சட்ட அலுவலர் பணியிடம், அரசாணை (ப) எண்.5, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந-3) துறை,03.11.2006 நாளிட்ட அரசாணையின்படி, உதவி சட்ட அலுவலர் பணியிடமாக நிலையிறக்கம், (Down Grade) செய்யப்பட்டது.<br>2012-2013 முதல் 2017-2018 வரை மன்றச்செயலாளர் பதவிக்கு இன்மைப் பட்டியல் பொ.து.ந.க.எண்.ஈ2/33431/2017, 20.10.2017 நாளிட்ட சுற்றறிக்கை வெளியிடப்பட்டது. | | |

**பொ.து.ந.க.எண்.ஈ2/22016/2019**

தற்போது திரு.பி.இராஜசேகர், மன்றச் செயலாளர், மன்றத்துறை அவர்கள் பணிபுரிந்து வருவதாலும், தனியர் வரும் 30.06.2020ல் வயது முதிர்வில் ஓய்வு பெறவுள்ளதாலும், மன்றச் செயலாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்க இப்பதவியில் காலிப்பணியிடம் ஏதும் இல்லாத காரணத்தினால், 2018-2019 (ம) 2019-2020 ஆம் ஆண்டிற்கான மன்றச்செயலாளர் பதவிக்கான தெரிவுப்பட்டியலை "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிடப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி பணியமைப்பில் மன்றச்செயலாளர் பதவி வகுப்பு-1 (A)ன் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. அரசாணை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந3) துறையில், மன்றச்செயலாளர் பதவிக்கு "இன்மை பட்டியல்" (Nil Panel) வெளியிடுவதற்கு அனுமதியளிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, 2018-2019 முதல் 2019-2020 வரை உள்ள ஆண்டுகளுக்கான மன்றச்செயலாளர் பதவிக்கான காலிப்பணியிடம் இல்லாத நிலையில் "இன்மை பட்டியல்" (Nil Panel) ஆக வெளியிட சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"மன்றச்செயலாளர் பதவிக்கான "இன்மை பட்டியல்" (Nil Panel) வெளியிட சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.இ7/30254/2019 &**

**பொ.சு.து.ந.க.எண். சி2/2717/2019**

**தீர்மான எண்.827/2019** **நாள்:23-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பொது சுகாதாரத்துறை 2019-2020 - ஆம் அண்டில் 01.04.2019 ஐ மைய நாளாகக் கொண்டு செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superindentent) பதவி உயர்வுக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறையில் 2019-2020 ஆம் ஆண்டிற்கான செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintendent) பதவியில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தை நிரப்ப கீழ்நிலை பதவியான உதவி செவிலி கண்காணிப்பாளர் ( Assistant Nursing Superintendent) பதவியில் பணிமூப்பு அடிப்படையில் பதவி உயர்வு மூலம் நிரப்பப்பட வேண்டும் எனவும், இப்பதவிக்கு அரசாணை எண். 303, நிதி (ஊகு)த்துறை, நாள்: 11.10.2017-ன்படி, Level - 17. ரூ. 36,700 – 1,16,,200 என்ற ஊதிய விகிதத்தில் நிரப்ப பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை 3 மற்றும் 4-ம் நிலை சார்நிலை பணிகளுக்கான துணை விதிகளுக்கு மன்றத்தீர்மான எண்.113/2018, நாள்: 02.02.2018, ன்படி அனுமதி பெறப்பட்டுள்ளது.

**செவிலி கண்காணிப்பாளர் ( Nursing Superintendent)காலிப் பணியிடம் விவரம்**

| | | | | |
|---|---|---|---|---|
| 01 | பதவியின் பெயர் | செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintendent)- வகுப்பு -3 | | |
| 02 | மைய நாள் | 01.04.2019 | | |
| 03 | ஊதிய விகிதம் | Level-17, 36.700 – 1,16,200 | | |
| 04 | காலிப்பணியிட விவரம் | 1.அனுமதிக்கப்பட்ட பணியிடம் - **மொத்தம்** | - | 01 |
| | | (அ) தற்காலிக பணியிடம் | - | 00 |
| | | (ஆ) நிரந்தர பணியிடம் | - | 01 |
| | | (இ) தற்போது பணியில் உள்ளவர்கள் | - | 00 |
| | | 2. மைய நாளுக்கு முன்பு / பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம் | - | 00 |
| | | (அ) மைய நாளுக்கு பின்பு ஏற்பட்ட காலிப்பணியிடம் | - | 01 |
| | | (ஆ) 01.04.2019 முதல் 31.03.2020 வரை பணியிலிருந்து ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் | - | 00 |
| | | 3. பதவி உயர்வு வழங்குவதால் பட்டியலாண்டில் ஏற்பட்ட / ஏற்படவுள்ள காலிப்பணியிடம் | - | 00 |
| | | 4. அரசாணை எண்.103, பணியாளர் (ம) நிர்வாக சீர்திருத்தத் (எஸ்) துறை, நாள்: 09.10.2014ன்படி, $\frac{40 \times 1}{100}=0.4$ As per G.O.368. Dt.18.10.1993 add one | - | 01 |
| | | 5. மொத்தம் காலிப் பணியிடம் | - | 02 |

**பொ.து.ந.க.எண்.இ7/30254/2019 &**

**பொ.சு.து.ந.க.எண். சி2/2717/2019**

**செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintendent) பதவியின் பணி நியமன முறை**

| வ. எண் | பதவியின் பெயர் | நியமன முறை | நிர்ணயிக்கப்படும் தகுதி | குறிப்பு |
|---|---|---|---|---|
| 19 | செவிலி கண்காணிப்பாளர்(Nursing Superintendent) | உதவி செவிலி கண்காணிப்பாளர் பதவிலிருந்து பதவி உயர்வின் மூலம் | 1.தமிழ்நாடு அரசு அல்லது அரசால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களில் அளிக்கப்படும் செவிலியர் பட்டயம்.<br>2.தமிழ்நாடு செவிலியர் மற்றும் தாதியர் சட்டம் 1926ன்படி பிரிவு 1A அல்லது 1Bன்படி, செவிலியராக பதிவு செய்யப்பட்ட சான்றிதழ் | Level-17, . ரூ. 36700 –116200<br><br>நிர்ணய நாள் ஒவ்வொராண்டும் ஏப்ரல் முதல் நாள் |

மேற்கண்ட பணிநியமன விதிகளின்படி, செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintendent) பதவியில் திருமதி. பி.ஜெப ரஞ்சிதம் செல்வராணி செவிலியர் கண்காணிப்பாளர் அவர்கள் 31.08.2017 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வில் சென்றதால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடத்தை நிரப்ப துணை ஆணையர் அவர்களின் 10.07.2019 நாளிட்ட ஆணையின்படி பொது சுகாதாரத்துறையின் வாயிலாக அனைத்து துறை / வட்டார / மண்டலங்களுக்கு சுற்றறிக்கை அனுப்பப்பட்டு, கீழ்நிலை பதவியான உதவி செவிலி கண்காணிப்பாளர்களின் பதவியில் பணிமூப்பு அடிப்படையில், இப்பதவிக்கான கல்வித்தகுதி பெற்றவர்களை கொண்டு தற்காலிக தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

**2019-2020- ஆண்டிற்கான செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintendent)**

**தற்காலிக தெரிவுப்பட்டியல்**

| வ, எண் | பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் இடம் | தற்போது உள்ள பதவியில் பணியில் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1, | திருமதி. S, ஹெப்சி பாய், உதவி செவிலி கண்காணிப்பாளர் | தொற்றுநோய் மருத்துவமனை | 18.02.2019. |

மேற்கண்ட பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் அனைத்து துறை / வட்டார / மண்டலங்களுக்கு சேர்ப்பன, தவிர்ப்பன மற்றும் ஆட்சேபணை கருத்துக்கள் குறித்து 12.09.2019 அன்று சுற்றுக்கு விடப்பட்டது.

மேற்கண்ட விவரங்கள் அடிப்படையில், 2019 -2020ஆம் ஆண்டிற்கான செவிலி கண்காணிப்பாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

**2019-2020- ஆண்டிற்கான செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintendemt) இறுதி தெரிவுப்பட்டியல்**

| வ,எண் | பெயர் மற்றும் பதவி | தற்போது பணிபுரியும் இடம் | தற்போது உள்ள பதவியில் பணியிர் சேர்ந்த நாள். |
|---|---|---|---|
| 1, | திருமதி. S, ஹெப்சி பாய், உதவி செவிலி கண்காணிப்பாளர் | தொற்றுநோய் மருத்துவமனை | 18.02.2019. |

**<u>பொ.து.ந.க.எண்.இ7/30254/2019 &</u>**

**<u>பொ.சு.து.ந.க.எண். சி2/2717/2019</u>**

மேற்கண்ட நபரின் பணி விவரங்கள் பணிப்பதிவேட்டுடன் சரிப்பார்க்கப்பட்டுள்ளது. செவிலி கண்காணிப்பாளர் பதவிக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ள 1 உதவி செவிலி கண்காணிப்பாளர் மீது எந்தவித ஒழுங்கு நடவடிக்கையோ குற்றச்சாட்டுகளோ, நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 5 ஆண்டுகளில் தண்டனை ஏதும் பெறவில்லை என தெரிவித்து பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட விவரங்கள் அடிப்படையில்,

1. பெருநகர சென்னை மாநகராட்சி பொது சுகாதாரம் மற்றும் மாவட்ட குடும்ப நலத்துறை, வகுப்பு -3 மற்றும் 4-ம் நிலை சார்நிலை பணிகளுக்கான துணை விதிகளின்படி, 2019-2020-ஆம் ஆண்டில் 01.04.2019 என்ற மைய நாளாகக் கொண்டு செவிலி கண்காணிப்பாளர் (Nursing Superintent) பதவிக்கு ஊட்டப்பதவியான உதவி செவிலி கண்காணிப்பாளர் பணிமூப்பு வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்ற மேற்கண்ட 1 நபர் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,
2. இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள திருமதி. S. ஹெப்சி பாய், உதவி செவிலியர் கண்காணிப்பாளர் பொது சுகாதாரத்துறை என்பவருக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள செவிலி கண்காணிப்பாளர்(Nursing Superintendent) பதவிக்கான காலிப்பணியிடத்தில் Level-17, 36.700 – 1,16,200/- என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"செவிலி கண்காணிப்பாளர் பதவி உயர்வு, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ1/13561/2018**

**தீர்மான எண்.828/2019** **நாள்:23-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2018-19 ஆம் ஆண்டிற்கான தெரிவுப் பட்டியலில் - உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வு பெற்ற உதவி கணக்கு அலுவலர்களுக்கு - உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்துவதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி – மன்ற தீர்மானம் எண்.489/2018, நாள்.26.06.2018ன்படி, 2018-2019 ஆம் ஆண்டிற்கான உதவி கணக்கு அலுவலர் பதவி உயர்வுக்கான தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு தகுதியான 6 நபர்களுக்கு உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 03.07.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, கீழ்கண்ட 6 நிர்வாக அலுவலர்களுக்கு உதவி கணக்கு அலுவலராக பதவி உயர்வு வழங்கி ஆணையிடப்பட்டது. தனியர்களுக்கு, உதவி கணக்கு அலுவலர் பதவியில், பணியில் சேர்ந்த நாள் முதல் உறுதியாக்கம் மற்றும் பணிவரன்முறைப்படுத்தப்படவேண்டும்.

| வ. எண். | அலுவலர்களின் பெயர் மற்றும் தற்போது பணியாற்றும் துறை | உதவி கணக்கு அலுவலராக பதவியில் பணியில் சேர்ந்த நாள் | உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணிவரன் முறைப்படுத்தப்படும் நாள் |
|---|---|---|---|
| 1 | ஆர்.சத்தியவதி<br>பகுதி கணக்கு குழுமம் - மின்சாரம் தலைமையிடம் | 04.07.2018 முற்பகல் | 04.07.2018 மு.ப |
| 2 | என்.சாந்தி,<br>நிதி குழுமம் - தலைமையிடம் | 05.07.2018 முற்பகல் | 05.07.2018 மு.ப |
| 3 | எஸ்.கலா,<br>பகுதி கணக்கு குழுமம் - மண்டலம் 14 | 04.07.2018 முற்பகல் | 04.07.2018 மு.ப |
| 4 | எஸ்.நாகலட்சுமி,<br>மாவட்ட குடும்ப நலத்துறை – தலைமையிடம் | 09.07.2018 முற்பகல் | 09.07.2018 மு.ப |
| 5 | கே.சாந்தகுமாரி,<br>மண்டலம் 8 மற்றும் மத்திய வட்டார அலுவலகம் | 04.07.2018 முற்பகல் | 04.07.2018 மு.ப |
| 6 | டி.அன்பழகி,<br>பகுதி கணக்கு குழுமம் (அ) மற்றும் சுகாதாரம் - தலைமையிடம் | 04.07.2018 முற்பகல் | 04.07.2018 மு.ப |

மேற்கண்ட பட்டியலில் உள்ள உதவி கணக்கு அலுவலர்களின் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என தலைமை கணக்கு அலுவலர் (நிர்) அவர்களின் 02.11.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், பொதுத்துறையில் தனியர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

உதவி கணக்கு அலுவலர் பதவியானது வகுப்பு-2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவி வகிப்பவர்களை பணிவரன்முறைப்படுத்தும் அதிகாரம் நியமனக்குழு வசம் இருந்தது.

**பொ.து.ந.க.எண்.ஈ1/13561/2018**

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணிவரன்முறைப்படுத்தும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

எனவே, மேற்கண்ட பட்டியலில், உள்ள உதவி கணக்கு அலுவலர்களின் பணியை, தனியர்கள், உதவி கணக்கு அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 16.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**G.D.C.No.E13/35656/2019**

**Resolution No.829 /2019** **Date:23-12-2019**

**General Department – Letter from Superintendent of Police, Special Investigation Cell, DVAC VR – permission to conduct preliminary enquiry against Thiru.G.Balasubramanium, Assistant Revenue Officer, Zone-XII by the DVAC - For Orders.**

The DVAC in its letter has requested prior permission to conduct a Preliminary Enquiry against Thiru.G.Balasubramanium, Assistant Revenue Officer, Zone-XII by stating as detailed below:-

"During the course of collection of Vigilance Intelligence by an officer of this Directorate, the following information was gathered against the Suspect Officer Thiru.G.Balasubramanium, Assistant Revenue Officer, Zone-XII, O/o. The Assistant Commissioner, Alandur, Greater Chennai Corporation, Chennai District. S.O belongs to Group 'C'.

2) It is ascertained through reliable sources that the S.O Thiru.G.Balasubramanium has been working as Assistant Revenue Officer, Zone-XII at the O/o. the Asst. Commissioner, Alandur, Greater Chennai Corporation, Chennai- 16. His reputation is bad. He collects bribe from the public who approaches his office for name transfer in House Tax receipt and for availing other Corporation related services.

3) For example, one Thiru.S. Elumalai, S/o. Subramani, residing at No.23, Duraisamy Street, Kundrathur, Chennai-69 had purchased flat house situated at Door No.3/975, Bajani Koil Street, Madhathapuram, Mugalivakkam, Chennai-125 from one named E. Venkatesan S/o. Tr. Elumalai, Chennai. The above said house comes under the jurisdiction of Ward No.156 of Alandur Zonal Office of Greater Chennai Corporation. The Property (House) Tax receipt of the above said house was already in the name of Tr.E.Venkatesan, the previous owner of the said house property. The Greater Chennai Corporation mandates the purchaser of a property to transfer the ownership of the house property in the register of jurisdictional Zonal officer of the Corporation. In order to transfer the ownership to new owner from the previous owner of the house property, the new owner of the house property has to submit a petition to the Zonal Officer. The applicant, along with the petition should submit application form (Form-9), upto date Property Tax paid receipt for the said property and Demand Draft for Rs.50/- drawn in favor of "The Revenue Officer, Greater Chennai Corporation" if the submission of application exceeds three months from the date of registration in Sub Registrar Officer. The application submitted by the applicant will be scrutinized by the Assistant Revenue Officer and the Assessor will measure the building, if required and will submit the proposal to the Zonal Assistant Revenue Officer. The Zonal Assistant Revenue office will approve the proposal then the name transfer order will be issued to the applicant.

**G.D.C.No.E13/35656/2019**

4) Tr. S. Elumali, on 14.05.2019 at 14.00 hours, approached Thiru.G.Balasubramanium, Zone-XII, Assistant Revenue Officer for applying name transfer of House Tax Receipt for his house. The S.O gave the prescribed application form and asked him to fill the form and asked him to hand over the same to him with necessary enclosures. On 15.05.2019 at 3.15 hours, Tr. S. Elumali approached the S.O Thiru.G.Balasubramanium and submitted the prescribed form along with copy of Kundrathur Sub Registrar Office Document No. 6355/2018, Encumbrance Certificate, Demand Draft in favor of "The Revenue Officer, Greater Chennai Corporation" and tow cheques for the amount of Rs.3195/- and Rs.605/- for the due payment of house tax for his newly purchased house. The S.O received the application Form and instructed to pay a sum of Rs.1000/- as bribe to process the application from given by Tr.S. Elumalai. He refused to give the bribe amount to the S.O and came out the office. On 22.05.2019 at about 15.00 hours, Tr.S. Elumalai one again approached the S.O and asked about the status of name transfer of house property submitted by him. At that time, the S.O reiterated his earlier demand of Rs.1000/- from Tr.S. Elumali. Tr. S. Elumali refused to pay the bribe amount.

5) Since, Thiru. S. Elumalai, had not entertained the demand of bribe by the S.O Thiru.G.Balasubramanium, the S.O prolonged the process of transferring the name in Property Tax Receipt of the house of Tr. S. Elumalai.

6) The S.O not only in this instance, there are other instances whereby the S.O collected bribe to discharge his official duty and also harassing the public who come to his office.

7) As per the sec 17(A)(1) of Prevention of Corruption (Amendment) Act 2018. The letter further states that, as per Section 17(A)(1), the concerned authority shall convey his decision within a period of 3 months, which may, for reasons to be recorded in writing by such authority, be extended by a further period of one month.

8) In G.O.Ms.173, P&AR (N) Department, dated 19.12.2018, the Government has issued necessary instructions on the procedures to be followed consequent to the Prevention of Corruption (Amendment) Act, 2018. Hence, it is requested that prior approval may be given to this Directorate to conduct a Preliminary Enquiry against SO Thiru.G.Balasubramanium, Assistant Revenue Officer, Zone-XII, O/o. The Assistant Commissioner, Alandur, Chennai-16.

It is further submitted that, in G.O.Ms.No.173, P&AR Department, dated 19.12.2018, it is stated that, the Government of India have now introduced a new Section 17(A)(1) in the Prevention of Corruption Act, 1988, which is states that "**No police officer shall conduct any enquiry or inquiry or investigation into any offence alleged to have been committed by a public servant under this Act, where**

**the alleged offence is relatable to any recommendations made or decision taken by such public servant in discharge of his official functions or duties, without the previous approval of the authority competent to remove him from his office, at the time when the offence was alleged to have been committed".**

The Government order further states that, "4(i), where an enquiry or inquiry is proposed against Group A or Group B officer, who is or was employed at the time when the offence was alleged to have been committed, the DVAC shall forward the materials to the authority competent to remove him from office, through Vigilance Commission".

The post of Assistant Revenue Officer held by the suspected officer Thiru.G.Balasubramanium, comes under Class-II (Group-B) category and as per G.O.(Rt.) No.181, MAWS (MC-3) Department dated 06.10.2009. Council is the appointing authority for Assistant Revenue Officer post. Hence, prior approval to conduct preliminary enquiry is to be issued by the Council (i.e.) Special Officer, Greater Chennai Corporation,

Hence, to accord permission to conduct preliminary enquiry against Thiru.G.Balasubramanium, Assistant Revenue Officer, Zone-XII by the DVAC. Orders of the Special Officer- Coucil are requested. Commissioner's Note dated.16.12.2019 is read.

**" To conduct preliminary enquiry by DVAC permission given by Special Officer-Council."**

******

**S.W.M.C.No.A7/3025/2017-Package II**

**Resolution No.830 /2019** **Date:23-12-2019**

**Solid Waste Management – Tender for the project of Collection & Transportation of Solid Waste, Street Sweeping Waste (including Street Sweeping activities), Horticulture Waste and Collection & Storage of Domestic Hazardous Waste in the Zones No 11, 12, 14 & 15 (Package-II) to the Designated Processing Facility/ Dump Site/ Depositing Centres of Greater Chennai Corporation Administrative Sanction obtained – Tamil Nadu Infrastructure Development Board approved – Tender called for – Technical Bid & Financial Bid Evaluated – Tender Evaluation Committee recommendation for approval of tender – For Orders.**

The Administrative Sanction for the project of Collection & Transportation of Solid Waste, Street Sweeping Waste (including Street Sweeping activities), Horticulture Waste and Collection & Storage of Domestic Hazardous Waste in the Zones No 11, 12, 14 & 15 (Package-II) to the Designated Processing Facility/ Dump Site/ Depositing Centres of Greater Chennai Corporation was sanctioned by the government for a concession period of eight years vide G.O.(Ms).No.34, Municipal Administration and Water Supply department, dated 02.04.2018 and further Revised Administrative Sanction has been accorded vide G.O.(Ms).No.166, Municipal Administration and Water Supply Department, dated 05.12.2019. The RFP documents are also approved and vetted by Tamil Nadu Infrastructure Development Board (TNIDB), dated: 13.08.2018.

The tenders have been invited on 20.08.2018 by fixing the Bid Opening date on 24.10.2018. Subsequently due to the protests by labour unions and also requests made by the Bidders who attended the pre-bid meeting, the submission date for the bids had been extended to 28.11.2018, 07.12.2018 and then 24.12.2018.

On due date of 24.12.2018 at 4.00 pm the online tenders have been opened in the presence of Tender Evaluation Committee Members and there were no online tenders received for Packages II and recorded as such. Thereafter second call was called for and the last date of submission of Bid was fixed on 11.01.2019. On due date of 11.01.2019, the online tenders have been opened in the presence of Tender Evaluation Committee and it was found that only one Bidder M/s. Urbaser SA and Sumeet Facilities Pvt. Ltd had submitted the bid.

The quoted rate by the Bidder after negotiation was higher from the base value approved by the Tender Evaluation Committee and recommended for the cancellation of the tender and to call retender. Accordingly, a new tender was called for and the due date was fixed on 17.07.2019 which was further extended to 31.07.2019. Subsequently, the Chief Secretary conducted a review meeting regarding Solid Waste Management projects of Greater Chennai Corporation on 30.07.2019 in which it was decided to go for the decentralized waste processing units which will result in reduction of compactors. Accordingly, proposal for Revised Administrative Sanction (RAS) was submitted to Government, which was approved vide GO (Ms) No166,Municipal Adminstration and Water Supply(MC-I) dated: 05.12.2019. The bid due date was further extended up to 13.08.2019 for Package II due to changes in the RFP documents based on Chief Secretary meeting.

On the bid due date 13.08.2019, only one bid of the Consortium comprising of Urbaser S.A and Sumeet Facilities Pvt. Ltd was received which was opened on 14.08.2019 in the presence of Tender Evaluation Committee members. Subsequent to above, Tender committee meeting was conducted on 12.09.2019 in the Chamber of Special Secretary (Finance). Upon examining all the documents submitted by the Bidder, tender

evaluation committee resolved that the submitted tender is substantially responsive and the bidder is technically qualified as per the qualification criteria as set out in the tender documents. The financial bid opening date was fixed on 16.09.2019 and opened as per the procedure.

After opening of the financial bid, it was found that Bidder has quoted Initial Annual Quote (IAQ) as Rs.177,34,95,575 per annum for the scope of services to be provided as mentioned in the RFP document. Subsequent to opening of the financial bid, the bidder was negotiated to offer revised IAQ. As a response, the bidder submitted letters dated 29.11.2019 and 05.12.2019 wherein they gave their final IAQ offer of Rs. 172.50 (One Hundred Seventy-two point Five Zero) crores.

After examining all the above issues mentioned in the offer letters, the Tender Evaluation Committee made the following decisions vide Minutes of the Tender Evaluation Committee Meeting regarding Financial Evaluation, dated 02.12.2019 and 06.12.2019, about certain cost components which were not estimated earlier and certain revision based on market rate.

The summary of these costs is presented below:

| S.No. | Summary of costing of above items | Rs Lacs |
|---|---|---|
| 1 | Concrete Hard Surface for RC Bins | 66.76 |
| 2 | E-Rickshaw Charging Stations | 10.85 |
| 3 | RFID | 76.64 |
| 4 | Biometric Attendance System | 8.46 |
| 5 | Extra man-days for events/functions etc | 41.50 |
| 6 (a) | Drivers salary Revision | 237.46 |
| 6 (b) | E-rickshaw operator salary revision | 316.96 |
| 7 | RoE on PBG margin money | 187.35 |
| 8 | RoE on Working Capital Margin | 110.25 |
| Additional cost to be added to IAQ | | 1056.23 |
| IAQ Estimate approved by the Committee | | 17652.66 |

After considering all the relevant cost components which are indicated in the RFP but not accounted for in the estimates, the committee is of the view that those costs which are integral to the project KPI's delivery shall be added to the IAQ in order to reflect the true cost of the project in IAQ as well as project life cycle cost. Therefore, tender evaluation committee records that the IAQ estimate is Rs.17652.66 Lacs after incorporating all the costs as indicated in the table no-3 above.

The Bidder has submitted revised financial offer of Rs 172.50 crs, which is lower than Rs.17652.66 Lacs as estimated above. Further, the committee takes notice of the fact that this tender has received limited response despite repeated extensions and retenders. The committee is of the view that this is the third call for the tender and so, going for another retender may not be a prudent financial decision since it will lead to higher cost estimates because schedule of rates will get revised in another three months. Hence, in the interest of the project, the committee is of the view that the final offer price of Rs.172.50 crs as IAQ by the bidder may be accepted since it is lower than the estimated IAQ cost of Rs.17652.66 Lacs. So, it recommends to the Tender Accepting Authority to accept this bid.

**S.W.M.C.No.A7/3025/2017-Package II**

Based on above recommendation of Tender Evaluation committee,

1) to accept the recommendations of the Tender Evaluation Committee and to award the work of Collection & Transportation of Solid Waste, Street Sweeping Waste (including Street Sweeping activities), Horticulture Waste and Collection & Storage of Domestic Hazardous Waste in the Zones No 11, 12, 14 & 15 (Package-II) to the Designated Processing Facility/ Dump Site/ Depositing Centres of Greater Chennai Corporation to the consortium of Urbaser SA and Sumeet Facilities Private Limited at a final rate of Rs.172.50 crores (Rupees one hundred seventy two point five zero crores) as IAQ for a concession period of eight years.

2) to issue Letter of Acceptance to the consortium of Urbaser SA and Sumeet Facilities Private Limited.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி -19ல்

1) 01.01.2020 முதல் 31.03.2020 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 475 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும், தலைமையிடத்து திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம் – 7ல் குப்பைகளை அகற்ற தனியார் நிறுவனம் மூலம் தனியார் நிறுவனத்தால் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்திற்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எவ்வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலமாக பணி ஆணை வழங்கப்படும், தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும்
2) மேற்கண்ட 475 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.379/- வீதம், 91 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ.1,63,82,275/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்து மூன்று இலட்சத்து எண்பத்து இரண்டாயிரத்து இருநூற்று எழுபத்தைந்து மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண் 40 - 41 - 03 கணக்கு தலைப்பு எண் 230–15–01–00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி– நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**ம.அ.7நக.எண்.எஸ்1/8152/2019**

**தீர்மான எண்.843/2019** **நாள்:26-12-2019**

**மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி–20 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர் புறவாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 31.12.2019 உடன் முடிவடைவது - அதே 569 எண்ணிக்கை கொண்ட துப்புரவு பணியாளர்களை வைத்து 01. 01. 2020 முதல் 31. 03. 2020 வரை பணியினை மேற்கொள்வதற்கு அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட மண்டலம் -7, அம்பத்தூர் , பகுதி – 20, வார்டு – 89 முதல் வார்டு 93 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.03 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 26 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 260 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின் படி 1,594,38 இருப்பினும், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட்தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7 அம்பத்தூர் பகுதிகளில் தோராயமாக 335 மெட்ரிக் டன் குப்பைகள் வார்டு-79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது. இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது.

எனவே, தற்போது பகுதி – 20ல் (வார்டு – 89 முதல் 93 – வரை) தற்போது நிரந்தர பணியாளர்கள் இல்லாத காரணத்தாலும், வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தாலும் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்க்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

பகுதி – 20 ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை-569.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.309/2019, நாள்.14.06.2019ன்படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் 569 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.07.2019 முதல் 31.12.2019 வரை ஆறு மாத காலத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத்திட்டப் பணியானது 31.12.2019–ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7, பகுதி - 20ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து மூன்று மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துக்களின் அடிப்படையில் 569 துப்புரவு பணியாளர்கள் துப்புரவு பணியினை மேற்கொள்ள மண்டலம்-7, பகுதி-20க்கு தேவை என கணக்கிட்டு 01.01.2020 முதல் 31.03.2020 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்க்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

| வ. எண் | பகுதி எண் | துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை | தோராய செலவினம் |
|---|---|---|---|
| 1 | 20 | 569 | ரூ.379x 569 x91(நாட்கள்) = ரூ.1,96,24,241/-- |
| | | மொத்தம் | ரூ. 1,96,24,241/- |

இதனை தொடர்ந்து எதிர்வரும் காலங்களில் பொது சுகாதாரம் சீர் கெடாத வகையில் தற்காலிக துப்புரவு பணியாளர்களை கொண்டு பணிகளை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள வழி காட்டுதல்களின் அடிப்படையில் மண்டலம் 7ல் மேற்படி பணியினை திறம்பட செயல்படுத்த மேற்பார்வை பொறியாளர், திடக்கழிவு மேலாண்மை துறை அவர்களின் 06.06.2018 நாளிட்ட சுற்றறிக்கையின் படி அங்கீகரிக்கப்பட்ட விலைப்படி நாள் ஒன்றுக்கு ரூ.379/- வீதம் 569 பணியாளர்களுக்கு 91 நாட்களுக்கு

ம.அ.7.ந.க.எண்.எஸ்1/ 8152/ 2019

ரூ. 1,96,24,241/-- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றி ஆறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்றி நாற்பத்தி ஒன்று மட்டும்) என மூன்று மாத காலத்திற்கு கணக்கிடப்பட்டுள்ளது.

மேலும், தனியார் நிறுவனம் மூலம் பணிகளை மேற்கொள்ள ஒப்பம் கோரப்பட்டு கோப்பு நடவடிக்கையில் உள்ள நிலையில் தனியார் நிறுவனத்துக்கு பணி ஆணை வழங்கியவுடன் இக்கோப்பிற்கான பணி ஆணை எவ்வித நிபந்தனையுமின்றி காலாவதி ஆகிவிடும் திடக்கழிவு மேலாண்மை துறை மூலமாக பணி ஆணை வழங்கப்படும் தனியார் நிறுவனத்தால் தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளப்படும் என தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் -7, பகுதி -20ல்,

1) 01.01.2020 முதல் 31.03.2020 வரை அல்லது திடக்கழிவு மேலாண்மை துறை மூலம் மண்டலம்- 7ல் குப்பைகளை அகற்ற பணி ஆணை வழங்கும் நாள் வரை துப்புரவு பணிகளை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கம் (NULM) கீழ் பணியை தொடர்வதற்கு அதே 569 எண்ணிக்கையிலான பணியாளர்களை கொண்டு துப்புரவு பணியை மேற்கொள்ளவும்,
2) மேற்கண்ட 569 தொழிலாளர்களுக்கான குறைந்த பட்ச அடிப்படை ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.379/ - வீதம், 91 நாட்களுக்கு ஆகும் செலவு ரூ. 1,96,24,241/-- (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்றி ஆறு இலட்சத்து இருபத்து நான்காயிரத்து இருநூற்றி நாற்பத்தி ஒன்று மட்டும்) நிர்வாக அனுமதி வேண்டியும்,
3) இப்பணியை கணக்கு குறியீட்டு எண். 40-41-03, கணக்கு தலைப்பு எண் 230 – 15 – 01 – 00 கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 23.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**இ.பொ.து.ந.க.எண்.W5/015/2019**

**தீர்மான எண்.844/2019** **நாள்:26-12-2019**

**இயந்திர பொறியியல் துறை - பொதுத் தொழிற்சாலை - மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையம் - பணிகள் நிறுத்தப்பட்டது - பயன்பாடற்று நிறுத்தப்பட்டுள்ள 18 ரோடு ரோலர்களை "உள்ளது உள்ளபடி நிலையில்" தொழில் நுட்பக்குழுவால் மதிப்பீடு நிர்ணயம் செய்து திருவாளர்கள் MSTCLtd., (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் மின்னணு ஏலம் நடத்தி விற்பனை செய்ய அனுமதி.**

ஆணையர் அவர்களின் 03.08.2016 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, சாலைகள் துறையின் கீழ் சென்னை 600031, சேத்துப்பட்டு, ஸ்பர்டாங் ரோட்டில் எண். 31 என்ற விலாசத்தில் செயல்பட்டு வந்த மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையம் நிர்வாக காரணங்களால் பணிகள் முழுவதுமாக நிறுத்தம் செய்யவும், பணியாளர்களை பணியிடத்துடன் வேறு துறைக்கு மாற்றம் செய்து கொள்ளவும், மற்றும் அப்பிரிவில் உபயோகப்படுத்தப்பட்ட டிப்பர் லாரிகள், உருளை வாகனங்கள், இயந்திரப் பொருட்கள் ஆகியவற்றை இயந்திரப்பொறியியல் துறையின் மூலம் பயன்பாட்டிற்கு ஏற்ப உபயோகப்படுத்தி கொள்ளவும் / ஏலத்தில் விடவும், மன்ற தீர்மான எண். 251 / 2015 – நாள். 06.07.2015 ன் படி அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, இயந்திரப் பொறியியல் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையத்திலிருந்து பயன்படுத்த முடியாத வாகனங்கள், ரோலர்கள் மற்றும் இயந்திரங்களை தீர்வு செய்வதற்கு ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் ஆணை பெற்று மத்திய அரசு நிறுவனமான (MSTC Ltd.,) மூலம் மின்னணு ஏலம் நடத்தி விற்பனை செய்து தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுவிட்டது.

தற்போது, மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையத்தில் பயன்பாடற்ற நிலையில் 18 எண்ணிக்கையிலான ரோடு ரோலர்கள் நிறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில், கடந்த 16.05.2019 அன்று ஆணையர் அவர்கள் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்தை ஆய்வு செய்து, ஆய்வுக்குறிப்பில் மத்திய தார் கலவை நிலையத்தில் பெருநகர சென்னை மாநகராட்சியின் இயந்திரவியல் துறை சம்பந்தமான வாகனங்கள் (Road roller மற்றும் பிற) ஆகியவற்றை இயந்திர துறை பொறியாளர்கள் மூலம் கணக்கெடுத்து அவ்வாகனங்களுக்கு சரியான விலை நிர்ணயம் செய்து பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ஏலம் விடுவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள்.

மத்திய உருளை நிலையத்தின் செயல்பாடுகள் நிறுத்தப்பட்டதால் வேறு எங்கும் உருளை வாகனத்தை உபயோகப்படுத்த இயலாத நிலையில் 18 ரோலர்களையும் எவ்வித பயனுமின்றி நிறுத்துவதால் மழை வெள்ளம் போன்ற இயற்கையின் சீற்றத்தால் அதன் மதிப்பு குறையும் வாய்ப்புள்ளது.

எனவே, மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையத்தில் உள்ள 18 ரோடு ரோலர்களின் பயன்பாடு, பெருநகர சென்னை மாநகராட்சியில் (ஹைட்ராலிக் அல்லாத சாதாரண ரோலர் வாகனங்கள்) உபயோகப்படுத்த இயலாத நிலை உள்ளதால், அவைகளை உள்ளது உள்ளபடி விற்பனை செய்ய மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

மேலும், பயன்பாடற்ற 18 ரோடு ரோலர்களை மதிப்பீடு நிர்ணயம் செய்ய கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட தொழில்நுட்ப குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

1. துணை ஆணையர் (சுகாதாரம்), - தலைவர்
2. தலைமை பொறியாளர் (பாலங்கள்/இயந்திரம்), - உறுப்பினர்
3. தொழில்நுட்ப மேலாளர், மாநகரபோக்குவரத்துக்கழகம், சென்னை - உறுப்பினர்
4. மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்), - கூட்டுனர்

**இ.பொ.து.ந.க.எண்.W5/015/2019**

எனவே,

1. மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் 06.07.2015 முதல் நிறுத்தப்பட்டதால் பயன்பாடற்ற 18 ரோடு ரோலர்கள் உள்ளது உள்ளபடி விற்பனை செய்யவும்,
2. மேற்கண்ட 18 ரோடு ரோலர்களை ஆய்வு செய்து மதிப்பீடு நிர்ணயம் செய்ய கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட தொழில்நுட்ப குழு அமைத்திடவும்,
   1. துணை ஆணையர் (சுகாதாரம்), - தலைவர்
   2. தலைமை பொறியாளர் (பாலங்கள்/இயந்திரம்), - உறுப்பினர்
   3. தொழில்நுட்ப மேலாளர், மாநகரபோக்குவரத்துக்கழகம், சென்னை - உறுப்பினர்
   4. மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்), - கூட்டுனர்
3. அவ்வாறு மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்ட 18 ரோடு ரோலர்களை மத்திய அரசு நிறுவனமான (MSTC Ltd.,) மூலம் மின்னணு ஏலம் நடத்தி விற்பனை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

## இ.பொ.து.ந.க.எண்.W5/018/2019

**தீர்மான எண்.845/2019** **நாள்:26-12-2019**

**இயந்திர பொறியியல் துறை - பொதுத் தொழிற்சாலை - மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையம் - பணிகள் நிறுத்தப்பட்டது - பயன்பாடற்ற/காலாவதியான உதிரி பாகங்கள், இயந்திர பாகங்கள், மின் மோட்டார்கள் மற்றும் இயந்திரப் பொருட்கள் "உள்ளது உள்ளபடி நிலையில்" தொழில் நுட்பக்குழுவால் மதிப்பீடு நிர்ணயம் செய்து திருவாளர்கள் MSTCLtd., (மத்திய அரசு நிறுவனம்) சேவை நிறுவனம் மூலம் மின்னனு ஏலம் நடத்தி விற்பனை செய்ய அனுமதி.**

ஆணையர் அவர்களின் 03.08.2016 நாளிட்ட ஆணையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, சாலைகள் துறையின் கீழ் சென்னை 600031, சேத்துப்பட்டு, ஸ்பர்டாங் ரோட்டில் எண். 31 என்ற விலாசத்தில் செயல்பட்டு வந்த மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையம் நிர்வாக காரணங்களால் பணிகள் முழுவதுமாக நிறுத்தும் செய்யவும், பணியாளர்களை பணியிடத்துடன் வேறு துறைக்கு மாற்றம் செய்து கொள்ளவும், மற்றும் அப்பிரிவில் உபயோகப்படுத்தப்பட்ட டிப்பர் லாரிகள், உருளை வாகனங்கள், இயந்திரப் பொருட்கள் ஆகியவற்றை இயந்திரப்பொறியியல் துறையின் மூலம் பயன்பாட்டிற்கு ஏற்ப உபயோகப்படுத்தி கொள்ளவும் / ஏலத்தில் விடவும், மன்ற தீர்மான எண். 251/2015 - நாள். 06.07.2015ன் படி அனுமதி பெறப்பட்டது.

இதன்படி, இயந்திரப் பொறியியல் துறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையத்திலிருந்து பயன்படுத்த முடியாத வாகனங்கள், ரோலர்கள் மற்றும் இயந்திரங்களை தீர்வு செய்வதற்கு ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் ஆணை பெற்று மத்திய அரசு நிறுவனமான (MSTC Ltd.,) மூலம் மின்னனு ஏலம் நடத்தி விற்பனை செய்து தொகையை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்தப்பட்டுவிட்டது.

தற்போது, மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்/ மத்திய உருளை நிலையத்தில் உள்ள பண்டக சாலையில் பயன்பாடற்ற/காலாவதியான உதிரி பாகங்கள், இயந்திர பாகங்கள், மின் மோட்டார்கள் மற்றும் இயந்திரப் பொருட்கள் இருப்பில் உள்ளன.

இந்நிலையில், கடந்த 16.05.2019 அன்று ஆணையர் அவர்கள் மத்திய வெப்பத்தார் கலவை நிலையத்தை ஆய்வு செய்து, ஆய்வுக்குறிப்பில் மத்திய தார் கலவை நிலையத்தில் உபயோகமில்லாத இயந்திரங்கள் மற்றும் பிற பொருட்களை இயந்திர துறை பொறியாளர்கள் மூலம் கணக்கெடுத்து சரியான விலை நிர்ணயம் செய்து ஏலம் விடுவதற்கு தகுந்த நடவடிக்கை மேற்கொள்ளும்படி அறிவுறுத்தினார்கள்.

கடந்த 06.07.2015 முதல் மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் / மத்திய உருளை நிலையம் பயன்பாடு நிறுத்தப்பட்டது முதல் ஏற்பட்ட பெரு மழை மற்றும் வெள்ளம் காரணமாக மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் / மத்திய உருளை நிலையத்தில் உள்ள பண்டக சாலையில் உள்ள இருப்பு பதிவேடுகள் அனைத்தும் நனைந்து சீரழிந்து விட்டன.

எனவே, மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் / மத்திய உருளை நிலையத்தில் உள்ள பயன்பாடற்ற உதிரி பாகங்கள், காலாவதியான உதிரி பாகங்களை பயன்பாடற்ற உதிரி பாகங்களாக எடுத்துக்கொண்டு கழிவு விலையில் விலை நிர்ணயம் செய்யவும், இயந்திர பாகங்கள், மின் மோட்டார்கள் மற்றும் இயந்திரப் பொருட்களையும் இயந்திர துறை மற்றும் மின்துறை பொறியாளர்கள் மூலம் உள்ளது உள்ளபடி நிலையில் விலை நிர்ணயம் செய்து திருவாளர்கள். MSTC Ltd., மூலம் மின்னனு ஏலம் நடத்தி விற்பனை செய்ய மேல் நடவடிக்கை எடுக்கலாம் என்ற கருத்து தெரிவிக்கப்படுகிறது.

எனவே, மேற்கண்ட பொருட்களை மதிப்பீடு நிர்ணயம் செய்ய கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட தொழில்நுட்ப குழு அமைத்து நடவடிக்கை மேற்கொள்ளலாம் என்ற கருத்தும் தெரிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) | தலைவர் |
| 2. | மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) | உபதலைவர் |
| 3. | செயற்பொறியாளர் (இ) தலைமையிடம் | உறுப்பினர் |
| 4. | செயற்பொறியாளர் (மின்சாரம்) | உறுப்பினர் |

| | | |
|---|---|---|
| 5. | செயற்பொறியாளர் (இ) (வடக்கு வாகன பணிமனை) | உறுப்பினர் |
| 6. | செயற்பொறியாளர் (இ) (மத்திய வாகன பணிமனை) | உறுப்பினர் |
| 7. | செயற்பொறியாளர் (இ) (தெற்கு வாகன பணிமனை) | உறுப்பினர் |
| 8. | செயற்பொறியாளர் (இ) (பொது தொழிற்சாலை) | கூட்டுநர் |
| 9. | கணக்கு அலுவலர் (இ) | உறுப்பினர் |
| 10. | உதவி பொறியாளர் (மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்) | உறுப்பினர் |

எனவே,

1. மத்திய வெப்பத்தார் கலவை நிலையம் / மத்திய உருளை நிலையத்தில் உள்ள பயன்பாடற்ற உதிரி பாகங்கள், காலாவதியான உதிரி பாகங்களை பயன்பாடற்ற உதிரி பாகங்களாக எடுத்துக்கொண்டு கழிவு விலையில் விலை நிர்ணயம் செய்யவும், இயந்திர பாகங்கள், மின் மோட்டார்கள் மற்றும் இயந்திரப் பொருட்களையும் இயந்திர துறை மற்றும் மின்துறை பொறியாளர்கள் மூலம் உள்ளது உள்ளபடி நிலையில் விலை நிர்ணயம் செய்யவும்,
2. மேற்கண்ட பொருட்களை ஆய்வு செய்து மதிப்பீடு நிர்ணயம் செய்ய கீழ்கண்ட அலுவலர்களை கொண்ட தொழில்நுட்ப குழு அமைத்திடவும்,

| | | |
|---|---|---|
| 1. | மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்/பாலங்கள்) | தலைவர் |
| 2. | மேற்பார்வை பொறியாளர் (மின்சாரம்) | உபதலைவர் |
| 3. | செயற்பொறியாளர் (இ) தலைமையிடம் | உறுப்பினர் |
| 4. | செயற்பொறியாளர் (மின்சாரம்) | உறுப்பினர் |
| 5. | செயற்பொறியாளர் (இ) (வடக்கு வாகன பணிமனை) | உறுப்பினர் |
| 6. | செயற்பொறியாளர் (இ) (மத்திய வாகன பணிமனை) | உறுப்பினர் |
| 7. | செயற்பொறியாளர் (இ) (தெற்கு வாகன பணிமனை) | உறுப்பினர் |
| 8. | செயற்பொறியாளர் (இ) (பொது தொழிற்சாலை) | கூட்டுநர் |
| 9. | கணக்கு அலுவலர் (இ) | உறுப்பினர் |
| 10. | உதவி பொறியாளர் (மத்திய வெப்பத்தார் கலவை நிலையம்) | உறுப்பினர் |

3. அவ்வாறு மதிப்பீடு நிர்ணயம் செய்யப்பட்ட மேற்கண்ட பொருட்களை மத்திய அரசு நிறுவனமான MSTC Ltd. மூலம் மின்னணு ஏலம் நடத்தி விற்பனை செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**மி.து. ந.க. எண். மே2/ பி2/ 9601/ 2019**

**தீர்மான எண்.846 / 2019** **நாள்:26-12-2019**

**மின்துறை – புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான மண்டலம் 1, 2, 3, 7, 11, 12, 14, 15ல் விடுபட்ட இடங்களில் தெரு விளக்கு கட்டமைப்பு மேம்படுத்த ரூ. 15.20 கோடியில் 2,441 எண்ணிக்கையில் மின் சேமிப்பு வகை எல் . ஈ . டி விளக்குகளுடன் கூடிய தெரு விளக்கு கம்பங்கள் அமைக்க – CMCDM நிதி மூலம் பணிகள் மேற்கொள்ள 17 சிப்பங்களாக ஒப்பம் கோரப்பட்டது – குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மின்துறை, புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான மண்டலம் 1,2,3,7,11,12,14,15ல் விடுபட்ட இடங்களில் தெரு விளக்கு கட்டமைப்பு மேம்படுத்த 2441 எண்ணிக்கையில் மின் சேமிப்பு வகை எல். ஈ. டி விளக்குகளுடன் கூடிய தெரு விளக்கு கம்பங்கள் ரூ 15.20 கோடியில் CMCDM மூலம் அமைக்க நிர்வாக அனுமதி அரசு ஆணை(நிலை) எண். 409, ந.நி(ம)கு.வ.(MC.1)துறை ,நாள்:15.10.2019 மூலம் பெறப்பட்டுள்ளது. மேற்கூறிய தெருவிளக்கு கம்பங்கள் அமைக்க 17 எண்ணிக்கையிலான சிப்பங்களாக பிரிக்கப்பட்டு, ஒப்பங்கள் (இரு உறை) முறையில் மின்னணு ஒப்பம் மூலம் (e-Tender) கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு 24.10..2019 அன்று ஆங்கில நாளிதழ், டெக்கான் கிராணிக்கல் (Deccan Chronicle) மற்றும் தமிழ் நாளிதழ் நமது அம்மா நாளிதழ்களிலும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் 31.10.19 அன்றும் 24.10.19 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது, மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 26.11.2019 அன்று 10 ஒப்பந்த புள்ளிகள் மட்டுமே மின்னணு ஒப்பம் (e-Tender) மூலம் பெறப்பட்டு ஒப்ப ஆவணங்கள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. மீதமுள்ள 7 ஒப்பங்களுக்கு தலைமை பொறியாளர்(திட்டம்) அவர்களின் அனுமதி பெற்று குறுகிய கால மின்னணு மறு ஒப்பம் கோரப்பட்டது.

குறுகிய கால மறுஒப்ப அறிவிப்பு மக்கள் குரல் நாள்.27.11.19 அன்றும், டெக்கான் கிரானிக்கல் நாள் 27.11.19 அன்றும், மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள்.28.11.19 அன்றும், பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள் 28.11.19 பிரிசுரிக்கப்பட்டது.

மின்னணு மறு ஒப்பம் (Re-Tender) திறப்பு நாளான 06.12.19 அன்று பெறப்பட்ட 7 ஒப்பங்களும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது.அனைத்து 17 ஒப்பங்களும் தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலனை செய்து தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஒப்பப்புள்ளி 06.12.19 மற்றும் 17.12.19 அன்று திறக்கப்பட்டது.

குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு

| வ. எ ண். | மண்ட லம் | கோப்பு எண்./ சிப்பம் எண். | பணியின் மதிப்பு (ரூபாய்) | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தஒப்பந்த தாரர் தொகை 12%GST சேர்த்து (ரூபாய்) | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்தாரர்தொ கை 12%GST சேர்த்து ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | வடக்கு/ 9601/ 2019 (சிப்பம் எண்.1) | 8896009.36 | ஆர்.வி.என்ஜினீயரிங் கன்ஸ்டிரக்ஷன்ஸ் | 9741130.25 | +9.50 |
| 2 | 2 | வடக்கு/9602/ 2019 (சிப்பம் எண்.2) | 2400695.81 | பி.முரளிபாபு | 2628761.91 | +9.50 |
| 3 | 3 | வடக்கு/9603/ 2019 (சிப்பம் எண்.3) | 4158696.72 | சாய் எண்டர்பிரைசஸ் | 4532979.42 | +9.00 |
| 4 | 3 | வடக்கு/9604/ 2019 (சிப்பம் எண்.4) | 17744435.60 | ஓரியன்ட் போல்ஸ் | 19421284.76 | +9.45 |

**மி.து. ந.க. எண். மே2/ பி2/ 9601/ 2019**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5 | 3 | வடக்கு/ 9605/ 2019 (சிப்பம் எண்.5) | 33232301.73 | முருகன் எலக்டிரிக்ல் டிரேடர்ஸ் | 36279039.15 | +9.17 |
| 6 | 3 | வடக்கு/ 9606/ 2019 (சிப்பம் எண்.6) | 5906418.06 | பி.ஆர்.கணேஷ் குமார் | 6446855.31 | +9.15 |
| 7 | 3 | வடக்கு/ 9607/2019 (சிப்பம் எண்.7) | 8306924.96 | பாலமுருகன் எலக்டிரிக்ல் கான்ட்ராக்டர்ஸ் | 9054548.21 | +9.00 |
| 8 | 7 | மையம்/ 9608/2019 (சிப்பம் எண்.8) | 9028068.57 | பாலமுருகன் எலக்டிரிக்ல் கான்ட்ராக்டர்ஸ் | 9840594.74 | +9.00 |
| 9 | 7 | மையம்/ 9609/2019 (சிப்பம் எண்.9) | 6429898.29 | வி.கே. கான்ட்ராக்டர்ஸ் | 7015019.05 | +9.10 |
| 10 | 11 | தெற்கு/9610/2019 (சிப்பம் எண்.10) | 2238673.36 | ஸ்ரீ லஷ்மி எலக்டிரிக்ல்ஸ் | 2451347.33 | +9.50 |
| 11 | 11 | தெற்கு /9611/ 2019 (சிப்பம் எண்.11) | 7622123.39 | வி.கே. கான்ட்ராக்டர்ஸ் | 8422446.34 | +10.50 |
| 12 | 12 | தெற்கு/9612/ 2019 (சிப்பம் எண்.12) | 2524607.90 | கணேஷ் எலக்டிரிக்ல்ஸ் | 2763183.35 | +9.45 |
| 13 | 12 | தெற்கு/9613/ 2019 (சிப்பம் எண்.13) | 8845200.78 | வீரா எலக்டிரிக்ல்ஸ் | 9685494.86 | +9.50 |
| 14 | 14 | தெற்கு/9614/ 2019 (சிப்பம் எண்.14) | 12378057.56 | ஆர்.கே.எம். எலக்டிரிக்ல்ஸ் | 13553973.03 | +9.50 |
| 15 | 14 | தெற்கு9615/ 2019 (சிப்பம் எண்.15) | 1498606.54 | கணேஷ் எலக்டிரிக்ல்ஸ் | 1640224.85 | +9.45 |
| 16 | 15 | தெற்கு/9616/ 2019 (சிப்பம் எண்.16) | 4631690.57 | பாலாஜி எண்டர்பிரைசஸ் | 5071701.18 | +9.50 |
| 17 | 15 | தெற்கு/9617/ 2019 (சிப்பம் எண்.17) | 4493251.64 | எம்.பி. எண்ஜினியரிங் கம்பெனி | 4897644.29 | +9.00 |

இவ்விலைப்புள்ளிகள் ஒப்பந்ததாரர்களிடம் 10.12.19, 18.12.19 மற்றும் 19.12.19 நாளிட்ட தேதிகளில் முறையே மூன்று முறை விலை குறைப்பு செய்யப்பட்டுள்ளது. . இவ்விலைப்புள்ளிகள் 2019-20 (Schedule of Rates )அலுவலக விலைப்பட்டியலை விட 0.1 % குறைவாகும்

விலைக் குறைப்புக்குப்பின் ஒப்பந்ததாரர்கள் அளித்த விலை விவரப்பட்டியல் பின்வருமாறு

| வ. எ ண். | மண்டலம் | கோப்பு எண்./ சிப்பம் எண். | பணியின் மதிப்பு (ரூபாய்) | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்தஒப்பந் ததாரர் தொகை 12%GST சேர்த்து (ரூபாய்) | பேச்சுவார்த் தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த தொகை12% GST சேர்த்து (ரூபாய்) | 2019-20ம் ஆண்டு விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|---|

<u>மி.து. ந.க. எண். மே2/ பி2/ 9601/ 2019</u>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 1 | வடக்கு/ 9601/2019 (சிப்பம் எண்.1) | 8896009.36 | ஆர்.வி.என் ஜினீயரிங் கன்ஸ்டிரக்ஷ ண்ஸ் | 9741130.25 | 8887113.07 | -0.10 (குறைவு) | -4.02 |
| 2 | 2 | வடக்கு/ 9602/2019 (சிப்பம் எண்.2) | 2400695.81 | பி.முரளிபாபு | 2628761.91 | 2398295.05 | -0.10 (குறைவு) | -3.77 |
| 3 | 3 | வடக்கு/ 9603/2019 (சிப்பம் எண்.3) | 4158696.72 | சாய் எண்டர்பிரை சஸ் | 4532979.42 | 4154538.02 | -0.10 (குறைவு) | -5.68 |
| 4 | 3 | வடக்கு/ 9604/2019 (சிப்பம் எண்.4) | 17744435.60 | ஓரியன்ட் போல்ஸ் | 19421284.76 | 17726691.06 | -0.10 (குறைவு) | -5.63 |
| 5 | 3 | வடக்கு/ 9605/2019 (சிப்பம் எண்.5) | 33232301.73 | முருகன் எலக்டிரிக்ல் டிரேடர்ஸ் | 36279039.15 | 33199069.09 | -0.10 (குறைவு) | -3.01 |
| 6 | 3 | வடக்கு/ 9606/2019 (சிப்பம் எண்.6) | 5906418.06 | பி.ஆர்.கணே ஷ் குமார் | 6446855.31 | 5900511.00 | -0.10 (குறைவு) | -5.77 |
| 7 | 3 | வடக்கு/ 9607/2019 (சிப்பம் எண்.7) | 8306924.96 | பாலமுருகன் எலக்டிரிக்ல் கான்ட்ராக்ட ர்ஸ் | 9054548.21 | 8298618.03 | -0.10 (குறைவு) | -5.55 |
| 8 | 7 | மையம்/ 9608/2019 (சிப்பம் எண்.8) | 9028068.57 | பாலமுருகன் எலக்டிரிக்ல் கான்ட்ராக்ட ர்ஸ் | 9840594.74 | 9019039.65 | -0.10 (குறைவு) | -5.84 |
| 9 | 7 | மையம்/ 9609/2019 (சிப்பம் எண்.9) | 6429898.29 | வி.கே. கான்ட்ராக்ட ர்ஸ் | 7015019.05 | 6423467.21 | -0.10 (குறைவு) | -5.12 |
| 10 | 11 | தெற்கு/ 9610/2019 (சிப்பம் எண்.10) | 2238673.36 | ஸ்ரீ லஷ்மி எலக்டிரிக்ல் ஸ் | 2451347.33 | 2236434.66 | -0.10 (குறைவு) | -4.3 |
| 11 | 11 | தெற்கு/ 9611/2019 (சிப்பம் எண்.11) | 7622123.39 | வி.கே. கான்ட்ராக்ட ர்ஸ் | 8422446.34 | 7614501.23 | -0.10 (குறைவு) | -4.76 |
| 12 | 12 | தெற்கு/ 9612/2019 (சிப்பம் எண்.12) | 2524607.90 | கணேஷ் எலக்டிரிக்ல் ஸ் | 2763183.35 | 2522083.29 | -0.10 (குறைவு) | -3.21 |
| 13 | 12 | தெற்கு/ 9613/2019 (சிப்பம் எண்.13) | 8845200.78 | வீரா எலக்டிரிக்ல் ஸ் | 9685494.86 | 8836355.86 | -0.10 (குறைவு) | -4.42 |
| 14 | 14 | தெற்கு/ 9614/2019 (சிப்பம் எண்.14) | 12378057.56 | ஆர்.கே.எம். எலக்டிரிக்ல் ஸ் | 13553973.03 | 12365679.50 | -0.10 (குறைவு) | -3.62 |
| 15 | 14 | தெற்கு/ 9615/2019 (சிப்பம் எண்.15) | 1498606.54 | கணேஷ் எலக்டிரிக்ல் ஸ் | 1640224.85 | 1497107.92 | -0.10 (குறைவு) | -5.15 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 16 | 15 | தெற்கு/96 16/ 2019 (சிப்பம் எண்.16) | 4631690.57 | பாலாஜி எண்டர்பிரைசஸ் | 5071701.18 | 4627058.89 | -0.10 (குறைவு) | -5.52 |
| 17 | 15 | தெற்கு/96 17/ 2019 (சிப்பம் எண்.17) | 4493251.64 | எம்.பி. எண்ஜினியரிங் கம்பெனி | 4897644.29 | 4488758.38 | -0.10 (குறைவு) | -5.51 |

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னணு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத்தக்க நிலையில் உள்ளது.
2. இத்திட்டத்தின் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் புதிதாக இணைக்கப்பட்ட பகுதிகளான மண்டலம் 1,2,3,7,11,12,14,15ல் விடுபட்ட இடங்களில் 2441 எண்ணிக்கையில் தெரு விளக்கு மின்கம்பங்கள் அமைக்கப்படவுள்ளதால், 2019-20 சந்தை விலையை விட ஒப்ப விலை குறைவாக உள்ளது.
3. இவ்வொப்பத் தொகையானது 2019-20ஆம் ஆண்டின் அலுவலக விலையை ஒப்பிடுகையில் 0.1% குறைவாக உள்ளது.
4. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 25.09.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது

எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்த மேற்கண்ட ஒப்பந்ததாரர்களுக்கு பணியினை மேற்கொள்வதற்காக ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்தின் 23.12.2019 நாளிட்ட ஒப்புதல் (Tender Scrutinizing Committee) அளிக்கப்பட்ட ஒப்பத் தொகைக்கு பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**பொ.து.ந.க.எண்.ஈ1/ 36589 / 2019**

**தீர்மான எண்.847 / 2019** **நாள்:27-12-2019**

**பணியமைப்பு – பெருநகர சென்னை மாநகராட்சி – பொதுத்துறை – திருமதி.கே.சாந்தகுமாரி, உதவி கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் - (பகுதி கணக்கு குழுமம் - மண்டலம் 8) அவர்கள் 31.12.2019 அன்று வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

நிதி ஆலோசகர் அவர்களின் 16.12.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பகுதி கணக்கு குழுமம் மண்டலம் 8ல், உதவி கணக்கு அலுவலராக பணிபுரியும் திருமதி.கே.சாந்தகுமாரி அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 31.12.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 15.12.1961 ஆகும்.

திருமதி.கே.சாந்தகுமாரி, உதவி கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக 12.06.1984 அன்று உதவி எழுத்தராகவும் (Clerical Attender), 30.12.1994 முதல் இளநிலை உதவியாளராகவும், 24.10.1997 முதல் உதவியாளராகவும், 01.12.2010 முதல் கண்காணிப்பாளராகவும், 12.08.2016 முதல் நிர்வாக அலுவலராகவும் மற்றும் 04.07.2018 முதல் உதவி கணக்கு அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகின்றார். தனியர் பணிபுரிந்துவந்துள்ள துறைகள்/ மண்டல அலுவலகங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பதவி | துறை | காலங்கள் |
|---|---|---|---|
| 1 | உதவி எழுத்தர் (Clerical Attender) | மத்திய கணக்கு குழுமம் | 12.06.1984 முதல் 30.12.1994 வரை |
| 2 | இளநிலை உதவியாளர் | மழைநீர்வடிகால் துறை | 30.12.1994 முதல் 23.10.1997 வரை |
| 3 | உதவியாளர் | பழைய மண்டலம் 3<br>புதிய மண்டலம் 5 | 24.10.1997 முதல் 10.02.2004 வரை |
| 4 | | சுகாதாரத்துறை | 11.02.2004 முதல் 08.03.2010 வரை |
| 5 | | மத்திய கணக்கு குழுமம் | 09.03.2010 முதல் 01.12.2010 வரை |
| 6 | கண்காணிப்பாளர் | மத்திய கணக்கு குழுமம் | 01.12.2010 முதல் 11.08.2016 வரை |
| 7 | நிர்வாக அலுவலர் | மண்டலம் 5 | 12.08.2016 முதல் 04.07.2018 வரை |
| 8 | உதவி கணக்கு அலுவலர் | மத்திய கணக்கு குழுமம் (ப.க.கு.- ம-8 மற்றும் ம.வ.அ) | 04.07.2018 முதல் இந்நாள் வரை |

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தித்ன 31.10.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் எனவும், கடன் தொகை நிலுவை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நிதி ஆலோசகர் அவர்களின் 31.10.2019 நாளிட்ட கடிதத்தின்படி. தனியர் உதவி கணக்கு அலுவலராக துறைகளில் பணிபுரிந்த காலங்களான 2018 -2019 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் பொறுப்பு தனியரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள் வரை தணிக்கை தடைகள், ஒழுங்கு நடவடிக்கை மற்றும் முன்பண நிலுவை ஏதுமில்லை

என்பதற்கான சான்றும் மற்றும் உதவி கணக்கு அலுவலர் பதவியில் தனியரால் பெறப்பட்ட முன்பணத் தொகைகளுக்கான விவரங்களை பகுதி கணக்கு குழுமத்தில் பெற்று அத்தொகைகள் அனைத்தும் நேர்செய்யப்பட்டு, தனியரை பொறுப்பாக்கும் முன்பணத்தொகை நிலுவை இல்லை என்பதற்கான சான்று துறை/மண்டல அலுவலரிடமிருந்து பெறப்பட வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்டுள்ளவாறு, தனியர் பணிபுரிந்த பிற மண்டலங்கள் / துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விழிப்பு துறையின் 06.12.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறையில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்பட்டுள்ளது.

தனியரின் 13.12.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமம் (பகுதி கணக்கு குழுமத்தில் மண்டலம் 8)ல் உதவி கணக்கு அலுவலராக பணியாற்றி வயது முதிர்வு காரணமாக 31.12.2019 ஆம் தேதியன்று பணியிலிருந்து ஓய்வு பெற்வுள்ளதால், தணிக்கைத் தடை நிலுவை பத்திகள், வருவாய் இழப்பு, முன்பண நிலுவை மற்றும் தவறான மிகை ஊதிய நிர்ணயம் பெற்றதாக பின்னர் தெரியவரின், அத்தொகையினை தனக்கு அளிக்கப்படும் இறப்பு (மற்றும்) ஓய்வுகால பணிக்கொடையிலிருந்து ஒரே தவணையாக பிடித்தம் செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-II ன் கீழ்வரும் உதவி கணக்கு அலுவலர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் அனுமதி பெறப்பப்பட வேண்டும். தற்போது மன்றம் 24.10.2016 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.10.2016 ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி, திருமதி.கே.சாந்தகுமாரி அவர்கள் உதவி கணக்கு அலுவலராக பணிபுரிந்த காலங்களான 2018 -19 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் பொறுப்பு தனியரையே சாரும் என்பதால் அவற்றிற்கு தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு தனியரை 31.12.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**இ.டி.பி.சி.ந.க.எண்.சி2/685/2019**

**தீர்மான எண்.848/2019** **நாள்:30-12-2019**

**மின்துறை – இ.டி.பி.செல் - ஒப்பந்த அடிப்படையில் 1913 அழைப்பு மையத்திற்கு 18 நபர்கள் 24X7 மணி நேரத்திற்கு ரிப்பன் மாளிகையில் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) பணி செய்து மற்றும் தரம் சரிபார்க்கும் பணிக்கு கோரப்பட்ட ஒப்பம் மின்னணு தொழிற்நுட்ப ஒப்பப்புள்ளி திறக்கப்பட்டது - இதில் ஒப்பந்ததாரர்கள் உரிய தொழிற்நுட்ப தகுதி பெறாததால் இப்பணிக்கான ஒப்பத்தினை இரத்து செய்ய அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சியில் 1913 அழைப்பு மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 18 நபர்கள் 24X7 மணி நேரத்திற்கு ரிப்பன் மாளிகையில் ஒரு வருட காலத்திற்கு (365 நாட்கள்) பணி செய்து மற்றும் தரம் சரிபார்க்கும் பணிக்கு ஏற்கனவே கோரப்பட்ட ஒப்பம் 21.07.2019-டன் முடிவடைந்ததால், மன்றத்தீர்மான எண்.444/2019, நாள் 08.08.2019ன் படி, ஒப்பந்தப்புள்ளி செய்தி மலர் நாள் 16,08.2019 மற்றும் மின்ஒப்ப ஆவணங்கள் பதிவேற்ற நாள் 22.08.2019 வாயிலாக மேற்படி பணிக்கு, 03.09.2019 அன்று 11.00 மணிக்குள் ஒப்பங்கள் சமர்ப்பிக்கவும், 04.09.2019 அன்று 11.15 மணிக்கு ஒப்பம் திறக்கப்படும் என தெரிவித்து புதியதாக மின் ஒப்பம் கோரப்பட்டது.

04.09.2019 அன்று காலை 11.15 மணிக்கு மின் ஒப்பங்கள் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. மேற்படி பணிக்கு கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் விண்ணப்பித்திருந்தனர்.

1. M/s. IFFCO KISAN SANCHAR LIMITED,
2. M/s. SOMESH ENTERPRISES
3. M/s. M. MAHESH

மேற்காணும் மின்ஒப்ப ஆவணங்களில் (Tender Document) தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளின் படி, மேற்படி மூன்று நிறுவனங்களின் பட்டியல் பின்வருமாறு

| S.NO. | Name of the Firm | M/s. IFFCO KISAN SANCHAR LIMITED | M/s. Somesh Enterprises | M/s. M.Mahesh |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1 | EMD / Bank guarantee: | DD NO: 326994<br>Date : 02.09.2019<br>Bank : Indian Overseas Bank<br>Amount : 50,768/-<br>Branch: Nehru Place, New Delhi<br>Pg.No : 85 | DD NO: 479980<br>Date : 29.08.2019<br>Bank : Canara Bank<br>Amount : 50768/-<br>Branch: Park Town, Chennai<br>Pg.No : 187 | Hard copy and Scanned of EMD was not submitted at the time of Bid opening, hence tender invalid. |
| 2 | The tenderer with a minimum annual turnover of 50Lakhs in any one of the last 3 years. The tenderer shall furnish audited financial statements for the last three years, audited by a Chartered Accountant, which include Profit and Loss Account and Balance sheet | Yes Enclosed.<br>2015-16, Rs.3,50,21,19,659/-<br>2016- 17, Rs.4,36,85,87,127/-<br>2017-18 ,Rs.4,40,58,04,689/-<br>2018-19, Rs.3,64,52,73,445/-<br>Pg No: 95 - 101. | Yes Enclosed.<br>2015-16, Rs.73,76,085/-<br>2016-17, Rs.71,03,637/-<br>2017-18, Rs.1,11,58,600/-<br>2018-19, Rs.1,84,48,600/-<br>Pg No: 255 - 261. | |
| 3 | The tenderer should have successfully completed at least one similar job of value not less than Rupees 25 Lakhs in any state / Central Government departments, Boards, Undertakings, Local Bodies or Public Sector or banks in the last three years (completion or satisfactory report should be enclosed). | **Not Enclosed** | **Not Enclosed** | |
| 4 | The tenderer should have submitted the I.T Returns for the last 3 years.<br>(2015-2016, 2016-2017, and 2017-2018). | Yes Enclosed.<br>IT Returns for the year (2015-16,2016-17,2017-18).<br>Pg No: 117-119. | Yes Enclosed.<br>IT Returns for the year (2015-16, 2016-17, 2017-18)<br>Pg No: 317,322 & 329. | |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | The bidder should submit service tax, EPF and ESI registration certificate and Copy of last 3 months returns filed. | Yes,Enclosed.<br>Service Tax Reg No:-AABC17067HST002 ,Dated:-02/04/2008.<br>EPF Reg. No:-DSNHP09355560000, Dated:-03/03/2015.<br>ESI Code:-20000118143001099, Dated:-25/11/2014.<br>Pg No: 120,139,142-146. | Yes,Enclosed.<br>EPF Reg. No:-TNMAS1536516, Dated:-16/11/2016.<br>ESI Code:-51001177230001019, Dated:-30/08/2019.<br>Service Tax - AXDPS4420QST001, Dated:-26/06/17<br>Pg No: 343,372,377 | |
| 6 | Bidder should have possessed a valid ISO 9001:2015 certificate. | Yes,Enclosed.<br>Valid ISO 9001:2015 Reg:-UQSR-1003-QMS/IFFCOKSC, Valid upto 30/04/2020.<br>Pg No: 147 | Yes,Enclosed.<br>Valid ISO 9001:2015 Reg:-Q-5083/18,Valid upto 21/05/2021.<br>Pg No: 388 | |
| 7 | The bidder should be a registered contractor in any state government/local bodies should be produced | Yes,Enclosed.<br>Reg No:-DDG/Term-TNOSP-10/2013-14/16,Dated:-11/02/2014. from Ministry of Communications & IT Department and Telecommunications<br>Pg No: 152-153. | Yes,Enclosed<br>Reg.No. 2519/CN1, dated: 27.12.2018 from Assistant Commissioner of Labour (Enforcement) department.<br>Pg.No. 405 to 407 | |
| 8 | Bidders should have established offices anywhere in Chennai. | Yes,Enclosed.<br>Rental Agreement No:-8933,Dated :-16/04/2018 & BSNL bill copy<br>Pg No: 157-163. | Yes,Enclosed.<br>Professional Tax No:-2017-18/N063/ 1348951,<br>Dated :-31/03/2018<br>Pg No: 404. | |

மின்ஒப்ப ஆவணங்களில் பக்கம்-6,7,9 மற்றும் 24-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்நுட்ப தகுதியில் மாநில/மத்திய அரசு துறைகள், கழகங்கள் மற்றும் உள்ளாட்சி பொது நிறுவனங்கள் அல்லது வங்கிகளில் 25 இலட்ச ரூபாய் குறைவில்லாத பணிகளை கடந்த மூன்று ஆண்டுகளில் (2015-16, 2016-17, 2017-18) பணியில் தொடர்ச்சியான அனுபவத்தினை நிதியாண்டில் கண்டிப்பாக பெற்றிருக்க வேண்டும் (பணிகள் முடிக்கப்பட்டது / திருப்திகரமான அறிக்கை இணைக்கப்பட வேண்டும்) என அறிவுறுத்தப்பட்டிருந்தது.

மேற்படி கலம் எண். **3**ல் கண்டுள்ள ***M/s. IFFCO KISAN SANCHAR LIMITED*** என்ற நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளில் (2015-16, 2016-17, 2017-18) <u>25 இலட்ச ரூபாய் குறைவில்லாத பணி மேற்கொண்டமைக்கான சான்று ஆவணமாக சமர்ப்பிக்கப்பட்ட</u> Ministry of Agriculture பணி நீட்டிப்பு ஆணையில் பணித்தொகை மற்றும் எந்த பணிக்கான நீட்டிப்பு ஆணை என்ற விவரங்கள் குறிப்பிடப்படாத காரணத்தால் Ministry of Agriculture..க்கு மேலே விடுபட்டுள்ள விவரங்களை பத்து நாட்கள் கால அவகாசத்துக்குள் அளிக்குமாறு கோரி 17.10..2019 நாளிட்ட கடிதம் அனுப்பட்டது. இதனை தொடர்ந்து, பத்து நாட்கள் ஆகியும் Ministry of Agriculture. யிடமிருந்து பதில் கடிதம் ஏதும் பெறப்படாத நிலையில், மேற்குறிப்பிட்ட பணித்தொகை மற்றும் எந்த பணிக்கான நீட்டிப்பு ஆணை விவரங்கள் அறிய இயலாத காரணத்தினால் <u>மின்ஒப்ப ஆவணங்களின் பக்கம் -- **6**, **7**, **9** மற்றும் **24**-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்நுட்ப தகுதி நிபந்தனைகளின் படி</u> ***M/s. IFFCO KISAN SANCHAR LIMITED*** நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை <u>ஏற்கப்பட இயலாது.</u>

மேற்படி கலம் எண்.**4**ல் கண்டுள்ள ***M/s. SOMESH ENTERPRISES*** நிறுவனம் கடந்த 3 ஆண்டுகளில் (2015-16, 2016-17, 2017-18) <u>**25** இலட்ச ரூபாய் குறைவில்லாத பணி மேற்கொண்டமைக்கான ஒற்றை பணி ஆணைக்கான ஆவணங்களை திருப்திகர சான்றுடன் ***(Satisfactory Report)*** சரியாக சமர்ப்பிக்காத காரணத்தினால்</u> ***M/s. SOMESH ENTERPRISES*** நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை <u>மின்ஒப்ப ஆவணங்களின் பக்கம் -- **6**, **7**, **9** மற்றும் **24**-ல் குறிப்பிடப்பட்டுள்ள தொழிற்நுட்ப தகுதி நிபந்தனைகளின் படி ஏற்கப்பட இயலாது.</u>

மேற்படி கலம் எண்.**5**ல் கண்டுள்ள ***M/s. M. MAHESH*** என்ற நிறுவனம் மின்ஒப்ப வணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு EMD (Hard copy & Scanned copy) ஏதும் அளிக்கப்படாத

**இ.டி.பி.சி.ந.க.எண்.சி2/685/2019**

காரணத்தினால் மின்ஒப்ப ஆவணங்களில் தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளின் படி ***M/s. M. MAHESH*** நிறுவனத்தின் ஒப்பந்த புள்ளியை ஏற்கப்பட இயலாது.

இதன் தொடர்ச்சியாக *18.11.2019* அன்று நடைபெற்ற கூர்ந்தாய்வு குழுமம் *(Scrutiny Committee)*, கூட்டத்தில், மேற்படி *3* நிறுவனங்களும் மேற்கண்ட பத்திகளில் கண்டுள்ளவாறு ஒப்பந்தபுள்ளியில் தெரிவிக்கப்பட்ட ஆவணங்களை முறையாக சமர்ப்பிக்க தவறியதால், *1913* அழைப்பு மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் *18* நபர்கள் *24X7* மணி நேரத்திற்கு ரிப்பன் மாளிகையில் ஒரு வருட காலத்திற்கு *(365* நாட்கள்*)* பணி செய்து மற்றும் தரம் சரிபார்க்கும் பணிக்கு *22.08.2019* அன்று கோரப்பட்ட மின்ஒப்பத்தினை இரத்து செய்யலாம் என பரிந்துரைத்துள்ளது.

மேலும், இப்பணிக்கான ஒப்ப படிவத்தில்

1) The tenderer should have submitted the I.T Returns for the last 3 years (2015-2016, 2016-2017 and 2017-2018) என்பதற்கு பதிலாக **"The tenderer should have submitted I.T Returns for the last 3 years (2016-2017, 2017-2018, and 2018-2019) "** ( மற்றும் )

2) The tenderer should have successfully completed at least one similar job of value not less than Rupees 25 Lakhs in any state / Central Government departments, Boards, Undertakings, Local Bodies or Public Sector or banks in the last three years (completion or satisfactory report should be enclosed) என்பதற்கு பதிலாக "**The tenderer should have done similar kind of work to any state / Central Government departments, Boards, Undertakings, Local Bodies or Public Sector or banks with total order values not less than 25 Lakhs in the last three years**" என தகுதிக்கான நிபந்தனைகளை *(Eligibility Criteria)*, பல ஒப்பந்த தாரர்கள் பங்கேற்கும் வண்ணம் தளர்வு செய்து புதிய மின் ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

*(அ)* பெருநகர சென்னை மாநகராட்சியின் *1913* அழைப்பு மையத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் *18* நபர்கள் *24X7* மணி நேரத்திற்கு ரிப்பன் மாளிகையில் ஒரு வருட காலத்திற்கு *(365* நாட்கள்*)* பணி செய்து மற்றும் தரம் சரிபார்க்கும் பணிக்காக பங்குபெற்ற *1) M/s M. MAHESH, 2) M/s IFFCO KISAN SANCHAR LIMITED, 3) M/s SOMESH ENTERPRISES* ஆகிய மூன்று நிறுவனங்கள் தொழிநுட்ப ஒப்பத்தில் *(Technical Bid)* தேர்ச்சி பெறாததால், பெறப்பட்ட மூன்று மின்னனு ஒப்பங்கள் நிராகரிக்கவும்,

*(ஆ)* மேலும், இப்பணிக்கான ஒப்ப படிவத்தில்

1) The tenderer should have submitted the I.T Returns for the last 3 years (2015-2016, 2016-2017 and 2017-2018) என்பதற்கு பதிலாக **"The tenderer should have submitted I.T Returns for the last 3 years (2016-2017, 2017-2018, and 2018-2019) "** ( மற்றும் )

2) The tenderer should have successfully completed at least one similar job of value not less than Rupees 25 Lakhs in any state / Central Government departments, Boards, Undertakings, Local Bodies or Public Sector or banks in the last three years (completion or satisfactory report should be enclosed) என்பதற்கு பதிலாக "**The tenderer should have done similar kind of work to any state / Central Government departments, Boards, Undertakings, Local Bodies or**

**Public Sector or banks with total order values not less than 25 Lakhs in the last three years**"

என தகுதிக்கான நிபந்தனைகளை *(Eligibility Criteria)*, பல ஒப்பந்ததாரர்கள் பங்கேற்கும் வண்ணம் தளர்வு செய்து புதிய மின் ஒப்பம் கோரவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *23.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**E.D.P.C.No.C2/1043/2019**

**Resolution No.849 /2019** **Date:30-12-2019**

**Electrical Department - EDP Cell – Providing continuous onsite support (AMC) for the existing ERP Modules of Greater Chennai Corporation for a period of two years – To call e-tender – For Approval.**

At present in Greater Chennai Corporation, various online related services are offered to both public and Corporation officials. In order to achieve a paper free environment and to speed up the official process, Greater Chennai Corporation has implemented a separate Enterprise Resource Planning Package, which covers major functionalities of Greater Chennai Corporation such as Revenue, Grievance, Finance, LCMS, Employee Information System and Payroll, Pension, Works, Town planning etc. Many online services such as Property tax payment, Profession tax assessment & payment, Company tax assessment & payment, Trade license new and renewal, Shopping complex payment and Town planning submission & payment are carried out through our existing ERP.

Now, since the existing contract for providing Annual Maintenance Contract for the Greater Chennai Corporation ERP modules **is to expire on 18.01.2020**, it is now proposed to identify external agency for providing AMC services with onsite support for Greater Chennai Corporation ERP modules via tender process for a period of two years. The base rate for the above requirement is based on the previous Council approved rate **(i.e) Rs. 50,00,000/- per Annum x 2 years = Rs. 1,00,00,000/- (inclusive of GST)** is taken into Account for preparing the Administrative Sanction proposal**.**

Hence,

1. To accord Administrative Sanction for Providing continuous onsite support (AMC) for the existing ERP Modules of Greater Chennai Corporation for a period two years at a total tentative cost of **Rs. 1,00,00,000/-** (Rupees One Crore Only) (inclusive of GST).
2. To call e-tender for the above work.
3. To meet out expenditure from the budget allocation 220-53-02-02 (e-Governance development and customization charges vendors) of EDP Cell for the financial year 2019-2020.

Sl.No. 1 to 3 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Coucil are requested. Commissioner's Note dated.26.12.2019 is read.

**"Sl.No. 1 to 3 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

******

**E.D.P.C.No.C2/1079/2019**

**Resolution No.850 /2019** **Date:30-12-2019**

**Electrical Department - EDP Cell – To upgrade/purchase Fortigate FG-600C Firewall to Next Generation Firewall with Web application firewall and Analyser – For Approval.**

At present, in Greater Chennai Corporation various online related services are offered to public and Corporation officials. The existing Birth & Death database, Greater Chennai Corporation web portal (www.chennai corporation.gov.in), application server of various online services of GCC are all hosted at the existing GCC server room. Since, the data are more critical and important in nature, in order to safeguard the data's and to restrict the intruders from hacking the GCC data's, more than 10 years a dedicated firewall is installed in GCC network through which all online users are accessing the Greater Chennai Corporation servers.

Now, as the internet usage of GCC Officials has been increased in leaps and bounds and since many new online services for the benefit of general public is implemented by Greater Chennai Corporation, the load of the existing Fortinet firewall has reached its maximum usage capacity which in turn has resulted in performance issues. In this connection, in order to identify and rectify the above mentioned errors, based on the request of Senior System Manager, EDP cell Fortinet team audited the existing FG-600C Firewall model at Ripon building server room and submitted the following observations and recommendations

1. The Current Firewall model is FG-600C running with 5.X OS and cannot be upgraded to os v6.2 which is the latest. Also this model is end of sale and soon it will become end of support. Hence it is recommended to upgrade the Firewall to FG-600E with UTM Analyser which work on OS V6.2.1. and it will ensure network is more secured and protected from zero day attacks.

2. It is noticed that this mission critical data centre firewall is running without redundancy. Hence it is recommended to go for High Availability so that it will ensure maximum availability even there is a hardware failure.

3. It is also observed that the Web server for the Greater Chennai Corporation is running out of this data centre. However, HTTP/HTTPS security is not been provided which will make data centre vulnerable to portal defacing kind of attacks. Hence it is recommended to have a Web Application Firewall and to be integrated with the Firewall so that the HTTP/HTTPS traffic is protected from external attacks. The recommended model for Web Application firewall is FWB-600D.

Now, since there is a repeated performance issue and as the existing Fortinet FG-600C firewall model is in end of sale model, (as per Fortinet letter) it is now proposed to upgrade the existing FG-600C firewall to FG-600E with Analyser. Further, a web application firewall (FWB-600D) to monitor and prevent the Greater Chennai Corporation web applications from external attacks is also proposed for purchase. Since, rates for the above mentioned requirement is not available in EDP Cell, based on the rates received from market, base rate have been arrived for the same.

The tentative cost for upgrade/purchase of Fortigate FG-600C Firewall to FG-600E Firewall with Web application firewall and Analyser as per base rate is furnished below.

**E.D.P.C.No.C2/1079/2019**

| SL. NO | DESCRIPTION | Qty (A) | Unit Price in Rs. (B) | GST @ 18 in Rs. (C) | Total Amount in Rs (inclusive of GST) (D)=(B+C)*A |
|---|---|---|---|---|---|
| 1 | Next Generation Firewall Fortinet FG-600E with UTM Protection | 2 | 2855790 | 514042 | 6739664 |
| 2 | Fortinet Fortiweb-600D web Application Firewall | 2 | 3334790 | 600262 | 7870104 |
| 3 | Firewall Analyser Centralized log & Analysis Appliance | 1 | 676,200 | 121,716 | 797916 |
| **TOTAL Amount (Inclusive of Tax)** | | | | | **15407685** |

Hence,

1. To upgrade/purchase existing Fortinet FG-600C firewall to FG-600E (with high availability / redundancy), 2Nos. of web application firewall (FWB-600D) and 1 No. of Analyser at a total tentative of **Rs. 1,54,07,685/-** (One Crore Fifty Four Lakh Seven Thousnad Six Hundred and Eighty Five only) (inclusive of GST) on buy back basis.
2. To upgrade/purchase Fortigate Firewall from FG-600C to FG-600E with web application firewall and Analyser & to return back the existing Fortinet FG-600C Firewall hardware on buy back basis to the contractor for the above work at the rates quoted in the tender.
3. To call e-tender for the above work.
4. To meet the expenditure under the appropriate budget Head of EDP Cell for the financial year 2019-2020.

Sl.No. 1 to 4 above, orders of the Special Officer- Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Coucil are requested. Commissioner's Note dated.26.12.2019 is read.

**"Sl.No. 1 to 4 are approved by Special Officer-Standing Committee (Works), Standing Committee (Taxation and Finance) and Council."**

******

**மி.து. ந.க. எண். மையம்/9213/2019**

**தீர்மான எண்.851/2019** **நாள்:30-12-2019**

**மின்துறை - மண்டலம் 10, வார்டு 127ல் உள்ள கோயம்பேடு ஜவர்லால் நேரு சாலையில் புதியதாக நெடுஞ்சாலை துறையினால் கட்டப்பட்டு வரும் புதிய மேம்பாலத்திற்கு (காளியம்மன்கோயில்தெரு, மாநகர பேருந்து நிலைய நுழைவு வாயில் சந்திப்பில்) புதியதாக 138 எண்ணிக்கையில் 7/8மீ உயர தெரு விளக்கு கம்பங்கள் வழங்கி, நிறுவும் பணிக்கு ஒப்பம் கோரப்பட்டது - குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரருக்கு பணி ஆணை வழங்க அனுமதி.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மின்துறை மண்டலம் 10, வார்டு 127ல் உள்ள கோயம்பேடு ஜவர்லால் நேரு சாலையில் புதியதாக நெடுஞ்சாலை துறையினால் கட்டப்பட்டு வரும் புதிய மேம்பாலத்திற்கு (காளியம்மன்கோயில்தெரு, மாநகர பேருந்து நிலைய நுழைவு வாயில் சந்திப்பில்) புதியதாக 138 எண்ணிக்கையில் 7/8மீ உயர தெரு விளக்கு கம்பங்கள் வழங்கி, நிறுவும் பணிக்கு ஒப்பம் இரு உறை முறையில் கோரப்பட்டு, ஒப்ப அறிவிப்பு17.10.19 அன்று தமிழ் நாளிதழ் நமது அம்மா நாளிதழிலும், ட்ரினிட்டி மிரர் ஆங்கில நாளிதழிலும் மற்றும் 17.10.2019 அன்று பெருநகர சென்னை மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும் பிரசுரிக்கப்பட்டது, மின்னணு முறையில் (e-tender) மட்டுமே ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பப்பதற்கு அனுமதிக்கப்பட்டது.

ஒப்ப நாளான 01.11.2019 அன்று தொழில் நுட்ப ஆவணம் கலந்து கொண்ட ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. தொழில்நுட்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். எனவே, தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்களின் நிதி ஆவணம் 02.12.2019 அன்று ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்பட்டது. ஒப்ப ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு தகுதி வாய்ந்த ஒப்பந்ததாரர்கள் தேர்வு செய்யப்பட்டார்கள். குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரின் விலை விவரப்பட்டியல் பின்வருமாறு.

**அட்டவணை-1**

| வ. எண். | மண்டலம் | கோப்பு எண்./ சிப்பம் எண். | பணியின் மதிப்பு (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் | பேச்சு வார்த்தைக்குப்பின் ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) | 2019-20ம் ஆண்டு விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | மையம்/ 9213/2018 | 6042672.69 | ஆர்.கே.எம் எலக்ட்ரிகல்ஸ் | 6036627.14 | (-)0.10% குறைவு | (-)5.56% குறைவு |

குறைந்த விலை விகிதம் அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பத்தொகையானது 2019-20ஆம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) விலை விவரப்படியான அலுவலக மதிப்பீடு தொகையை விட அதிகம் ஆகும். மேலும் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் குறைவாகவே இருந்தது.

ஒப்பந்ததாரர்களிடம் விலைக்குறைப்பு கோரி கடிதம் அளிக்கப்பட்டது. ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பு செய்து கடிதம் அளித்துள்ளார்கள் அதன்படி, ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையின் விவரம் பின்வருமாறு பட்டியலிடப்படுகிறது

## மி.து. ந.க. எண். மையம்/9213/2019

## அட்டவணை-II

| வ. எண். | மண்டலம் | கோப்பு எண்./ சிப்பம் எண். | பணியின் மதிப்பு (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) | 2019-20ம் ஆண்டு விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | மையம்/ 9213/2018 | 6042672.69 | ஆர்.கே.எம் எலக்ட்ரிகல்ஸ் | 6036627.14 | (-)0.10% குறைவு | (-)5.56% குறைவு |

மேற்கூறப்பட்ட ஒப்பந்ததாரர் பேச்சு வார்த்தைக்குப்பின் அளித்த ஒப்ப விகிதம் ஒப்பிடுகையில். 2019-20ம் ஆண்டு (12 சதவீதம் GST சேர்த்து) அலுவலக விலைப்பட்டியல் மற்றும் சந்தை விலை விவரப்பட்டியலோடு ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது.

எனவே, இந்த ஒப்பம் சம்மந்தமாக கீழ்காணும் விவரங்கள் ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்திற்கு சமர்பிக்கப்பட்டது.

1. இந்த ஒப்பந்தப்புள்ளியானது தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரர்கள் மின்னனு (e-tender) முறையில் கலந்து கொண்ட ஒப்பந்தப்புள்ளி ஆகும். சந்தை நிலவரத்தை கருத்தில் கொண்டால் குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரர்கள் ஒப்பந்தத் தொகையானது ஏற்றுக் கொள்ளத் தக்க நிலையில் உள்ளது.
2. மண்டலம் 10, வார்டு-127ல் உள்ள கோயம்பேடு ஜவர்லால் நேரு சாலையில் புதியதாக நெடுஞ்சாலை துறையினால் கட்டப்பட்டு வரும் புதிய மேம்பாலத்திற்கு (காளியம்மன்கோயில்தெரு, மாநகர பேருந்து நிலைய நுழைவு வாயில் சந்திப்பில்) புதியதாக 138 எண்ணிக்கையில் 7/ 8மீ உயர தெரு விளக்கு கம்பங்கள் வழங்கி, அமைக்கப்படவுள்ளதால், அதற்கான மூலப்பொருள்கள் விலை, தொழிலாளர்கள் ஊதிய உயர்வு மற்றும் போக்குவரத்து வாகன செலவு பெருகி உள்ளதாலும்,
3. இவ்வொப்பத் தொகையானது 2019-20 ம் ஆண்டின் அலுவலக விலை மற்றும் சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் குறைவாக உள்ளது.
4. பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விவரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் துறை விலை விவர அடிப்படையிலான மதிப்பீட்டு தொகை ஆகிய இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 25.09.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

மேற்குறிப்பிட்ட காரணங்களை கருத்தில் கொண்டு குறைந்த விலை விகிதம் அளித்த கீழ்க்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணியை வழங்க 23.12.2019 அன்று நடந்த ஒப்பங்கள் ஆராயும் குழுமம் கூட்டத்தில் பரிந்துரை வழங்கி உள்ளது.

**மி.து. ந.க. எண். மையம்/9213/2019**

**அட்டவணை-III**

| வ. எண். | மண்டலம் | கோப்பு எண் / சிப்பம் எண். | பணியின் மதிப்பு (ரூபாய்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருவாளர்கள் | ஒப்பந்ததாரர் அளித்த தொகை (ரூபாய்) | 2019-20ம் ஆண்டு விலைப் பட்டியலின்படி (12 சதவீதம் GST சேர்த்து) ஒப்பிடுகையில் ஒப்ப சதவீதம் | ஒப்பந்ததாரரின் ஒப்பத் தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | மையம்/ 9213/2018 | 6042672.69 | ஆர்.கே.எம் எலக்ட்ரிகல்ஸ் | 6036627.14 | (-)0.10% குறைவு | (-)5.56% குறைவு |

எனவே, குறைந்த விலைப்புள்ளி அளித்த மேற்கண்ட ஒப்பந்ததாரருக்கு பணியினை மேற்கொள்வதற்காக ஒப்பங்கள் கூர்ந்து ஆராயும் குழுமத்தின் ஒப்புதல் *(Tender Scrutinizing Committee)* அளிக்கப்பட்ட ஒப்பத் தொகைக்கு பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"பணி ஆணை வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.இ7/30483/2019**

**தீர்மான எண்.852/2019** **நாள்:30-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-4, சுகாதார துறையில் பணிபுந்த திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர் என்பவர் 17.11.2013 முதல் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து இவர்மீது துணை விதி 9(2)ன்கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டது - விசாரணை அலுவலரது அறிக்கை பெறப்பட்டது பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருந்து பணிநீக்கம் செய்து இறுதி ஆணை வழங்கப்பட்டது - தனியரின் முகவரிக்கு பதிவு தபால் மூலமாக அனுப்பப்பட்டது - முகவரியில் தனியர் வசிக்காத நிலையில் இறுதி ஆணையை பெறாதநிலையில் - தற்பொழுது வசிக்கும் முகவரிக்கு இறுதி ஆணையின் நகல் சார்வு செய்யப்பட்டது - தற்பொது தனியர் பணிப்பதிவேட்டின்படி 20.01.2014 முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராமல் அறியப்பட்டது - தனியர் அவர்கள் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதார துறையில் அடிப்படை சுகாதார பணியாளராக பணிபுரியும் திரு.ஆர்.அசோக்குமார் என்பவர் 17.11.2013 அன்று முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து 07.02.2014, 20.03.2014 மற்றும் 12.05.2014 ஆகிய நாட்களில் காரணம் கேட்கும் குறிப்பாணை வழங்கப்பட்டுள்ளது. பிறகு தனியருக்கு ஒப்புகையுடன் கூடிய பதிவு அஞ்சல் மூலம் 29.12.2014 அன்று குறிப்பாணை அனுப்பப்பட்டது. தனியர் குறிப்பாணைகளுக்கு எவ்வித பதிலும் அளிக்கவில்லை.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 05.02.2015 நாளிட்ட குற்றச்சாட்டுக் குறிப்பாணையில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதார துறையில் அடிப்படை சுகாதார பணியாளராக பணிபுரியும் திரு.ஆர்.அசோக்குமார் என்பவர் 17.11.2013 அன்று முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது குறித்து, பெருநகர சென்னை மாநகராட்சி 3ம் மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983-ஆம் ஆண்டு துணை விதி 9(2)ன்கீழ் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு 1 : 17.11.2013 முதல் திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர், மண்டலம்-4 என்பவர் எவ்வித முன்னறிவிப்பின்றி பணிக்கு வரவில்லை.

குற்றச்சாட்டு-2 : தனியர் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதது, பணியின்மீது அக்கறையின்மையை காட்டுகிறது. பொறுப்பு மிக்க உமது பணியை உதாசீனம் செய்வதால் பொது சுகாதாரம் சுற்றுச்சூழல் பாதுபாப்பிற்கும் கேடு விளைவிக்கும் செயலாகும்.

குற்றச்சாட்டு-3 : தனியர் தன்னிச்சையாக நின்றுவிட்ட செயல் பணியின் மீதுள்ள அக்கறையின்மையை காட்டுகிறது.

மண்டல அலுவலர்-4 அவர்களின் 27.08.2015 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு மேற்கண்ட குற்றச்சாட்டு குறிப்பாணை சார்வு செய்ய பணிப்பதிவேட்டில் உள்ள விலாசத்தில் 2 முறை (14.02.2015 மற்றும் 05.05.2015) பதிவு அஞ்சல் மூலமாக அனுப்பப்பட்டது. தனியர் பெற்றுக்கொண்டு இதுநாள் வரை எந்தவித பதிலும் மண்டல அலுவலகத்திற்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ பதில் பெறப்படவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 11.09.2015 நாளிட்ட செயல்முறை ஆணையில், மண்டலம்-4, சுகாதார துறையில் அடிப்படை சுகாதார பணியாளராக பணிபுரியும் திரு.ஆர்.அசோக்குமார் என்பவர் 17.11.2013 அன்று முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராதற்கு, சென்னை மாநகராட்சி 3ம் மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983-ஆம் ஆண்டு துணை விதி 9(2)ன்கீழ் குற்றச்சாட்டுகள் தொடர் நடவடிக்கையாக விசாரணை அலுவலர் திரு.ஆர்.சங்கரன், உதவி மின் கோட்ட பொறியாளர்/மண்டலம்-4 அவர்கள் நியமித்து செயல்முறை ஆணை வழங்கப்பட்டுள்ளது.

விசாரணை அலுவலர் அவர்களின் 17.12.2015 நாளிட்ட அறிக்கையில், மண்டலம்-4, சுகாதார துறையில், அடிப்படை சுகாதார பணியாளராக பணிபுரியும் திரு.ஆர்.அசோக்குமார் என்பவருக்கு 27.10.2015 அன்று நேரிடையாக அவரது இல்லத்திற்கு சென்று திரு.ஆர்.அசோக்குமார் அவர்களின் உறவினராகிய திரு.G.முருகையன் என்பவரிடம்

**பொ.து.ந.க.எண்.இ7/30483/2019**

திரு.ஆர்.அசோக்குமார் அவர்களை விசாரணைக்கு வருமாறு கடிதம் வழங்கி ஒப்புகை பெறப்பட்டது. ஆனால் தனியர் விசாரணைக்கு வரவில்லை, மீண்டும் 19.11.2015 அன்று விசாரணைக்கு வருமாறு 11.11.2015 அன்று பதிவு தபால் மூலமாக கடிதம் அனுப்பப்பட்டது. தனியர் இதுநாள் வரை (04.03.2016) நேரில் ஆஜராகி பணிக்கு வராதது குறித்து எவ்வித விளக்கமும் அளிக்க வரவில்லை என தெரிவித்துள்ளார்.

விசாரணை அலுவலர் அவர்களின் 31.05.2016 நாளிட்ட கடிதத்தில், மேற்கண்ட தனியர் விசாரணைக்கு ஆஜராக 09.02.2016 நாளிட்ட இறுதி கடிதத்தினை பதிவு தபால் மூலம் அனுப்பப்பட்டும் தனியர் பெறாததால் திரும்ப பெறப்பட்டது. அலுவலக உதவியாளர் திரு.எம்.விஸ்வநாதன் மற்றும் திரு.ஜி.மணிவண்ணன் மூலமாக 17.02.2016 தேதியன்று இறுதி கடிதத்தின் நகல் அவரது இல்லத்தின் சுவற்றில் ஒட்டுவதற்கு சென்றபோது, அவருடைய பக்கத்து வீட்டில் வசிப்பவர்கள் அனுமதியளிக்காத காரணத்தினால் இறுதி கடிதம் நகலினை ஒட்ட முடியவில்லை. தனியர் இதுநாள் வரையில் (04.03.2016) நேரில் ஆஜராகி பணிக்கு வராதது குறித்து எவ்வித விளக்கமும் அளிக்க வரவில்லை என விசாரணை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 01.06.2017 நாளிட்ட இறுதி செயல்முறை ஆணையில், மண்டலம்-4, சுகாதார துறையில் அடிப்படை சுகாதார பணியாளராக பணிபுரியும் திரு. ஆர்.அசோக்குமார் என்பவர் 17.11.2013 அன்று முதல் முன்னறிவிப்பின்றி பணிக்கு வராததற்கு, சென்னை மாநகராட்சி 3ம் மற்றும் 4ம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983-ஆம் ஆண்டு துணை விதி 9(2)ன்கீழ் 05.02.2015 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை சுமத்தப்பட்டது. இதனை தொடர்ந்து இத்தனியர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள், விசாரணை அலுவலரது அறிக்கை, ஆகியவை என்னால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில், குற்றஞ்சாட்டப்பட்ட தனியருக்கு போதுமான கால அவகாசம் அளித்தும் ஒத்துழைக்கவில்லையென அறிக்கை அளித்துள்ளதன்பேரில், இந்நிகழ்வில் தண்டனையாக பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருந்து **பணிநீக்கம் *(Removal from Service)*** செய்தும் மற்றும் பணிக்கு வராத காலத்தினை **ஊதியமில்லா விடுப்பாக பாவித்தும்** ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர் (பணி நீக்கம்) என்பவர் பணிப்பதிவேட்டில் உள்ள முகவரியான சென்னை-600066, புழல், பஜனை கோயில் தெரு, எண்.1ல் உள்ளமுகவரிக்கு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 01.06.2017 நாளிட்ட இறுதி செயல்முறை ஆணையினை ஒப்புகை பதிவு அஞ்சல் மூலமாக 04.08.2017 மற்றும் 21.09.2017 அனுப்பப்பட்டு, ஒப்புகை சீட்டு பெறப்பட்டுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர் அவர்களின் 11.07.2018 நாளிட்ட கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-4, சுகாதார துறையில் பணிபுரிந்த திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர் ஆகிய நாள் 17.11.2013 முதல் பணிக்கு வரவில்லை என்றும் பணிக்கு வராத காரணம் தனியரது தாயாருக்கு உடல் நிலை சரியில்லாத காரணத்தால் வைத்திய செலவுக்காக பணம் கடன் பெற்றேன் என்றும், அதனை திருப்பி செலுத்த முடியாததாலும் மற்றும் குடும்ப சூழ்நிலை காரணமாகவும் நான் குடியிருந்த வீட்டை விட்டு வெளியேறினோம் என்றும், மேலும், தனது தாயார் தனது சகோதரி வீட்டில் 23.12.2017 அன்று காலமானதால் இறுதியாக வாழ்ந்து வந்த தன் சகோதரியின் வீட்டிற்கு வர வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும், தனது தாயார் இறந்த பிறகு கடன் கொடுத்தவர்கள் சிறுக சிறுக திரும்ப தர ஒப்புக்கொண்டார்கள் எனவும், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 05.02.2015 நாளிட்ட கடிதத்தின், தொடர்ச்சியாக மண்டலம-4, சுகாதாரத்துறை அணுகியபோது தன்மீது ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டு இறுதி ஆணையில் பெருநகர சென்னை மாநகராட்சி பணியில் இருந்து பணி நீக்கம் செய்த ஆணையை பழைய முகவரியான எண்.1, பஜனை கோயில் தெரு, புழல், சென்னை-66 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது என்று கூறினார்கள்எனவும், ஆனால் அங்கு வசிக்காத நிலையில் அந்த இறுதி ஆணையை நான் பெறவில்லை. இனி வரும் காலங்களில் இதுபோன்று தெரிவிக்காமல் பணிக்கு வராமல் இருக்க மாட்டேன் என்று உறுதி அளிக்கிறேன். எனவே, தன்னை மன்னித்து மீண்டும் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிவதற்கு இறுதி ஆணையை தனக்கு வழங்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொண்டுள்ளார்.

**பொ.து.ந.க.எண்.இ7/30483/2019**

திருஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர்(பணி நீக்கம்) அவர்கள், தன் மீது ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்தது, குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கியது, விசாரண அலுவலர் அவர்கள் விசாரணைக்கு ஒத்துழைக்கைவில்லை என தெரிவித்தது மற்றும் தனக்கு இறுதி ஆணையாக பணிநீக்கம் செய்யப்பட்டது ஆகியவை யாவும் தனக்கு தெரியாது எனவும், தான் இதுநாள் எவ்வித ஆணையும் பெறாமல் இருந்ததாக, மண்டல அலுவலர் – 4, அவர்களுக்கு 11.07.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவித்துள்ளதன் அடிப்படையில், 11.08.2018 நாளிட்ட இறுதி ஆணையை தபால் மூலம் 16.08.2018 அன்று பெற்றதாகவும் தெரிவித்துள்ளார்.

திருஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர், என்பவர், சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு 20.09.2018 நாளிட்டு சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீடு மனுவில், தனக்கு வழங்கப்பட்ட பணிநீக்க ஆணையில், 17.11.2013 முதல் பணிக்கு வரவில்லை என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் நான் 19.01.2014 வரை தனக்கு கொடுத்த பணியை முறையாக செய்து சென்னை மாநகராட்சி, மண்டலம்-4ல் இருந்து ஊதியமும் பெற்றுள்ளேன் என்றும் தான் கடன்தொல்லை காரணமாகவே 20.01.2014 முதல் பணிக்கு வர முடியாத சூழ்நிலை ஏற்பட்டது எனவும், மேலும், தன் தாயும் 23.12.2017 அன்று இறந்து விட்டார்கள், தற்போது நான் மிகவும் கஷ்டமான சூழ்நிலையில் உள்ளேன் எனவும், எனவே ஐயா அவர்கள் தனது மேல் முறையீட்டு மனு மீது கருணை கொண்டு தன்னை மன்னித்து மீண்டும் பணியில் சேர்த்து கொள்ளுமாறு பணிவுடன் தெரிவித்தும் மற்றும் வரும் காலங்களில் இதுபோன்ற தவறுகள் நடக்கா வண்ணம் நடந்து கொண்டும் என் பணி மீது அக்கறை கொண்டு பணி செய்வேன் என்று உறுதி அளிப்பதாக தெரிவித்துள்ளார்.

திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர், (பணநீக்கம்) மண்டலம்-4, அவர்கள், சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேல்முறையீட்டு மனுவினை, வட்டார துணை ஆணையர் (வடக்கு) அலுவலகத்திலிருந்து நேரடியாக ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 13.09.2019 நாளிட்ட ஆணையில் *"No fresh grounds to consider, earlier punishment confirmed"* என ஆணை வழங்கப்பட்டது.

ஆகவே, திரு.ஆர்.அசோக்குமார், அடிப்படை சுகாதார பணியாளர், (பணநீக்கம்) மண்டலம்-4, அவர்கள், வகுப்பு – 3 சார்ந்த பணியாளர் என்பதால், ஆணையர் அவர்களின் 13.09.2019 நாளிட்ட ஆணையின் மீது மன்றத்தீர்மானம் நிறைவேற்றி, தனியருக்கு ஆணை வழங்கும் பொருட்டு, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 16.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"There is no grounds to consider and the request is rejected என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.இ7/29627/2019**

**தீர்மான எண்.853/2019** **நாள்:30-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - பொது சுகாதாரத்துறை மண்டலம்-5, திரு.எஸ்.மோகன்ராஜ், சுகாதார ஆய்வாளர், கோட்டம்-54 என்பவரை நிர்வாக நலன் கருதி 06.02.2017 முதல் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டது - துணை விதி 9(2)ன் கீழ் ஒழுங்கு நடவடிக்கை தொடரப்பட்டது தனியர் மீது தொடங்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர அனுமதி வழங்கப்பட்டது - விசாரணை அலுவலரை நியமித்து விசாரணை மேற்கொண்டு விசாரணை அறிக்கை பெறப்பட்டது - கூடுதல் விளக்கம் பெறப்பட்டது - தனியரை நேரடி விசாரணைக்கு உட்படுத்தி இறுதி ஆணை வழங்கப்பட்டது - இறுதி ஆணையின் மீது மேல்முறையீடு செய்தது - தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை, மண்டலம்-5, கோட்டம்-54, சுகாதார ஆய்வாளராக பணிபுரியும் திரு.எஸ்.மோகன்ராஜ், என்பவர், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களால் பிறப்பிக்கப்பட்ட பணியிட மாறுதல் உத்தரவை 23.12.2016 அன்று பெற்றுக்கொண்டு தொடர்ந்து பணி விடுவிப்பு ஆணை பெற்றுக்கொள்ளாமல் முன்னறிவிப்பின்றி 26.12.2016 முதல் பணிக்கு வராமல் இருந்ததால், தனியர் மீது பிறப்பிக்கப்பட்ட குறிப்பாணையையும் பெறாமல், 03.01.2017 அன்று, 26.12.2016 முதல் 22.01.2017 வரை 28 நாட்களுக்கு மருத்துவ விடுப்பு கோரி தனியர் கடிதம் அளித்ததை தொடர்ந்து தனியரை மருத்துவ குழுமத்திற்கு மருத்துவ தகுதி சான்று பெற, கடிதம் அனுப்பியதின்பேரில் தனியர் ஒரு மருத்துவ அலுவலரிடமிருந்து மருத்துவ தகுதி சான்று பெற்று பணியில் சேர்ந்து விட்டதாக, மண்டல அலுவலகம் - 5, தபால் பிரிவில் 24.01.2017 அன்று கடிதம் அளித்துவிட்டு, 27.01.2017 அன்று காலை அத்துமீறி, கோட்டம்- 54 சுகாதார ஆய்வாளர் அலுவலகத்தில் நுழைந்து 23.01.2017 முதல் முன் தேதியில் கையொப்பமிட்டுள்ளார். 28.01.2017 அன்று தங்கசாலையில் அமைந்துள்ள பழைய அம்மா உணவகத்திற்கு நேரில் சென்று 23.01.2017, 24.01.2017, 25.01.2017, 27.01.2017 மற்றும் 28.01.2017 ஆகிய நாட்களில் நேரில் ஆய்வு செய்ததாக ஆய்வு குறிப்பு எழுதியுள்ளார். மேலும் தனியர், அரசியல் பிரமுகர் என கூறிக்கொண்ட திரு.பெரம்பை சண்முகம் மற்றும் திரு.மோகன்பாபு ஆகிய நபர்களுடன் இணைந்து, மண்டல நல அலுவலர்-5 மற்றும் துப்புரவு அலுவலர் ஆகியோரை மிரட்டியதாகவும், 28.01.2017 அன்று மாலை திரு.எஸ். மோகன்ராஜ், சுகாதார ஆய்வாளர் மற்றும் அரசியல் பிரமுகரும் அலைபேசியில் தொடர்பு கொண்டு கெட்ட வார்த்தைகளால் அவதூறாக பேசியதாகவும், இதனை தொடர்ந்து தனியரை தற்காலிக பணிநீக்கம் செய்து, பெருநகர சென்னை மாநகராட்சி, வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப்பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983ம் வருடம் துணை விதி 9(2)ன் கீழ் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டு விளக்கம் பெறப்பட்டு, தனியரின் தற்காலிக பணி நீக்கத்தை ரத்து செய்து, ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி மீண்டும் பணியில் சேர அனுமதிக்கப்பட்டது.

வடக்கு வட்டார துணை ஆணையர் அவர்களின் 05.07.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.ஜி.சொக்கலிங்கபிள்ளை, செயற்பொறியாளர், மண்டலம் - 5, அவர்களை விசாரணை அலுவலராக நியமிக்கப்பட்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. விசாரணை அலுவலரின் 05.10.2018 நாளிட்ட அறிக்கையை தனியருக்கு சார்வு செய்து, தனியரின் 23.10.2018 நாளிட்ட கூடுதல் விளக்கம் பெறப்பட்டது. விசாரணை அலுவலரின் அறிக்கை மற்றும் தனியரின் கூடுதல் விளக்கம் கீழ்கண்டுள்ளவாறு அளிக்கப்பட்டுள்ளது.

**குற்றச்சாட்டு -1**

தாங்கள் நீண்ட மருத்துவ விடுப்பில் இருந்த இவர் தனது மேலதிகாரியின் அனுமதி இன்றி 23.01.2017 அன்று பணியில் சேர்ந்ததாக தெரிவித்து 24.01.2017 அன்று பணியில் அதிகாரி முன் நேரிடையாக ஆஜராகாமல் தபாலில் பணிசேர் அறிக்கையை அளித்ததின் மூலம் அலுவலக நடைமுறையை பின்பற்றாதது.

**குற்றச்சாட்டு -1ற்கு தனியரின் விளக்கம்**

நான் எனது பணிசேர் அறிக்கையினை மண்டல நலஅலுவலர்-5 அவர்களிடம் அளிப்பதற்காக மண்டல அலுவலகத்தில் இருந்தேன். மண்டல நல அலுவலர்-5 அவர்கள் கோட்ட ஆய்வு பணிகளுக்காக வெளியே சென்றிருந்ததால், மறுநாள் 24.01.2017 அன்று பணி சேர்வு

அறிக்கையினை, மண்டல அலுவவர்-5 அவர்களை நேரில் சந்தித்து விட்டு, அவர் கூறியதின் பேரில் பணி சேர்வு கடிதத்தை தபாலில் அனுப்பினேன். பணி சேர்வு குறித்த தகவலை 23.01.2017 அன்று மண்டலநல அலுவலர்-5 மற்றும் துப்புரவு அலுவலர், பகுதி-13 அவர்களிடமும் WhatsApp செயலி மூலமும், அலைபேசியில் பேசியும் தெரிவித்தேன்.

**குற்றச்சாட்டு - 1ற்கான விசாரணை அலுவலரின் அறிக்கை**

தனியரின் விளக்கம் ஏற்புடையதாக இல்லை. தனியர் 28 நாட்கள் மருத்துவ விடுப்பிலிருந்து உடற்தகுதி சான்றிதழ் பெற்று துறைத்தலைவரை நேரில் சந்தித்து விளக்கமளித்து பணியில் சேர்ந்திருக்க வேண்டும். இதனை கடைபிடிக்கவில்லை. அலுவலக நடைமுறையினை பின்பற்றாமல் whatsappல் தெரிவித்ததாக சொல்வது ஏற்புடையதல்ல. எனவே, தனியர் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிறது.இருப்பினும் அன்றைய தினத்தில் ஆஜராகித் துறைத்தலைவர் பார்க்க முடியாமல் போனதால்தான் இவ்வாறு செய்ததாக தெரிவித்ததாக பரிசீலித்ததில் இவருக்கு மன்னிப்பு வழங்கலாம்.

**குற்றச்சாட்டு -1ற்கான தனியரின் கூடுதல் விளக்கம்**

குற்றச்சாட்டு வரிசை எண்.1க்கு எனது பணிவான விளக்கம் யாதெனில் நான் எனது பணிசேர் அறிக்கையினை மண்டல நல அலுவலர்-5, அவர்களிடம் அளிப்பதற்காக மண்டல அலுவலம்-5ல் இருந்தேன். மண்டல நல அலுவலர்-5 அவர்கள் கோட்ட ஆய்வு பணிகளுக்காக மண்டல அலுவலகத்திலிருந்து வெளியே சென்றிருந்ததால், அவர்களை நேரில் சந்திக்க இயலாததால் பணி சேர்வு குறித்த தகவலை 23.01.2017 அன்று மண்டல நலஅலுவலர்-5 மற்றும் துப்புரவு அலுவலர் பகுதி-13 அவர்களிடமும் whatsapp செயலி மூலமும், அலைபேசியில் பேசியும் தெரிவித்தேன்.

இதற்கு மறுநாள் 24.01.2017அன்று பணி சேர்வு அறிக்கையினை மண்டல அலுவலர்-5 அவர்களை நேரில் சந்தித்துவிட்டு அவர் கூறியதின் பேரில் பணி சேர்வு கடிதத்தை தபாலில் அனுப்பினேன்.

**குற்றச்சாட்டு-2**

தாங்கள் மேலதிகாரியின் அனுமதியின்றி ஆவணங்களை சிதைக்கும் வண்ணம், வருகை பதிவேடு மற்றும் அம்மா உணவக பதிவேடுகளில் ஆய்வு மேற்கொண்டதாக தன்னிச்சையாக செயல்பட்டு கையொப்பமிட்டது.

**குற்றச்சாட்டு -2ற்கான தனியரின் விளக்கம்**

மண்டல அலுவலகம்-5லிருந்து எனக்கு எனது மருத்துவ விடுப்பு நிராகரிக்கப்பட்டதற்கான கடிதம் எதுவும் பெறப்படாததும், மருத்துவ போர்டுக்கு சென்று வருமாறு, மண்டல அலுவலகம்-5 லிருந்து எனது சொந்த ஊராகிய திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை 24.01.2017க்கு பிறகுதான் எனக்கு கிடைக்க பெற்றது. அதனால், நான் பணியில் இணைந்து இருப்பதாக கருதி, வருகை பதிவேடு மற்றும் அம்மா உணவக பதிவேடுகளில் கையொப்பமிட்டேன். ஆவணங்களை சிதைக்கும் எண்ணத்துடன் எந்த செயலையும் நான் செய்யவில்லை என்பதனை தங்களின் மேலான பார்வைக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு -2ற்கான விசாரணை அலுவலரின் அறிக்கை**

தனியரை மருத்துவ குழுவில் ஆஜராக கடிதம் மதுரை/திண்டுக்கல்லில் அவர் சொந்த ஊருக்கு அனுப்பியதால் தனக்கு காலதாமதமாக கிடைக்கப்பெற்றதால் அதன்படி குழுவிற்கு ஆஜராகவில்லை என்று தெரிவித்துள்ளார். இந்த நிகழ்வு தெரியாமல் தான் பணியில் சேர்ந்ததாகவும், ஆவணங்களை சிதைக்கும் நோக்கம் எதுவும் இல்லை எனவும் கூறியுள்ளார். இதன் மூலம் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் ஆகிறது. இருப்பினும் 23.01.2017 அன்று அம்மா உணவகத்தில் கையொப்பம் இட்டதை கண்டித்து மன்னிப்பு வழங்கலாம்.

**குற்றச்சாட்டு -2ற்கான தனியரின் கூடுதல் விளக்கம்**

குற்றச்சாட்டு 2க்கு எனது பணிவான விளக்கம் யாதெனில், மண்டல அலுவலகம்-5லிருந்து எனக்கு எனது மருத்துவ விடுப்பு நிராகரிக்கப்பட்டதற்கான கடிதம் எதுவும் பெறப்படாததாலும், மருத்துவ குழுமத்திற்கு சென்று வருமாறு மண்டல அலுவலகம்-5லிருந்து எனது சொந்த ஊராகிய திண்டுக்கல்லுக்கு அனுப்பப்பட்ட கடிதத்தை 24.01.2017க்கு பிறகுதான் எனக்கு கிடைக்கப்பெற்றது.

மேலும் மண்டல அலுவலகம்-5லிருந்து மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டது எனது மருத்துவ சோதனை கடிதம் (Medical Checkup Letter) முதலில் தவறுதலாக மதுரை மருத்துவ போர்டுக்கு அனுப்பப்பட்டு பின்பு அங்கிருந்து திண்டுக்கல் மருத்துவ போர்டுக்கு காலதாமதமாக கிடைக்கப்பெற்றதால், அங்குள்ள திண்டுக்கல் போர்டு அலுவலக ஊழியர்கள் இதற்கான மருத்துவ சோதனை கால அளவு (Period) முடிந்துவிட்டதாக கூறி அக்கடிதத்தை மீண்டும் சென்னை மாநகராட்சி மண்டலம்-5க்கு அனுப்பி வைப்போம் என்று கூறினர். அதனால் பணியில் இணைந்து இருப்பதாக கருதி, வருகை பதிவேடு மற்றும் அம்மா உணவக பதிவேடுகள் கையொப்பமிட்டேன்.

ஆவணங்களை சிதைக்கும் எண்ணத்துடன் எந்த செயலையும் நான் செய்யவில்லை என்பதனை தங்களின் மேலான பார்வைக்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு-3**

தங்கள் மீதான 25.01.2017 நாளிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணையை ரத்து செய்ய கோரி 28.01.2017 அன்று அரசியல் பிரமுகர் மூலம் மண்டல நல அலுவலருக்கு அழுத்தம் கொடுத்தது. மேலும், அலைபேசியில் தொடர்பு கொண்டு தரக்குறைவான வார்த்தைகளால் அவதூறாக பேசியது மற்றும் உயர் அதிகாரிகள் மீது களங்கம் உண்டாக்கும் வண்ணம் சுவரொட்டி ஒட்டியது.

**குற்றச்சாட்டு -3ற்கான தனியரின் விளக்கம்**

நான் குற்றச்சாட்டு குறிப்பாணையை ரத்து செய்ய கோரி 28.01.2017 அன்று அரசியல் பிரமுகர் மூலம் மண்டலநல அலுவலர்-5 அவர்களுக்கு எந்த விதத்திலும் அழுத்தம் கொடுக்கவில்லை. மேலும், அலைபேசியில் தொடர்பு கொண்டு தரக்குறைவான வார்த்தைகளால் அவதூறாக பேசவில்லை, மற்றும் உயர் அதிகாரிகள் மீது களங்கம் உண்டாக்கும் வண்ணம், சுவரொட்டி ஒட்டவில்லை.

**குற்றச்சாட்டு -3ற்கான விசாரணை அலுவலரின் அறிக்கை**

தனியர் விசாரணையில் எந்த ஒரு அரசியல்வாதியின் மூலம் இது சம்மந்தமாக அழுத்தம் கொடுக்கப்படவில்லை என தெரிவித்தார். சுவரொட்டி ஒட்டுவதற்கும் தனக்கும் எந்தவொரு சம்மந்தமும் இல்லை என தெரிவித்துள்ளார். இதன் மூலம் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் ஆகவில்லை.

**குற்றச்சாட்டு -4**

மாநகராட்சி ஊழியரான இவர் அலுவலக நடைமுறைகளை கடைபிடிக்காமல் பொது மக்களுக்கான சுகாதாரப் பணிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தி பெருநகர சென்னை மாநகராட்சியின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தியது

**குற்றச்சாட்டு -4ற்கான தனியரின் விளக்கம்**

நான் எந்த வகையிலும், சுகாதார பணிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தவில்லை என்பதால், நான் பெருநகர சென்னை மாநகராட்சியின், நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கவில்லை என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு -4ற்கான விசாரணை அலுவலரின் அறிக்கை**

தனியர் விசாரணையில் சுகாதார பணிகளுக்கு குந்தகம் ஏற்படுத்தவில்லை எனவும் தெரிவித்தார். இனிவரும் காலங்களில் இது போன்ற நிகழ்வுகள் ஏற்படாமல் பார்த்து கொள்ளவும் நடப்பதாக தெரிவித்தார். இதன் மூலம் தனியர் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு நிரூபணம் ஆகவில்லை.

**பொ.து.ந.க.எண்.இ7/29627/2019**

**குற்றச்சாட்டு-5**

பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20 ஐ மீறி செயல்பட்டதின் மூலம் பணியாளர் என்ற தகுதியை இழப்பது

**குற்றச்சாட்டு -5ற்கான தனியரின் விளக்கம்**

மேற்கண்ட குற்றச்சாட்டுகளுக்கு உண்டான செயல்கள் எதுவும், நான் செய்யாததால், சென்னை மாநகராட்சியின் நடத்தை விதி 20ஐ மீறவில்லை என்பதனை பணிவுடன் தெரிவித்துக் கொள்வதுடன், வருங்காலங்களிலும், மேற்கண்ட விதியை மீற மாட்டேன் என்பதனை தெறிவித்துக் கொள்கிறேன்.

**குற்றச்சாட்டு -5ற்கான விசாரணை அலுவலரின் அறிக்கை**

தனியர் விசாரணையில் குற்றச்சாட்டுகளுக்கு உண்டான செயல்கள் ஏதும் செய்யவில்லை என கூறியுள்ளார். மேலும் இது போன்ற நிகழ்வுகள் இனிவரும் காலங்களில் ஏற்படாமல் பார்த்து கொள்வதாக தெரிவித்தார். இதன் மூலம் குற்றச்சாட்டு நிரூபணம் ஆகவில்லை. இதனை ஏற்கலாம் என தெரிவித்துள்ளார்.

வட்டார துணை ஆணையர்(வடக்கு) அவர்களின் இறுதி ஆணையில், திரு.எஸ்.மோகன்ராஜ், சுகாதார ஆய்வாளர், கோட்டம்-54 என்பவர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி, மூன்று மற்றும் நான்காம் நிலைப்பணியாளர் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) 1983 துணை விதி 9(2)ன் கீழ் தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில், இத்தனியர் மீதான குற்றச்சாட்டுகள், தனியரது விளக்கம் விசாரணை அலுவலரது விசாரணை அறிக்கை, தனியரது கூடுதல் விளக்கம் ஆகியவை மிக கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

விசாரணை அலுவலர் அளித்த அறிக்கையில் குற்றச்சாட்டு 1 மற்றும் 2 நிரூபணமாகிறது எனவும், மற்றக்குற்றச்சாட்டுகள் நிரூபணமாகவில்லை எனவும், தெரிவித்துள்ளார். இது தனியர் புரிந்த முதல் குற்றமாகும். எனவே, குற்றச்சாட்டுகள் நிரூபணமாகிறது எனக் கருதப்பட்டு வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 08.02.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, இறுதி ஆணையாக **"கண்டனம்"** தண்டனையாக விதிக்கப்பட்டது. மேலும் தனியரின் தற்காலிகப் பணிநீக்க காலம் ஊதியமில்லா விடுப்பாக பாவிக்கப்படுகிறது என ஆணை பிறப்பிக்கப்பட்டது.

மேற்கண்ட வடக்கு வட்டார துணை ஆணையர், அவர்களின் செயல்முறை ஆணையை பெற்றுக்கொண்ட தனியர், தனது 22.03.2019 நாளிட்ட மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்துள்ளார். மேலும், தனியர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவில், ஏற்கனவே விளக்கம் மற்றும் கூடுதல் விளக்கத்தில் அளித்துள்ள விவரங்களை மீண்டும் அளித்துள்ளார்.

ஆகவே, திரு.எஸ்.மோகன் ராஜ், சுகாதார ஆய்வாளர், அவர்கள், வகுப்பு -3ஐ சார்ந்த பணியாளர் என்பதால், தனியரின் மேல்முறையீட்டு மனுவின் மீது உரிய முடிவு எடுக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் வசம் உள்ளதால், தனியரின் மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 16.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"There is no grounds to consider the request. Earlier punishment stands confirmed என சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**பொ.து.ந.க.எண்.ஈ2/37511/2019**

**தீர்மான எண்.854/2019** **நாள்:31-12-2019**

**பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-12 - டாக்டர்.எஸ்.மல்லிகா, மண்டல சுகாதார அலுவலர், அவர்கள் 31.12.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.**

வட்டார துணை ஆணையர் (தெ) அவர்களின் 23.12.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, டாக்டர்.எஸ்.மல்லிகா, மண்டல சுகாதார அலுவலர், அவர்கள் 31.12.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவித்தும், இவருடைய பிறந்த தேதி 13.12.1961 எனவும்,

தனியர் 26.06.1996 முதல் மதுரை மாநகராட்சியில் மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்தார் எனவும், அதன் பின்னர் பல்வேறு மண்டலங்களில்/துறைகளில் பணிபுரிந்த விவரங்கள் பின்வருமாறு தெரிவித்து தனியரது பணி ஓய்வு ஆணை வேண்டி கோப்பு வரப்பெற்றது.

| வ. எண் | வகித்த பதவி | துறை/மண்டலம் | பணிபுரிந்த காலம் |
|---|---|---|---|
| 1 | மருத்துவ அலுவலர் | மதுரை மாநகராட்சி | 26.06.1996 முதல் 28.02.2001 வரை |
| 2 | | மண்டலம்-8 | 01.03.2001 முதல் 22.05.2008 வரை |
| 3 | மண்டல மருத்துவ அலுவலர் | மண்டலம்-4 | 22.05.2008 முதல் 13.01.2009 வரை |
| 4 | | மண்டலம்-8 | 14.01.2009 முதல் 29.07.2013 வரை |
| 5 | | மண்டலம்-12 | 29.07.2013 முதல் தற்போது வரை |

தனியருக்கு மருத்துவ அலுவலர் பதவியில் எச்.எப்/21581/98, 21.01.1999 நாளிட்ட ஆணையின்படி, 26.06.1996 முற்பகல் முதல் பணிவரன்முறைப்படுத்தியும், 25.06.1998 பிற்பகல் முதல் தகுதிகாண்பருவம் முடித்தவராக அறிவித்தும் ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும், மண்டல சுகாதார அலுவலர் பதவியில் சு.து.ந.க.எண்.சி1/7563/2007, 28.01.2010 நாளிட்ட ஆணையின்படி 22.05.2008 முதல் பணிவரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டது.

தனியர் பணிபுரிந்துள்ள மண்டலம்/துறைகளிலிருந்து முன்பண நிலுவை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனச் சான்றுகள் பெறப்பட்டுள்ளது.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தின் 03.01.2019 நாளிட்ட கடிதத்தில் **சங்க உறுப்பினர் இல்லை** என சான்றிதழ் அளிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 17.12.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது விழிப்புக்குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 27.12.2019 நாளிட்ட குறிப்பில், டாக்டர்.எஸ்.மல்லிகா, மண்டல சுகாதார அலுவலர், அவர்கள் மருத்துவ அலுவலர் மற்றும் மண்டல சுகாதார அலுவலராக பணிபுரிந்த காலங்களில் 2000-2001 ஆம் ஆண்டு முதல் 2017-2018 ஆம் ஆண்டு முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி, மொத்தம் ரூ.39,64,350/- உள்ளடக்கிய 7 தணிக்கைத்தடைப் பத்திகள் கூட்டுப் பொறுப்பு மற்றும் தனி பொறுப்பில் நிலுவையில் உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட கூட்டுப் பொறுப்பில் மொத்தம் ரூ.5,71,607/- உள்ளடக்கிய 7 தணிக்கைத் தடைப் பத்திகள் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது. தொ.க.எண்.6.ஈ1/2019, நாள்.30.12.2019ன்படி இப்பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேலும், 2018-2019 ஆம் ஆண்டு முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதி தணிக்கைத் துறையால் வெளியிடப்படவில்லை என்றும் மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கை தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் என்றும் அறிக்கை அளிக்கப்பட்டுள்ளது.

தனியர் மீது 31.12.2019 வரை தனிப்பட்ட முறையிலோ கூட்டு பொறுப்பிலோ தனியரை பொறுப்பாக்கி நிதி இழப்பீடு இருப்பது குறித்து தெரியவரின் அத்தொகையை தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பயன்கள், ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ள தனியர் ரூ.20/- முத்திரை தாளில் சம்மதித்து ஒப்புதல் அளித்துள்ளார்.

**பொ.து.ந.க.எண்.ஈ2/ 37511/ 2019**

மேலும், இணை இயக்குநர் (மு.க.பொ), உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 13.12.2019 நாளிட்ட கடிதத்தில், தணிக்கைத் தடையில் 2018-2019 ஆம் ஆண்டு தணிக்கை மேற்கொண்டதில் டாக்டர்.எஸ்.மல்லிகா, மண்டல சுகாதார அலுவலர் அவர்களுக்கு காலவரையறையுடனான ஊதிய விகித உயர்வு (Time bound promotion with pay hike) அனுமதித்ததில் குறைபாடுகள் கண்டறியப்பட்டு அது தொடர்பான தணிக்கை தடைச் சீட்டு எண்.19/2018-2019 ஆம் ஆண்டில் தனியருக்கு வழங்கப்பட்ட மொத்த தொகையில் ரூ.40,61,871/-ல் 50 சதவீத தொகை ரூ.20,30,936/- வழங்கியது, தனியரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் மேற்கண்ட ஊதிய திருத்தத்தினால் எழும் மிகை ஊதியம் மற்றும் பிற படிகள் (சரண் தொகை உள்பட) ஆகியவை கணக்கிட்டு பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் 06.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் பெறப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தனியர் வகுப்பு 2-ஐ சார்ந்த அலுவலர் என்பதால் தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் பெருநகர சென்னை மாநகராட்சி சிறப்பு அதிகாரி, மன்றம் அவர்களின் வசம் உள்ளது.

ஆகவே, மேற்காணும் விவரங்களின் அடிப்படையிலும் மற்றும் வட்டார துணை ஆணையர் தெற்கு அவர்களின் பரிந்துரையின் அடிப்படையிலும், டாக்டர்.எஸ்.மல்லிகா, மண்டல சுகாதார அலுவலர், பொது சுகாதாரத்துறை, மண்டலம்-12, அவர்கள் மீது தணிக்கை தடைச் சீட்டு எண்.19/2018-2019 ஆம் ஆண்டில் தனியருக்கு வழங்கப்பட்ட மொத்த தொகையில் ரூ.40,61,871/-ல் 50 சதவீத தொகை ரூ.20,30,936/- வழங்கியது, தனியரிடமிருந்து பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்றும் மேற்கண்ட ஊதிய திருத்தத்தினால் எழும் மிகை ஊதியம் மற்றும் பிற படிகள் (சரண் தொகை உள்பட) ஆகியவை கணக்கிட்டு பிடித்தம் செய்யப்பட வேண்டும் என்று 06.12.2019 நாளிட்ட கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டு பத்தி நிலுவையில் உள்ளதையும், 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித் தணிக்கையின் அறிக்கை வெளியிடப்படாத நிலையில், நிதி சம்மந்தப்பட்ட தணிக்கை தடைகளால் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு, நீண்ட கால முன்பணம் பெற்று தீர்வு செய்யப்படாமை ஆகிய காரணங்களால் நிதி இழப்பீடு ஏதேனும் நிலுவையில் இருப்பது பின்னர் தெரியவரின், அவைகளுக்கும் தனியரை பொறுப்பாக்கி அத்தொகைகளை அவரது ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைகளுக்குட்பட்டு தனியரை 31.12.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி1/1077/2019**

**தீர்மான எண்.855/2019** **நாள்:31-12-2019**

**ஒப்பம் - கட்டடத்துறை – மண்டலம் 1 வார்டு 11 திருவொற்றியூரில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார மருத்துவமனையில் (100 beds) Fire Fighting Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக திருவாளர்கள் கஜலட்சுமி கன்ஸ்ட்ரக்ஷன் அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-1, வார்டு-11 திருவொற்றியூரில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார மருத்துவமனையில் (100 beds) Fire Fighting Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 573/2019 நாள் 24.09.2019 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2019 -2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 94,40,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 77,72,713.80 |
| | (ஆ) எதிர்பாரா செலவு | ரூ. 1,93,041.01 |
| | (இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 77,727.14 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 13,96,518.05 |
| | மொத்தம் | ரூ. **94,40,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 29.08.2019<br>2. இந்தியன் எக்ஸ்பிரஸ் 29.08.2019<br>3. தின செய்தி நாள் 29.08.2019 |
| 7 | ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 16.09.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் (NUHM) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 23.10.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

**க.து.ந.க.எண்.பி1/1077/2019**

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2019-2020 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s Gajalakshmi Construction | 77,72,713.80 | 1,03,37,709.35 | (+) 33.00% அதிகம் |
| 2 | M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd | 77,72,713.80 | 1,08,04,072.18 | (+) 39.00% அதிகம் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 16.09.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. ஒப்ப தகுதியான பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டடத்துறையில் வகுப்பு – 1 ஒப்பந்ததாராக பதிவு செய்திருத்தல் வேண்டும், இந்த ஒப்ப நிபந்தனை சரிபார்க்கப்பட்டு 17.09.2019 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s Gajalakshmi Construction அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. 1,03,37,709.35 ஆனது 2019-2020 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 77,72,713./- யுடன் ஒப்பிடுகையில் (+)33.00% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய 25.09.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 08.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | மதிப்பீட்டில் பணியின் தொகை 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | விலைக் குறைப்பு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 18% சேர்த்து |
|---|---|---|---|---|---|
| M/s Gajalakshmi Construction | 77,72,713.80 | 1,03,37,709.35 | 85,11,121.61 | (+)9.50% அதிகம் | 1,00,43,123.50 |

மேற்கண்ட விவரங்கள் 18.11.2019 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (TENDER SCRUTINY COMMITTEE) சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கான பணித்தொகை *GST* தவிர்த்து ரூ. 85,11,121.61 ஆகவும், ஒப்ப மொத்த தொகையான ரூ. 1,00,43,123.50 (சரக்கு மற்றும் சேவை வரி 18%) க்கான ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை M/s Gajalakshmi Construction அவர்களுக்கு வழங்கலாம் என ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1) பணியின் அவசியம் மற்றும் அவசரம் கருதி ஒப்பம் கோரியமைக்கு பின்னேற்பு அனுமதியும்,
2) இப்பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த M/s Gajalakshmi Construction அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ. 85,11,121.61 (ரூபாய் எண்பத்து ஐந்து இலட்சத்து பதினோறாயிரத்து நூற்று இருபத்து ஒன்று மற்றும் அறுபத்து ஒரு பைசா மட்டும்) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 18% தொகை ரூ.15,32,001.89 ஆக மொத்தம் ரூ.1,00,43,123.50க்கு (ரூபாய் ஒரு கோடியே நாற்பத்து மூன்றாயிரத்து நூற்று இருபத்து மூன்று மற்றும் ஐம்பது பைசா மட்டும்), 2019-2020ம் ஆண்டின்

**க.து.ந.க.எண்.பி1/1077/2019**

அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலின்படி (+)9.50% அதிகமான விழுக்காட்டிற்கு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கவும், ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.12.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி1/1076/2019**

**தீர்மான எண்.856/2019** **நாள்:31-12-2019**

**ஒப்பம் - கட்டடத்துறை – மண்டலம் -2, வார்டு- 19, மணலியில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார மருத்துவமனையில் (100 beds) Fire Fighting Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக திருவாளர்கள். பொன்குழலி அண்டு கோ அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-2, வார்டு-19 மணலியில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார மருத்துவமனையில் (100 beds) Fire Fighting Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 572/2019 நாள். 24.09.2019 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2019 -2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 74,30,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 61,20,438.50 |
| | (ஆ) எதிர்பாரா செலவு | ரூ. 1,51,734.12 |
| | (இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 61,204.39 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 10,96,622.99 |
| | மொத்தம் | ரூ. **74,30,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 03.10.2019<br>2. இந்தியன் எக்ஸ்பிரஸ் 02.10.2019 |
| 7 | ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 23.10.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் (NUHM) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 23.10.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2019-2020 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s R.Krishnamurthy and Co | 61,20,438.50 | 76,50,548.13 | (+) 25.00% அதிகம் |
| 2 | M/s Ponkulali and Co | 61,20,438.50 | 73,44,526.20 | (+) 20.00% அதிகம் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 23.10.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. ஒப்ப தகுதியான பெருநகர சென்னை மாநகராட்சியில் கட்டடத்துறையில் வகுப்பு – 1 ஒப்பந்ததாராக பதிவு செய்திருத்தல் வேண்டும், இந்த ஒப்ப நிபந்தனை சரிபார்க்கப்பட்டு 24.10.2019 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன.

**க.து.ந.க.எண்.பி1/1076/2019**

இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s Ponkulali and Co அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. 73,44,526.20 ஆனது 2019-2020ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.61,20,438.50 யுடன் ஒப்பிடுகையில் (+)20.00% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய 25.10.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 08.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | மதிப்பீட்டில் பணியின் தொகை 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | விலைக் குறைப்பு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 18% சேர்த்து |
|---|---|---|---|---|---|
| M/s Ponkulali and Co | 61,20,438.50 | 73,44,526.20 | 67,27,586.00 | (+)9.92% அதிகம் | 79,38,551.48 |

மேற்கண்ட விவரங்கள் 08.11.2019 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (TENDER SCRUTINY COMMITTEE) சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கான பணித்தொகை *GST* தவிர்த்து ரூ.67,27,586.00 ஆகவும், ஒப்ப மொத்த தொகையான ரூ. 79,38,551.48 (சரக்கு மற்றும் சேவை வரி 18%) க்கான ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை M/s Ponkulali and Co அவர்களுக்கு வழங்கலாம் என ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த M/s Ponkulali and Co அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ.67,27,586/- (ரூபாய் அறுபத்து ஏழு இலட்சத்து இருபத்து ஏழாயிரத்து ஐநூற்று எண்பத்து ஆறு மட்டும்) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 18% தொகை ரூ.12,10,965.48 ஆக மொத்தம் ரூ.79,38,551.48க்கு (ரூபாய் எழுபத்து ஒன்பது இலட்சத்து முப்பத்து எட்டாயிரத்து ஐநூற்று ஐம்பத்து ஒன்று மற்றும் நாற்பத்து எட்டு பைசா மட்டும்), 2019-2020ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலின்படி (+)9.92% அதிகமான விழுக்காட்டிற்கு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கவும், ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *31.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".**

******

**க.து.ந.க.எண்.பி1/1395/2019**

**தீர்மான எண்.857/2019** **நாள்:31-12-2019**

**ஒப்பம் - கட்டடத்துறை – மண்டலம் 15 வார்டு 196 ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார மருத்துவமனையில் (100 beds) Fire Fighting Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணிக்காக திருவாளர்கள் Thomas Iyadurai Infrastructure pvt ltd அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-15, வார்டு-196 ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள நகர்புற சமுதாய சுகாதார மருத்துவமனையில் (100 beds) Fire Fighting Systems அமைத்து ஒரு வருட காலத்திற்கு பராமரிப்பு பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 442/2019 நாள் 08.08.2019 |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2019 -2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 84,30,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 69,39,322.50 |
| | (ஆ) எதிர்பாரா செலவு | ரூ. 1,72,206.22 |
| | (இ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 69,393.23 |
| | (உ) சரக்கு மற்றும் சேவை வரி 18% | ரூ. 12,49,078.05 |
| | மொத்தம் | ரூ. **84,30,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 29.08.2019<br>2. இந்தியன் எக்ஸ்பிரஸ் 29.08.2019<br>3. தின செய்தி நாள் 29.08.2019 |
| 7 | ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 16.09.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் (NUHM) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 17.09.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள்/திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2019-2020 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | M/s Yogalakshmi Construction | 69,39,322.50 | 97,15,051.50 | (+) 40.00% அதிகம் |
| 2 | M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd | 69,39,322.50 | 93,68,085.38 | (+) 35.00% அதிகம் |

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 16.09.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்ப தகுதியான பெருநகர சென்னை

**க.து.ந.க.எண்.பி1/1395/2019**

மாநகராட்சியில் கட்டடத்துறையில் வகுப்பு – 1 ஒப்பந்ததாராக பதிவு செய்திருத்தல் வேண்டும், இந்த ஒப்ப நிபந்தனை சரிபார்க்கப்பட்டு 17.09.2019 அன்று ஒப்பங்கள் திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd அவர்களின் ஒப்பத் தொகையான ரூ. 93,68,085.38 ஆனது 2019-2020 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 69,39,322.50 யுடன் ஒப்பிடுகையில் (+)35.00% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய 18.09.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 08.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்

| ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள் | மதிப்பீட்டில் பணியின் தொகை 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலை | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | விலைக் குறைப்பு பின் ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை | 2019-2020 ஆம் ஆண்டின் அலுவலக விலையுடன் ஒப்பிடுகையில் சதவீதம் | ஒப்பந்ததாரர் அளித்த இறுதி தொகை GST 18% சேர்த்து |
|---|---|---|---|---|---|
| M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd | 69,39,322.50 | 93,68,085.38 | 76,31,172.95 | (+)9.97% அதிகம் | 90,04,784.08 |

மேற்கண்ட விவரங்கள் .11.2019 அன்று நடைபெற்ற ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவிற்கு (TENDER SCRUTINY COMMITTEE) சமர்ப்பிக்கப்பட்டது. இப்பணிக்கான பணித்தொகை *GST* தவிர்த்து ரூ. 76,31,172.95 ஆகவும், ஒப்ப மொத்த தொகையான ரூ. 90,04,784.08 (சரக்கு மற்றும் சேவை வரி 18%) க்கான ஒப்பத்தை ஏற்று, இவ்வொப்பப்பணியை M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd அவர்களுக்கு வழங்கலாம் என ஒப்பங்கள் கூர்ந்தாய்வு குழுவின் மூலம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பம் அளித்த M/s Thomas Iyadurai Infrastructure pvt ltd அவர்களின் ஒப்பத் பணித்தொகை ரூ. 76,31,172.95 (ரூபாய் எழுபத்து ஆறு இலட்சத்து மூப்பத்து ஒராயிரத்து நூற்று எழுபத்து இரண்டு மற்றும் தொண்ணூற்று ஐந்து பைசா மட்டும்) மற்றும் சரக்கு மற்றும் சேவை வரி 18% தொகை ரூ.13,73,611.13 ஆக மொத்தம் ரூ.90,04,784.08க்கு (ரூபாய் தொண்ணூறு இலட்சத்து நான்காயிரத்து எழுநூற்று எண்பத்து நான்கு மற்றும் எட்டு பைசா மட்டும்), 2019-2020ம் ஆண்டின் அலுவலக மதிப்பீட்டின் விலைப்பட்டியலின்படி (+)9.97% அதிகமான விழுக்காட்டிற்கு பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கவும், ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *31.12.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

**“ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது”.**

******

**க.து.ந.க.எண்.பி1/2722/1/2019**

**தீர்மான எண்.858/2019** **நாள்:31-12-2019**

**ஒப்பம் - கட்டடத்துறை „ கட்டடத்துறை „ மண்டலம்- 3, வார்டு - 28ல், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் (ஆவின் பால் பண்ணை எதிரில்), மண்டலம் -4 வார்டு 43ல் தொற்று நோய் மருத்துவமனை வளாகத்திற்குள், மண்டலம்- 4, வார்டு-45ல் இளங்கோ நகர் (நகர்புற ஆரம்ப சுகாதார மையம் எதிரில்), மண்டலம்-7, வார்டு-86ல் மண்ணூர்பேட்டை, மாணிக்கம் பிள்ளை தெரு (மெட்ரோ வாட்டர் பம்பிங் ஸ்டேஷன் எதிரில்) ஆகிய இடங்களில் இரவு காப்பகங்கள் கட்டும் பணிக்காக திருவாளர்கள் K.S.K Engineers அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.**

| | | |
|---|---|---|
| 1 | பணியின் பெயர் | மண்டலம்-3, வார்டு-28ல், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான இடம் (ஆவின் பால் பண்ணை எதிரில்), மண்டலம் -4 வார்டு-43ல் தொற்று நோய் மருத்துவமனை வளாகத்திற்குள், மண்டலம்-4, வார்டு-45ல் இளங்கோ நகர் (நகர்புற ஆரம்ப சுகாதார மையம் எதிரில்), மண்டலம்-7, வார்டு-86ல் மண்ணூர்பேட்டை, மாணிக்கம் பிள்ளை தெரு (மெட்ரோ வாட்டர் பம்பிங் ஸ்டேஷன் எதிரில்) ஆகிய இடங்களில் இரவு காப்பகங்கள் கட்டும் பணி. |
| 2 | மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம் | சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண்கள் 911/2018 நாள்.12.11.2018, 036/2019, நாள். 29.01.2019, 419/2019 நாள் 29.07.2019 மற்றும் 469/2019 நாள்.19.08.2019. |
| 3 | எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம் | சுகாதாரத்துறை |
| 4 | மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது | 2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி |
| 5 | மதிப்பீட்டின் தொகை | ரூ. 2,89,60,000.00 |
| | (அ) கட்டுமான பணி செலவு | ரூ 2,50,53,408.38 |
| | (ஈ) எதிர்பாரா செலவு | ரூ. 4,49,648.55 |
| | (ஊ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1% | ரூ. 2,50,534.07 |
| | (எ) மின்சாரம் மற்றும் பிற இனங்கள் | ரூ. 2,00,000.00 |
| | (ஏ) சரக்கு மற்றும் சேவை வரி 12% | ரூ. 30,06,409.00 |
| | மொத்தம் | ரூ. **2,89,60,000.00** |
| 6 | எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள் | 1. சென்னை மாநகராட்சி செய்தி மலர் 03.10.2019<br>2. இந்தியன் எக்ஸ்பிரஸ் 02.10.2019<br>3. இந்து தமிழ் நாளிதழ் நாள் 02.10.2019 |
| 7 | ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக் கொள்வதற்கான கடைசி நாள் | 04.11.2019 |
| 8 | நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண் | அரசு மானியம் (NULM) |
| 9 | ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 30 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா? | ஆம் |
| 10 | எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன | இரண்டு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பம் பெறப்பட்டுள்ளது |

**க.து.ந.க.எண்.பி1/2722/1/2019**

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 04.11.2019 அன்று இரண்டு ஒப்பங்கள் (e-Tender) மூலமாக பெறப்பட்டன. ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

| வ எண் | ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி | பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ) | ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ) | 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைப்படி மதிப்பீட்டு தொகையுடன் ஒப்பிடுகையில் |
|---|---|---|---|---|
| 1 | M/s RTI Foundation | 2,49,53,514.20 | 3,24,39,603.56 | (+) 30.00% அதிகம் |
| 2 | M/s K.S.K. Engineers | 2,49,53,514.20 | 3,11,91,926.50 | (+) 25.00% அதிகம் |

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் தொழில்நுட்ப ஆவணங்கள் (Technical Bid) 07.11.2019 அன்று பரிசீலிக்கப்பட்டு, மேற்கண்ட இரு ஒப்பந்ததாரர்களும் தொழில் நுட்ப ஒப்ப *i)* ஒப்பந்ததாரர் இதே போன்ற பணிகளில் அனுபவமும் ஆகஸ்ட் 2019 வரை முடிவுற்ற கடந்த 5 வருடங்களில் குறைந்தபட்சம் இரண்டு முடிவுற்ற பணிகளின் மதிப்பு பணியின் மதிப்பீட்டு தொகையில் 50%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும். *ii)* கட்டிடங்கள் கட்டும் பணிகள் மேற்கொண்டு இருத்தல் வேண்டும் *(iii)* ஒப்பந்ததாரர் மார்ச் 31 – 2019 வரை முடிவுற்ற கடந்த மூன்று ஆண்டுகளில் சராசரி ஆண்டு வருமானம் *(Annual Turnover)* பணி மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக இருத்தல் வேண்டும் மற்றும் *iv)* தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் மற்றும் திட்டமிடப்பட்ட வங்கியிடமிருந்து மிகைப்பற்று *(over draft)* மற்றும் கடன் வசதி பெற்று சமர்ப்பிக்க வேண்டும். ஒப்பத்தில் பணியின் மதிப்பீட்டு தொகையில் 30%க்கு குறையாமல் இருத்தல் வேண்டும் ஆகியவற்றிற்கான ஆவணங்கள் சமர்ப்பித்துள்ளார்கள்.

தகுதி வாய்ந்தவர்களின் ஒப்ப விலைப்புள்ளி (Price Bid) 09.11.2019 அன்று திறக்கப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s K.S.K. Engineers அவர்களின் ஒப்பத் தொகையான ரூ.3,11,91,926.50 ஆனது இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ.2,49,53,541.20 யுடன் ஒப்பிடுகையில் (+)25.00% அதிகமான ஒப்பத்தொகை ஆகும். எனவே ஒப்பந்ததாரரை விலைக்குறைப்பு செய்ய 09.11.2019 அன்று கோரப்பட்டது.

ஒப்பந்ததாரர் விலைக்குறைப்பிற்காக 11.11.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் கீழ்க்கண்டவாறு விலை குறைப்பு செய்துள்ளார்.

